44வது ஆண்டு அறிக்கை

(2014 - 2015)

ஏப்ரல் 2014 - மார்ச் 2015

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

44 வது ஆண்டு அறிக்கை

(2014 - 2015)

தொகுப்பு

முனைவர் மு. சந்திரசேகரன், பிஎச். டி.,
முனைவர் சு. முரளி கிருஷ்ணசாமி, பிஎச். டி.,
முனைவர் ந. சக்திவேல், பிஎச். டி.,

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். கு. இராமசாமி
துணைவேந்தர்

அணிந்துரை

வேளாண்மையின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சி. அனைத்துத் தொழில்களுக்கும் தேவையான மூலப் பொருட்கள் வேளாண்மையைச் சார்ந்தே அமையப் பெற்றுள்ளன. வேளாண் உற்பத்தியைப் பெருக்கினால் நாட்டின் பொருளாதாரம் சீரோங்கி நிற்கும். மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் தேசிய அளவில் ஒப்பிடுகையில் 2013-2014ஆம் ஆண்டில் தமிழ்நாடு 14.34 விழுக்காடு வளர்ச்சியடைந்து இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளது.

உழவர் பெருமக்களின் வாழ்வாதாரம் மேன்மையுற தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், நிலவள மேம்பாடு, இடுபொருட்கள் மேலாண்மை, பாசன நீர் மேலாண்மை, நவீன பயிர் உற்பத்தித் தொழில் நுட்பங்கள், அங்கக வேளாண்மை, ஒருங்கிணைந்த பண்ணையம், வேளாண்மையில் உயிரி மற்றும் நானோ தொழில் நுட்பத்தினை கையாளுதல், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை போன்ற தொழில் நுட்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

மேலும், ஊரக இளைஞர்களை வேளாண்மையில் ஈர்த்துத் தக்கவைக்கும் முகத்தான் இயந்திரமயமாக்குதல், நவீன தோட்டக்கலைத் தொழில் நுட்பங்கள், மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் சாகுபடி முறைகள், திசு வளர்ப்பு மற்றும் பசுமைக் குடில்களில் பயிர் சாகுபடி முறைகள் போன்றவை ஊக்கப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இவை பயிற்சிகள் மூலமாகவும் மற்றும் தொலைதூரக் கல்வி இயக்கக்கத்தின் சான்றிதழ் பாடங்கள் மூலமாகவும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

கடந்த காலத்தோடு ஒப்பிடுகையில் சமீப ஆண்டுகளாக வேளாண்மைக் கல்வி பயில விண்ணப்பங்கள் அதிகம் பெறப்படுவதால் தமிழக அரசின் ஒப்புதலுடன் மேலும், மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூரிலும், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையிலும், தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையிலும் 2014 ஆம் ஆண்டு புதிதாக நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதனால், வேளாண்மை சார்ந்த தொழில் நுட்பங்களில் திறன் வாய்ந்த மனித வள மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்.

மாடித்தோட்டம், வீட்டு காய்கறி தோட்டம் அமைக்க எளிய முறையில் காய்கறி மற்றும் மலர்ப் பயிர்கள் விதைகளை விவசாயிகள் பெறுவதற்கு வசதி செய்யும் வகையில் தானியங்கி விதை விற்பனை இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மக்களிடையே சிறுதானியங்கள் உபயோகம் அதிகரித்து வருவதால் சிறுதானியங்கள் குறித்த ஆராய்ச்சியைத் தீவிரப்படுத்த திருவண்ணாமலை மாவட்டம் அத்தியேந்தலில் புதிதாக சிறுதானிய மகத்துவமையம் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

இந்த 2014-15 ஆம் ஆண்டிற்கான 44வது ஆண்டு அறிக்கை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஓர் ஆண்டுக்கான செயல்பாடுகள், சாதனைகள் ஆகியவற்றைத் தொகுத்து அளிக்கிறது. இந்த ஆண்டறிக்கை வேளாண்மையைச் சார்ந்த பலதரப்பட்ட மக்களுக்கும் பல்கலைக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து அறிந்து கொள்ளும் ஆவணமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இவ்வாண்டு அறிக்கையினை உரிய காலத்தில் வெளியிட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

(கு. இராமசாமி)
துணைவேந்தர்

முகவுரை

முனைவர். **மு. சந்திரசேகரன்**
இயக்குனர் (பொறுப்பு),
திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

இந்திய மக்கள் தொகையில் ஆறு விழுக்காடு தமிழ்நாட்டில் வசித்து வருகின்றனர். அனைவருக்கும் உண்ண உணவும் உடுத்த உடையும் உறையுளும் மட்டுமல்லாது ஊட்டமிகு உணவினை குறைவிலாது வழங்க வேளாண் உற்பத்தியை மட்டுமல்லாது புரதம் மிகுந்த பயறு வகைப் பயிர்கள் உற்பத்தியையும் அதிகரிப்பது அவசியமானதாகும்.

வேளாண்மையில் விதைப்பு முதல் அறுவடை வரை விஞ்ஞானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளும் போது உற்பத்தி இருமடங்காவது திண்ணம். காலத்தின் மாறுபாடுகளைக் கருத்தில் கொண்டு பருவத்தே பரிந்துரைக்கப்பட்ட பயிர்களைப் பயிரிடுதல் பயிருக்குத் தேவையான இடுபொருட்களை இடுதல், பாசன முறைகளைப் பின்பற்றுதல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைபிடித்தல், இயன்றவரை இயந்திரங்களை உபயோகித்தல் ஆகியவை உற்பத்தியைப் பெருக்க இன்றியமையாதவை. ஆயினும், வேளாண் தொழிலில் உற்பத்தியைப் பெருக்குவதால் மட்டுமே இலாபம் அதிகமாகக் கிடைப்பதில்லை. உற்பத்திப் பொருட்களை, தரம் பிரித்தல், சுத்தம் செய்தல், தக்க முறையில் சந்தைப் படுத்துதல், மதிப்புக் கூட்டுதல் மற்றும் ஏற்றுமதி போன்றவை அதிக வருமானத்தை பெற வழிவகுக்கும்.

ஆகவே, உழவர் பெருமக்கள் வேளாண் கால நிலை முன்னறிவிப்புகளின் அடிப்படையில் பயிர் பராமரிப்பினை மேற்கொண்டு அறுவடை பின் சார் தொழில் நுட்பங்கள், மதிப்புக் கூட்டுதல் மற்றும் சந்தை நிலவரங்களை அறிந்து வேளாண்மையையும் வேளாண் விளை பொருள் விற்பனையையும் மேற்கொண்டு அதிகப் பயன் பெற வேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 44வது ஆண்டறிக்கை 2014-15 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மைக் கல்வி, வேளாண்மை ஆராய்ச்சி, வேளாண்மை விரிவாக்கக் கல்வி மற்றும் பிற செயல்பாடுகளைத் தொகுத்து அளிப்பதுடன், வெளியிடப்பட்ட புதிய இரகங்கள், தொழில் நுட்பங்கள், வேளாண் கருவிகள் குறித்த விபரங்களின் பதிவுகள் கொண்ட ஆவணமாகவும் திகழ்கிறது.

இந்த ஆண்டறிக்கையைத் தொகுப்பதற்கான அனைத்துத் தகவல்களையும் பகிர்ந்து கொண்ட பல்கலைக் கழக அதிகாரிகள், துறைத் தலைவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் பணியாளர்களுக்கு இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

(மு. சந்திரசேகரன்)
இயக்குநர் (பொறுப்பு)

பொருளடக்கம்

வ.எண்	தலைப்பு	பக்கம்
1.	முன்னுரை	1
2.	பல்கலைக்கழக நிர்வாகம்	9
3.	கல்வி	39
	3.1 முதுநிலைக் கல்வி	39
	3.2. இளநிலைக் கல்வி	50
	3.3. மாணவர் நல இயக்ககம்	110
	3.4. புத்தகப் பதிப்புகள் மற்றும் மக்கள் தொடர்பு இயக்ககம்	119
	3.5. திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம்	123
	3.6. தேர்வுக் கட்டுப்பாட்டகம்	127
4.	ஆராய்ச்சி	135
	4.1. புதிய பயிர் இரகங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள்	135
	4.2. முக்கிய ஆராய்ச்சி முடிவுகள்	139
	4.3. பயிர் மேலாண்மை இயக்குனரகம்	166
	4.4. தாவர மூலக்கூறு உயரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மையம்	181
	4.5. இயற்கைவள மேலாண்மை இயக்ககம்	185
	4.6. நீர் நுட்ப மையம்	200
	4.7. பயிர் பாதுகாப்பு இயக்ககம்	205
	4.8. தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் இயக்ககம்	214
	4.9. வேளாண்மைப் பொறியியல்	230
	4.10. வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்	239
	4.11. வனவியல்	253
	4.12. மனையியல்	256
	4.13. விதை மையம்	265
	4.14. திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககம்	272
	4.15. வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம்	273
5.	விரிவாக்கக் கல்வி இயக்ககம்	283
6.	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துறைகள் தயாரித்து விவசாயிகள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு வினியோகம் செய்த இடுபொருட்கள்	311
7.	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், துறைகள் மற்றும் விஞ்ஞானிகள் பெற்ற விருதுகள்	331
8.	நிதி ஆதாரங்கள்	339

	இணைப்புகள்	341
I	வெளியீடுகள்	341
II	கட்டுமானப் பணிகள்	427
III	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்	433

முன்னுரை

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் மொத்த மாநிலங்களின் உள்நாட்டு உற்பத்தி பங்கீட்டில் தமிழ்நாடு 8.4 விழுக்காட்டினை எட்டி மஹராஷ்டிரா மாநிலத்துக்கு அடுத்து இரண்டாம் நிலையில் உள்ளது. இதனை மேலும், அதிகரிக்கச் செய்து 11 விழுக்காடு என்ற நிலைக்கு எடுத்துச் செல்வதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழகம் செயல்பட்டு வருகின்றது. வறட்சியின் காரணமாக 2012-13 ஆம் ஆண்டில் வேளாண்மையின் வளர்ச்சி (-) 13.04 விழுக்காடாக இருந்த நிலை மாறி 2013-14 ஆம் ஆண்டு (+) 8.22 விழுக்காடு என்ற நிலையை எட்டும் அளவிற்கு செயல் பட்டிருப்பது ஊக்கமளிப்பதாக உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், வேளாண்மைக் கல்வி, வேளாண்மை ஆராய்ச்சி, வேளாண்மை விரிவாக்கம், வேளாண்மை வணிக மேம்பாடு, வேளாண்மையில் இளைஞர்களை ஈர்த்து தக்க வைக்கும் முகத்தான் திறந்த வெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவது மற்றும் வேளாண்மைக் கொள்கை ஆதரவு ஆகிய ஆறு பெரும் பணிகளைக் மேற்கொள்வதன் மூலம் உணவு உற்பத்திக்கான சவால்களை எதிர் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

வேளாண் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 'தேசிய அளவில் மிகச் சிறந்த வேளாண் பல்கலைக் கழகங்களில் ஒன்று' என்ற உயர்ந்த தகுதியினை அடைந்துள்ளது. வளர்ந்து வரும் அறிவியல் தேவையைக் கருத்தில் கொண்டும், மாறி வரும் சூழலுக்கேற்பவும் வேளாண்மைக் கல்வியினை வடிவமைத்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தனது 14 உறுப்புக் கல்லூரிகளிலும், 14 சார்பு கல்லூரிகளின் மூலமாகவும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் தற்பொழுது 13 இளமறிவியல், 35 மூதறிவியல் மற்றும் 26 முனைவர், நான்கு ஒருங்கிணைந்த முனைவர் பட்டப்படிப்புகளும் 27 பகுதி நேர முனைவர் பட்டப்படிப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2014-15 ஆம் ஆண்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில், இளநிலைப் பட்டப்படிப்பில் 1352, முதுநிலைப் பட்டப்படிப்பில் 457 மற்றும் 138 மாணவர்கள் முனைவர் பட்டப் படிப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், கணினி வழி கல்வி கற்றல் மற்றும் தேர்வு முறைகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்று புதிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், 2014-15 ஆம் ஆண்டு, ரூ. 150 கோடி திட்ட மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூரிலும், தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையிலும், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையிலும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டம் குழுமூரில் உள்ள வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், ஒரு திறன் மேம்பாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது.

மாணவர் நலம் மற்றும் பணியமர்த்தல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வேலைவாய்ப்பு ஆலோசனை மற்றும் பணியமர்வு கேந்திரமாக விளங்கும் மாணவர் நல இயக்ககம், மாணவர்கள் வேளாண்மைத் தொழில் நிறுவனங்கள், விதை உற்பத்தி நிறுவனங்கள், உணவுத் தொழிற்சாலைகள், உரத்தொழிற்சாலைகள், அரசு சாரா நிறுவனங்கள், தோட்டக்கலை நிறுவனங்கள் மற்றும் வங்கிப் பணிகளில் பணியமர்த்தப் பட்டுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைப்பு ஒன்றினை மேம்படுத்த அதி நவீன கருத்துப் பரிமாற்ற ஆய்வகத்தையும் இவ்வியக்ககம் தொடங்கியுள்ளது.

இவ்வியக்ககத்தின் மூலம் 2014-15 ஆம் ஆண்டில் 438 மாணவர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர். மேலும், 89 மாணவர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களிலும், 200 மாணவர்கள் மேற்படிப்பிற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலும் சேர்ந்துள்ளனர். சுயமாக வேளாண் சார்ந்த தொழில் முனைவோராக 46 மாணவர்கள் மற்றும் 12 மாணவர்கள் இளநிலை ஆராய்ச்சியாளராகவும் இரண்டு மாணவர்கள் மேற்படிப்பிற்காக வெளிநாட்டிற்கும் சென்றுள்ளனர்.

மேலைநாடுகளில் மேற்படிப்பு மேற்கொள்ளத் தேவையான ஆங்கில மொழியை அயல் மொழியாகக் கொண்டவர்களுக்கான தேர்வு (TOEFL), பட்டதாரிகளுக்கான பதிவுத் தேர்வு (GRE) மற்றும் சர்வதேச ஆங்கில மொழித் தேர்வு முறை (IELTS) ஆகியவற்றிற்கான பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2014-15 ஆம் ஆண்டில் 114 மாணவர்கள் தமிழ்நாடு இந்திய ஆட்சி பணி, பொதுப் பணி சேவை ஆணையம், பொதுத்திறனுக்கான தேர்வு, வங்கி பணி ஆகியவற்றிற்கான பயிற்சி வகுப்புகளில் சேர்ந்துள்ளனர்.

தொலைதூரக் கல்வி

இப்பல்கலைக் கழகத்தில் இயங்கும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககம், 2014-15 ஆம் ஆண்டில், ஐந்து முதுநிலைப் பட்டயப் படிப்புகள், மூன்று முதுநிலைப் பட்டப் படிப்புகள், ஒரு இளநிலைப் பட்டப் படிப்பு மற்றும் பதினாறு சான்றிதழ் படிப்பு ஆகிய பாடங்களை வழங்கி வருகிறது.

பல்கலைக் கழக நூலகம்

பல்கலைக் கழக நூலகம், பயனாளிகளின் தேவையைக் கருதி பல இணையதள அறிவியல் இதழ்களையும் தகவல் தொகுப்புகளையும் தருவித்து தரவல்ல 'செரா' கூட்டிணைப்பு வேளாண் ஆராய்ச்சி இதழ்கள் மற்றும் 'கிரிஷிபிரபா' இணைய தள ஆய்வறிக்கைகளின் தொகுப்பு, ஆகியவற்றிற்கும் பதிவு செய்து தகவல்களை அணுகுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. தற்சமயம், நூலகத்தில் 1,78,281 புத்தகங்கள், ஆராய்ச்சி இதழ்களின் பல்வேறு ஆண்டுதொகுதிகள் உள்ளன. வேளாண்மையில், இ-இதழ்கள்' (3425), இணையதள அறிவியல் இதழ்கள் தொகுப்புகளான் www.indiastat.com, ww.dlnet.nic.in and www.commodityindia. com. e-books, www.sciencedirect.com, www. springer.com/ebooks, www.cabi.org, www.cabi.org/cpc மற்றும் www.cabit.org/fc. ஆகியவற்றை மொத்தம், 61506 பேர் பயன்படுத்தி உள்ளனர். இதில், 1,091 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். பல்கலைக் கழக நூலகத்தில் 1,20,777 புத்தகங்கள், 51,431

பல்வேறு ஆண்டுகளுக்கான ஆராய்ச்சி இதழ்களின் தொகுதிகள், 5,985 ஆய்வு அறிக்கைகள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான புத்தக வங்கிப் புத்தகங்கள் 588 ஆகியன உள்ளன.

வேளாண் ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 14 கல்லூரிகள், 38 ஆராய்ச்சி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், 14 வேளாண் அறிவியல் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட பண்ணை செயல் விளக்கத் திடல்கள், தொழில்நுட்ப மதிப்பீடு, செம்மைப் படுத்தும் ஆய்வுகளின் முடிவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பின்வரும் பயிர் இரகங்களையும், பண்ணைக் கருவிகளையும் உழவர்கள் பயன்பாட்டிற்காக 2014-15 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. அவை வருமாறு (அ) ஆறு பயிர் இரகங்கள் மற்றும் ஒரு வீரிய ஒட்டு இரகத் தென்னை (1) நெல் டிகேஎம் 13, (2) நெல் சி ஆர் 1009 சப் 1, (3) நெல் எம்டியு 6, (4) சோளம் கே 12, (5) கோதுமை கோடபிள்யு 3 (6) கொத்தவரை எம்டியு 1 மற்றும் தென்னை வீரிய ஒட்டு இரகம் வி.பி.எம். 5 (ஆ) இரண்டு பண்ணை கருவிகள், (1) டிராக்டரால் இயங்கும் மஞ்சள் கரணை விதைக்கும் கருவி மற்றும் (2) டிராக்டரால் இழுக்கப்படும் இரு சக்கர டிரெய்லரை திரவ ஆற்றலால் நிறுத்தும் கருவி.

2014-15ஆம் ஆண்டு, உணவுப்பதனிடுதல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டில் தொடங்கப்பட்டுள்ளது.

உயர் விளைச்சலுக்கான புதிய சாகுபடி தொழில் நுட்பங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான ஆய்வு முடிவுகள் வருமாறு:

நெல்

- நெல் களைக்கட்டுப்பாட்டில் பயன் படுத்தப்பட்ட புதிய மூலக்கூறு களைக்கொல்லிகளில் களைமுளைக்கும் முன் அல்லது முளைத்தபின் பயன்படுத்தப்படும் புதிய பென்சலல்பியூரான் மீத்தைல் தனியாகவோ அல்லது பிரெட்டிலாகுளோர் உடன் பயன்படுத்துதலில் நெல்லுக்கு அடுத்த பச்சை பயரில் எந்த எஞ்சிய நஞ்சும் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.
- நேரடி நெல் விதைப்பில் களைகள் முளைப்பதற்கு முன் தெளிக்கப்பட்ட பெண்டிமெத்தலின் களைக்கொல்லியைத் தொடர்ந்து களை முளைத்த பின் பிஸ்பைரிபேக் சோடியம் தெளித்தல், விதைத்த 45வது நாள் கை களை எடுத்ததில் களைகளின் அடர்த்தி மற்றும் எடை குறைவதோடு களைக் கட்டுப்பாட்டு திறன் அதிகரித்து காணப்பட்டுள்ளது.
- காவிரி புதுபாசன பகுதிகளில் பயிர் உற்பத்தித் திறன், நீர் உற்பத்தித் திறன் மற்றும் அதிக இலாபம் தரக்கூடிய பயிர் திட்டங்களை ஆய்வுச் செய்ததில் நெல் மகசூலுக்கு இணையான குறியீட்டில் கணக்கிட்ட வகையில் பின்வரும் இரண்டு பயிர் திட்டங்கள் (1) மக்காச்சோளம் + உளுந்து – நெல் - உளுந்து + துவரை (ஆண்டுக்கு எக்டருக்கு 16509 கிலோ நெல்லுக்கு இணையான மகசூல், ஒரு எக்டர் மில்லி மீட்டர் நீருக்கு 8.85 கிலோ நெல்லுக்கு இணையான விளைச்சல் மற்றும் எக்டருக்கு ரூபாய் 90513), (2) சூரியகாந்தி – நெல் - பச்சைப்பயறு –

துவரை (ஆண்டுக்கு எக்டருக்கு 14256 கிலோ நெல்லுக்கு இணையான மகசூல், ஒரு எக்டர் மில்லி மீட்டர் நீருக்கு 7.84 கிலோ நெல்லுக்கு இணையான மகசூல் மற்றும் எக்டருக்கு ரூபாய் 74842) இலாபகரமாக இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

- நெல் - நெல் பயிர் திட்டத்தில் நொய்யல் மண் வகையில் 'திருந்திய நெல் சாகுபடி' திட்டத்தில் வெள்ளைப் பொன்னி இரகத்தில் எக்டருக்கு ஏழு டன், பவானி இரகத்தில் எக்டருக்கு எட்டு டன் மகசூல் என்ற குறிக்கோளுக்கு மண் ஆய்வு - பயிர் - எதிர்ச்செயல் தொடர்பு அளவு திட்டத்தின் படி 90 விழுக்காட்டிற்கு மேல் (எக்டருக்கு 12.5 டன் அங்கக உரங்கள் இடுவதால்) வெள்ளைப் பொன்னியில் எக்டருக்கு 6510 கிலோவும், பவானி இரகத்தில் 7600 கிலோ தானிய விளைச்சலும் கண்டறியப்பட்டுள்ளன.
- ஊட்டச்சத்துக்கள் குறைபாட்டினை முன்னறிவிப்பு செய்ய ஊட்டச்சத்து குறியீட்டு முறையில் அதிகப்படியான சாம்பல் சத்து (எக்டருக்கு 80 கிலோ சாம்பல் சத்து, ஜிப்சம் எக்டருக்கு 500 கிலோ மற்றும் துத்தநாக சல்பேட்டு 25 கிலோ ஆனைமலை மண்ணில் ஏற்பட இருக்கும் சாம்பல், கந்தகம், துத்தநாகக் குறைபாட்டினை தவிர்க்க இட வேண்டும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.
- கோ (ஆர்) 51 இரக நெல்லில் சூடோமோனாஸ் ப்ளுரெசன்ஸ், துத்தநாக சல்பேட் அரை (0.5%) சதக்கரைசலில் 12 மணி நேரம் ஊற வைப்பதால் விதையின் தரம் மேம்படுத்தப்பட்டது. கோ.ஆர்.எச் 4 வீரிய ஒட்டு நெல்லில் விதை முளைப்புத் திறன் 8 விழுக்காடும் நாற்றுக்கள் வீரியம் 27.5 விழுக்காடும் அதிகரித்தது கண்டறியப்பட்டது.
- ஆடுதுறை 38 நெல்லில் கிலோவுக்கு 3 கிராம் என்ற அளவில் ஹாலோ பாலிமர் + கிலோ விதைக்கு பாவிஸ்டின் 2 கிராம் என்ற அளவில் கலந்து விதைநேர்த்தி செய்து சூப்பர் தானிப் பையில் சேகரித்து வைப்பதால் 10 மாதத்திற்கு பிறகு 81 விழுக்காடு முளைப்புத் திறன் அதிகரித்துள்ளது. மற்ற செயல் முறைகளைக் காட்டிலும் முளைப்புத்திறன், வீரியம் மற்றும் டிஹைட் ராஜினேஸ் நொதித்தல் தன்மை அதிகரித்துக்காணப்பட்டன.
- அசோலா உற்பத்தி நவம்பர் - டிசம்பர் மாதங்களில் அதிகரித்துக் காணப்பட்டது. அசோலா பின்னோட்டாவில் அதிக உயிரெடை உற்பத்தி, அதிக கரிமச்சத்து (40.78%) மற்றும் தழைச்சத்து (3.52%) காணப்பட்டன. இது மற்ற இரகங்களைவிட அதிகமாகும்.
- ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை முறையில் எக்டருக்கு ரூபாய் 39,359 நிகர இலாபமும், வரவு-செலவு விகிதாச்சாரம் 1.44 என்ற அளவில் இருந்தது. உழவர்கள் முறையில் எக்டருக்கு ரூபாய் 28477 நிகர இலாபமும் வரவு-செலவு விகிதாச்சாரம் 1.05 என்ற அளவிலும் இருந்தது.
- நெல் தானிய சேமிப்பில் 300 செல்சியஸ் வெப்பத்தில் 3 % பிராணவாயு, 11.5 % கரியமில வாயு நேர்த்தி செய்வதன் மூலம் தானியத்தைத் தாக்கும் பூச்சிகளின் இறப்பு எண்ணிக்கை அதிகமாகவும், சந்ததி உருவாகுதல் குறைந்தும் காணப்பட்டது. இதில் பட்டாம் பூச்சி

வகைகள் வண்டினத்தைக் காட்டிலும் அதிகப் பாதிப்பிற்கு உள்ளானது கண்டறியப்பட்டது.

- நெல்லில் தண்டுத் துளைப்பானால் உண்டாகும் சேதம், பழுப்பு நிலக்கரி எக்டருக்கு 12.5 டன், சிலிகேட்டினை கரைக்கும் பாட்டீரியா நுண்ணுயிர் எக்டருக்கு 2 கிலோ, நடவு நட்ட 25 மற்றும் 45 நாளில் தெளிப்பதால், குறைந்து (7.3%) காணப்பட்டது. இது ஏதுமிடாத வயலில் தண்டுத்துளைப்பானால் ஏற்பட்ட நட்ட 25 ஆம் நாளில் 16.5 விழுக்காடு, 45 ஆம் நாளில் 12.7 விழுக்காடு சேதத்தை காட்டிலும் குறைவானதாகும்.
- நெல்லில் புதிய பூசணக் கொல்லிகளான டிரைப்ளாக்சிஸ்டிரோபின்+டெபுகோனசோல் (ஒருலிட்டர் தண்ணீருக்கு 0.4 கிராம்) மற்றும் பிரோப்பிகோனசோல் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மி.லி) என்ற அளவில் கலந்து 50 % கதிர் புடையில் இருந்து வெளிவரும் சமயம் தெளிப்பதால் பொய் கரிப்பூட்டை நோயைக் (லட்சுமி நோய்) கட்டுப்படுத்த சிறந்த மேலாண்மை முறையாகக் கண்டறியப்பட்டது.

சிறுதானியங்கள்

- ஒரு கிலோ வரகு விதைக்கு 10 கிராம் என்ற அளவில் சூடோமோனாஸ் ப்ளுரெசன்ஸ் விதை நேர்த்தி செய்வதால் உரை அழுகல் நோய் தாக்கம் குறைந்து சேதம் 3.52 விழுக்காடாகவும், வரகு மகசூல் எக்டருக்கு 1702 கிலோ காணப்பட்டது. விதை நேர்த்தி செய்யாத வரகில் சேதம் 14.4 விழுக்காடாகவும் விளைச்சல் எக்டருக்கு 1424 கிலோ எனக் கண்டறியப்பட்டது. விதை நேர்த்தி செய்வதால் வரவு - செலவு விகிதாச்சாரம் 2.01 என கண்டறியப்பட்டது.

பல்கலைக் கழகத்தின் வணிகம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைக் காப்புத்துறை, காப்புரிமை பெறுவதற்காக (1) வெங்காய விதை சுத்திகரிப்புக் கருவி, (2) வெங்காய அறுவடைக்கு முன், அறுவடை சமயம் மற்றும் முன் சுத்திகரிப்புக் கருவி, இவற்றுடன் (3) மூலிகை வடிசாறு விநியோக இயந்திரம் ஆகியவற்றை 2014-15 ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ளது.

வேளாண் விரிவாக்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் பதினான்கு வேளாண் அறிவியல் நிலையங்கள் மூலம், தொழில்நுட்பப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொத்தம் 774 பண்ணை வழி ஆய்வுகள், புதியதாக வெளியிடப்பட்ட இரகங்கள் மற்றும் தொழில் நுட்பங்களில் 348 முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. மேலும், 396 பயிற்சிகள் விரிவாக்க அலுவலர்கள், கிராமப்புற இளைஞர்கள், சுய உதவி குழுக்களுக்கும் 2014-15 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டன.

வேளாண் அறிவியல் நிலையங்கள் முன்னோடி உழவர்களுக்கு பயிற்சிகள் அளித்து மற்ற உழவர்களுக்கு வேளாண் தொழில் நுட்பங்களைப் பரவலாக்கம் செய்து வருகின்றன. உழவர்களின் திறமை குறித்த தரவுத் தளம் பின்வரும் இனங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. வேளாண் அறிவியல் நிலையத்தால், அங்கீகரிக்கப்பட்ட வேளாண்தொழில்

முனைவோர்கள் - தொழில் முனைவோருக்கான தகுதிகள் உடைய உழவர்கள் கண்டறியப்பட்டு, வேளாண் சார்ந்த தொழில் நிறுவுதல், அபிவிருத்தி, சந்தைப்படுத்துதல் போன்ற ஆலோசனைகளை வழங்க ஆயத்தப்படுத்தப்படுகின்றனர்.

2. வேளாண் அறிவியல் நிலையத்தால், அங்கீகரிக்கப்பட்ட 'உழவர் ஆசிரியர்கள்' - வேளாண்மையில் நல்ல அனுபவம் மற்றும் தகவல் பரிமாற்றத்திறன் கொண்ட உழவர்களைக் கண்டறிந்து - துணை-வேளாண் அணி மாவட்டத்திலுள்ள மற்ற உழவர்களுக்கு திறன் மற்றும் அறிவு பரிமாற்றத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

3. வேளாண் அறிவியல் நிலையத்தால், அங்கீகரிக்கப்பட்டவிதைஉற்பத்தியாளர்கள் - உழவர்கள் தேர்வு செய்யப்பட்டு வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளின் நேரடி பார்வையில் விதை உற்பத்திச் செய்யப்பட்டு, விதை உற்பத்தியாளர்களாக பயிற்சி கொடுக்கப்படுகின்றது.

4. வேளாண் அறிவியல் நிலையத்தால், அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த வேளாண் மாதிரி பண்ணை உழவர்கள் - ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்த உழவர்கள் தகவல் ஆவணம் தயாரிக்கப்பட்டு, மற்ற ஒருங்கிணைந்த பண்ணையம் அமைக்க விரும்பும் உழவர்கள் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற வழிவகை செய்யபட்டுள்ளது.

தேசிய அளவிலான காலநிலை சார்ந்த வேளாண்மைத் திட்டம் (நிக்ரா) விழுப்புரம், நாகப்பட்டினம், இராமநாதபுரம் மாவட்ட வேளாண் அறிவியல் நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காலநிலை மற்றும் பருவத்திறக்கேற்ற வேளாண் உத்திகளை எவ்வாறு உழவர்கள் கடைபிடிக்க வேண்டும் என்பதை அளித்து வருகின்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இணையதளம், தமிழ், ஆங்கிலத்தில் பல்வேறு ஊடகங்களை உள்ளடக்கிய சுமார் 7 இலட்சம் பக்கங்களைக் கொண்டுள்ளது. இது வேளாண் விரிவாக்க அலுவலர்கள், உழவர்கள் மற்றும் பல தரப்பினரின் பயன்பாட்டிற்காக செயல்பட்டு வருகின்றது. இவ்விணையதளத்தினை 2014-15 ஆம் ஆண்டு 14.36 இலட்சம் பார்வையாளர்கள் பயன்படுத்தியுள்ளனர். தினசரி பார்வையாளர்கள் எண்ணிக்கை 4000 ஆகும்.

கல்வி ஊடக மையம், பல்கலைக்கழகத்தின் முக்கிய நிகழ்வுகளை காணொளிப் படங்களாக பதிவு செய்து வருகின்றது. 557 காணொளி நிகழ்ச்சிகள் 2014-15 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டன. சென்னை தூர்தர்சன் கேந்திரத்தின் வாயிலாக 252 நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.

தென் மண்டல வேளாண் பெருவிழா 2015, கோயம்புத்தூர் பல்கலைக்கழக வளாகத்தில் 06.01.2015 முதல் 09.01.2015 வரை நான்கு நாட்களுக்கு நடத்தப்பட்டது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரபிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா ஆகிய ஐந்து தென்மாநிலங்களுடன், புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 4000 ஆயிரம் உழவர்கள் இவ்விழாவில் பங்கேற்றனர்.

மண்டல கருத்துக்காட்சி, 'தானியங்கள், சிறுதானியங்கள், பயறு வகைப் பயிர்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளில் உணவு பதனிடுதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல்' என்ற தலைப்பில் மதுரையில் 2015 சனவரி மாதம் 23 முதல் 25 ஆம் தேதி வரை மதுரை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வேளாண் விற்பனைத் துறை மற்றும் இந்திய வர்த்தக சங்கம் இணைந்து நடத்தப்பட்டது. இவ்விழாவில் தமிழகம் முழுவதும் உள்ள உழவர்கள் பங்கு கொண்டனர்.

வானிலை சார்ந்த தொழில் நுட்பப் பரிந்துரைகள்

வானிலை முன்னறிவிப்பு அடிப்படையில் சாகுபடி சம்பந்தமான முடிவுகள் மேற்கொள்வதற்காக, வட்டார அளவில் மத்திய கால (அடுத்த நான்கு நாட்களுக்கான) முன்னறிவிப்பாக வானிலைத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன. இதன் மூலமாக பயிர் விளைச்சலின் அளவு 8 முதல் 15 விழுக்காடும், பண்ணை வருமானம், 10-18 விழுக்காடும் அதிகரிப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

விதை உற்பத்தி மற்றும் விநியோகம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், முக்கிய பயிர் இரகங்களில் விதை உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றது. வல்லுநர் விதை மேலும் பெருக்கப்பட்டு விதை வழங்கும் சங்கிலியில் ஆதார மற்றும் சான்று விதைகளாக அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக விநியோகிக்க இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதேபோல, ஓராண்டு காலத்தில் ஆதார நிலையில் இருந்து சான்று விதைகளாகப் பெருக்கம் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 2014-15 ஆம் ஆண்டில், 115 முக்கிய பயிர் இரகங்களில் வல்லுநர் விதைகள், ஆதார விதைகள், சான்றிதழ் மற்றும் உண்மை நிலை விதைகளை உற்பத்தி செய்து விநியோகித்து உள்ளது. மேலும், 1358 குவிண்டால் வல்லுநர் விதைகள், 4034 குவிண்டால் ஆதார விதைகள், 11307 குவிண்டால் சான்றிதழ் மற்றும் உண்மை நிலை விதைகள் மற்றும் 27,69,350 நாற்றுக்கள் மற்றும் நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு 2014-15 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூரில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தானியங்கி விதை விற்பனை இயந்திரம், நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம், சிறு உழவர்கள் மற்றும் வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்குத் தேவையான காய்கறி மற்றும் மலர் பயிர் விதைகளைப் பெறுதவற்கு இயலும். 2014-15 ஆம் ஆண்டில் 2.50 இலட்சம் மதிப்புள்ள 25000 பாக்கெட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தானியங்கி விதை விற்பனை இயந்திரம் திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, தேனி, திருநெல்வேலி, சேலம், திருவண்ணாமலை, சென்னையில் இரண்டு இடங்கள் என மேலும் ஒன்பது இடங்களிலும் 2014-15 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளன.

உயிரி இடுபொருட்கள், பயிர் வளர்ச்சி ஊக்கிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

பயிர்களில் அதிக விளைச்சலைப் பெறுவதற்காக, டிரைகோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளோரஸன்ஸ் போன்ற உயிரி இடுபொருட்கள், பயிர் வளர்ச்சி ஊக்கிகளான, மக்காச்சோள மேக்சிம், பயறு ஒண்டர், நிலக்கடலை ரிச், பருத்தி பிளஸ்,

கரும்பு பூஸ்டர், தென்னை டானிக் ஆகியன உற்பத்தி செய்யப்பட்டு பயிர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக உழவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 2014-15ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டட இடு பொருட்கள் மொத்தம் 22634 குவிண்டால் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்ணறிவு சேவைகளைத் தனது உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தின் (DEMIC) மூலம் அளித்து வருகின்றது. வேளாண் விளைபொருட்களின் உள்ளூர் சந்தை விலைகளை விதைப்பிற்கு முன்பும் அறுவடைக்கு முன்பும் முன்னறிவிப்பு செய்கின்றது. இத்தகவல்கள் நாளிதழ்களிலும், வானொலி, தொலைக்காட்சி மூலமும் வெளியிடப்படுகின்றன. இம்மையம், மக்காச்சோளம், சோளம், கேழ்வரகு, கம்பு, உளுந்து, கொண்டைக்கடலை, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, தேங்காய், கொப்பரைத் தேங்காய், பருத்தி, உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், தக்காளி, வெண்டைக்காய், கத்தரிக்காய், மஞ்சள், சிறிய வெங்காயம், மிளகாய் வற்றல், கொத்தமல்லி, வாழைப்பழம் (நேத்திரன் மற்றும் பூவன்) ஆகிய 24 வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு விலை முன்னறிவிப்பு செய்கிறது. விலை முன்னறிவிப்பானது 95 விழுக்காடு துல்லியமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம், சந்தைப் படுத்துவதற்கான ஆலோசனைகளும் கைபேசி மூலமாக மின்னணு விரிவாக்க மையம் 'எம் - கிசான்' திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டு வருகின்றன. பயனாளிகளுக்கு 9000 சந்தை தகவல்கள், 45,02,766 குறுந்தகவல்களாக 2014-15 ஆம் ஆண்டில் கணினி மூலம் கைபேசிகளுக்கு அளிக்கப்பட்டன.

வேளாண் வளர்ச்சித் திட்டங்கள்

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் ரைசோடிரான் (RHIZOTRON) ஆய்வகம் கொண்டு பயிர் நுண்ணுயிர்கள் மண்ணின் செயல்திறனை அதிகரித்து அதன் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆய்வு, மா, கொய்யா மற்றும் முருங்கையில் உயர் நடவு செயல் விளக்கத்திடல் அமைத்தல் மற்றும் ஆராய்ச்சி ஆகிய இரண்டுத் திட்டங்கள் ரூபாய் 10.57 கோடி மதிப்பில் செயல்படுத்து மாநிலத் திட்டக் குழுவால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 27.06.2014 அன்று ரூபாய் 573.70 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 12 புதிய கட்டிடங்களை திறந்து வைத்தார்கள். அன்றே ரூபாய் 1203.00 இலட்சம் மதிப்பில் ஒன்பது புதிய கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டப்பட்டன. திருச்சியில் மகளிருக்கான தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் ரூபாய் 1455 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நிர்வாகக் கட்டிடம் மற்றும் மகளிர் தங்கும் விடுதி ஆகியவற்றை 30.06.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட 2014-15 ஆம் ஆண்டின் பணிகள், சாதனைகள் தொகுக்கப்பட்டு இவ்வாண்டறிக்கையில் மொத்தம் 8 அத்தியாங்களில் தரப்பட்டுள்ளது.

2. பல்கலைக்கழக நிர்வாகம்

வேந்தர்	:	**திரு. கே. ரோசையா அவர்கள்** மேதகு தமிழக ஆளுநர் *01.04.2014 முதல் 31.03.2015 வரை*
இணைவேந்தர்	:	**திரு. செ. தாமோதரன் அவர்கள்** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தமிழக அரசு *01.04.2014 முதல் 31.03.2015 வரை*
துணை வேந்தர்	:	**முனைவர் கு. இராமசாமி அவர்கள்** துணை வேந்தர் *01.04.2014 முதல் 31.03.2015 வரை*

பல்கலைக் கழக உயர் அலுவலர்கள்

வ. எண்	பதவி	பெயர்	காலம்	
			முதல்	முடிய
1.	பதிவாளர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் இரா. இரபீந்திரன்	01.04.2014	22.03.2015
		முனைவர் சி.ஆர். ஆனந்த குமார்	23.03.2015	31.03.2015
2.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் எஸ். மகிமை ராஜா	01.04.2014	31.03.2015
3.	முதன்மையர் (பொறுப்பு), மூதறிவியல் கல்வி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் எஸ். மோகன்	01.04.2014	31.03.2015

4.	முதன்மையர் (பொறுப்பு), தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் எஸ். மாரியப்பன்	01.04.2014	31.03.2015
5.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003.	முனைவர் சி. திவாகர் துரைராஜ்	01.04.2014	31.03.2015
6.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை – 625 104.	முனைவர் சி. சின்னுசாமி	01.04.2014	22.03.2015
		முனைவர் கு. வேலாயுதம்	23.03.2015	31.03.2015
7.	முதன்மையர் (பொறுப்பு), மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை – 625 104.	முனைவர் ஜி. புஷ்பா	01.04.2014	31.03.2015
8.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர், திருச்சிராப்பள்ளி - 621 712.	முனைவர் கே. ராமசாமி	01.04.2014	31.03.2015
9.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம், வல்லநாடு, தூத்துக்குடி – 628 252.	முனைவர் வி. சுப்பிரமணியன்	01.04.2014	31.03.2015

10.	முதன்மையர் (பொறுப்பு), மகளிர்தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சிராப்பள்ளி -620 009	முனைவர் த. நா. பாலமோகன்	01.04.2014	24.07.2014
		முனைவர் ஆர். சங்கர நாராயணன்	25.07.2014	24.10.2014
		முனைவர் பி. பாண்டியராஜன்	25.10.2014	11.11.2014
		முனைவர் எம். ஜவஹர்லால்	11.11.2014	31.03.2015
11.	முதன்மையர் (பொறுப்பு), தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம் - 625 604.	முனைவர் ஆர். சங்கர நாராயணன்	01.04.2014	24.07.2014
		முனைவர் டி. என். பாலமோகன்	25.07.2014	31.03.2015
12.	முதன்மையர் (பொறுப்பு), அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சிராப்பள்ளி - 620 009.	முனைவர் பி. பாண்டியராஜன்	01.04.2014	31.03.2015
13.	முதன்மையர் (பொறுப்பு), வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம் - 641 301.	திரு. பெ. துரைராசு	01.04.2014	30.09.2014
		முனைவர் எம். பரமாத்மா	01.10.2014	23.03.2015
		முனைவர் கே.கே. சுரேஷ்	23.03.2015	31.03.2015
14.	ஆராய்ச்சி இயக்குநர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003	முனைவர் மா. மகேஸ்வரன்	01.04.2014	31.03.2015
15.	இயக்குநர் (பொறுப்பு), பயிர் மேலாண்மை இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003	முனைவர் கு. வேலாயுதம்	01.04.2014	23.03.2015
		முனைவர் சி. ஜெயந்தி	23.03.2015	31.03.2015
16.	இயக்குநர் (பொறுப்பு), பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003.	முனைவர் சி.ஆர். அனந்தகுமார்	01.04.2014	22.03.2015
		முனைவர் கே.கணேசமூர்த்தி	23.03.2015	31.03.2015

17.	இயக்குநர் (பொறுப்பு), தாவர மூலக்கூறு உயிரியல் மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003.	முனைவர் ஆர். சந்திரபாபு	01.04.2014	31.03.2015
18	இயக்குநர் (பொறுப்பு) பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003.	முனைவர் கே. ராமராஜு	01.04.2014	31.03.2015
19.	இயக்குநர் (பொறுப்பு), வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் எம். சின்னதுரை	01.04.2014	31.03.2015
20.	இயக்குநர் (பொறுப்பு), நீர் நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் பி.ஜெ. பாண்டியன்	01.04.2014	31.03.2015
21.	இயக்குநர் (பொறுப்பு), வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் ஆர். முருகேசன்	01.04.2014	31.03.2015
22.	விரிவாக்கக் கல்வி இயக்குநர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் கா.அ. பொன்னுசாமி	01.04.2014	22.03.2015
		முனைவர் எச். பிலிப்	23.03.2015	31.03.2015
23.	இயக்குநர் (பொறுப்பு), மாணவர் நலம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் என். ரகுபதி	01.04.2014	31.03.2015

24.	இயக்குநர் (பொறுப்பு), திறந்தவெளி மற்றும் தொலை தூரக் கல்வி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் பொ. சாந்தி	01.04.2014	23.03.2015
		முனைவர் பி. சாந்தி	23.03.2015	31.03.2015
25.	இயக்குநர் (பொறுப்பு), திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் மு. சந்திரசேகரன்	01.04.2014	31.03.2015
26.	இயக்குநர் (பொறுப்பு), தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612 101.	முனைவர் இரா. ராஜேந்திரன்	01.04.2014	23.03.2015
		முனைவர் வி. இரவி	23.03.2015	31.03.2015
27.	தேர்வு கட்டுப்பாட்டாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் கே. இளமுருகு	01.04.2014	31.03.2015
28.	சிறப்பு அலுவலர் (பொறுப்பு), இயற்கை வள மேம்பாட்டு மையம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003.	முனைவர் வி.பி. துரைசாமி	01.04.2014	31.03.2015
29.	சிறப்பு அலுவலர் (பொறுப்பு), விதை மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003.	முனைவர் மு. பாஸ்கரன்	01.04.2014	31.03.2015
30.	சிறப்பு அலுவலர் (பொறுப்பு), கண்காணிப்பு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003.	முனைவர் சி.பொன்னையா	01.04.2014	31.03.2015

31.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈச்சங்கோட்டை தஞ்சாவூர் - 614 902.	முனைவர் கே. சாமிஐயன்	08.08.2014	31.03.2015
32.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர் திருவண்ணாமலை – 606 753	முனைவர் ஜி. பிரசாத்	08.08.2014	31.03.2015
33.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குடுமியான்மலை புதுக்கோட்டை – 622 104	முனைவர் ஜி. கஜேந்திரன்	08.08.2014	31.03.2015
34.	கணக்காயர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003.	திருமதி. ஆர். பூங்கோதை	01.04.2014	31.03.2015
35.	வளாக அலுவலர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003.	பொறியாளர் து. கலைச்செல்வன்	01.04.2014	31.03.2015

மேலாண்மைக் குழு

2014 - 2015 : ஆண்டிற்கான மேலாண்மைக் குழு உறுப்பினர்கள்

தலைவர் மற்றும் உறுப்பினர்கள்		காலம்	
		முதல்	முடிய
	தலைவர்		
1.	முனைவர் கு. இராமசாமி துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003.	01.04.2014	31.03.2015

	உறுப்பினர்கள்		
2.	முனைவர் சந்தீப் சக்சேனா, இ. ஆ.ப., வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர், வேளாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.	01.04.2014	28.10.2014
	திரு. ராஜேஷ் லக்கோனி, இ. ஆ.ப., வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலர், வேளாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.	29.10.2014	31.03.2015
3.	திரு. வி. அருண்ராய், இ. ஆ.ப., இணைச் செயலர், நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.	01.04.2014	31.03.2015
4.	திரு. சத்யபிரதா சாஹூ, இ. ஆ.ப., ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைத்தோட்டப் பயிர்கள் துறை, வேளாண்மை அடுக்குமாடி கட்டிடம், சேப்பாக்கம், சென்னை – 600 005.	01.04.2014	30.05.2014
	திரு. சித்தரசேனன், இ. ஆ.ப., இயக்குனர் தோட்டக்கலை மற்றும் மலைத்தோட்டப் பயிர்கள் துறை, வேளாண்மை அடுக்குமாடி கட்டிடம், சேப்பாக்கம், சென்னை – 600 005.	26.07.2014	31.03.2015
5.	முனைவர் எம். இராஜேந்திரன், இ. ஆ.ப., வேளாண்மை இயக்குநர், வேளாண்மை இயக்ககம், சேப்பாக்கம், சென்னை – 600 005.	01.04.2014	31.03.2015
6	திரு. எம். செந்தில், எம். இ (விவ)., தலைமைப் பொறியாளர் (வேளாண் பொறியியல்) பொறுப்பு, வேளாண் பொறியியல் துறை, 487, அண்ணாசாலை, நந்தனம், சென்னை – 600 005.	01.04.2014	24.01.2015
7.	திரு. வினோத் குமார், இ.வ.ப., முதன்மை தலைமை வனக்காப்பாளர், தமிழ்நாடு வனத் துறை, எண்.1, ஜென்னீஸ் ரோடு, பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை, சென்னை – 600 005.	30.05.2014	31.03.2015
8.	முனைவர் என்.வி. நாயர், பிஎச்.டி இயக்குநர், கரும்பு இனப்பெருக்க நிலையம், கோயம்புத்தூர் - 641 007.	01.04.2014	30.09.2014

	முனைவர் பாக்ஷி ராம், பிஎச்.டி இயக்குநர், கரும்பு இனப்பெருக்க நிலையம், கோயம்புத்தூர் - 641 007.	05.01.2014	31.03.2015
9.	திரு. சி. சண்முக சுந்தரம், 1,27, விநாயகர் கோவில் வீதி, நவக்கரை, கோயம்புத்தூர் - 641 105.	01.04.2014	31.03.2015
10.	திரு. ராமலிங்கம், எஃப்- 187, 'விஜய்' 9வது வீதி, அண்ணாநகர், கிழக்கு, சென்னை – 600 102.	30.04.2014	31.03.2015
11.	திருமதி. அமலா ராணி, 121, மெயின் ரோடு, வாசுதேவநல்லூர், சிவகிரி தாலூக்கா, திருநெல்வேலி மாவட்டம் - 627 758.	30.04.2014	31.03.2015
12.	திரு. கார்த்திகேயா சிவசேனாதிபதி, குட்டுப்பாளையம் அஞ்சல், நாதக்கடையூர் வழி, திருப்பூர் மாவட்டம் - 638 108.	30.04.2014	31.03.2015
13.	திரு. அருண் ஆர். நாகராஜன், த, பெ. நாகராஜன், 5-1-57 மெயின் ரோடு, திண்டுக்கல் மாவட்டம், பாட்டிவீரன்பாட்டி – 624 211	30.04.2014	31.03.2015
14.	திருமதி. சரஸ்வதி கண்ணையன் செயலர், ஹிந்துஸ்தான் கல்வி நிலையம், ஹிந்துஸ்தான் தோட்டம், (நவ இந்தியா), அவிநாசி ரோடு, கோயம்புத்தூர் - 641 028.	30.04.2014	31.03.2015
15.	திரு. ஜி. விஜயகுமார், எண். 337-ஏ, பெரியகடை வீதி, கோயம்புத்தூர் - 641 001	30.04.2014	31.03.2015
16.	திரு. முத்துகருப்பண்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர் - பொள்ளாச்சி தொகுதி, மேட்டுபாவி அஞ்சல், வடசித்தூர் வழி, பொள்ளாச்சி தாலூக்கா – 641 202, கோயம்புத்தூர் மாவட்டம்.	30.04.2014	16.08.2014
	திரு. எஸ். தாமோதரன், சட்டமன்ற உறுப்பினர் - பொள்ளாச்சி தொகுதி, எண். 3,33, டி. நல்லிகௌண்டன் பாளையம், தலக்கரை அஞ்சல், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா – 642 005.	19.08.2014	31.03.2015

	உறுப்பினர் - செயலர்		
17.	முனைவர் இரா.இரபீந்திரன், பதிவாளர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் - 641 003.	01.04.2014	22.03.2015
	முனைவர் சி.ஆர். ஆனந்த குமார், பதிவாளர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் - 641 003.	23.03.2015	31.03.2015

மேலாண்மைக் குழு கூட்டங்கள் 2014-15

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மேலாண்மைக் குழு 2014-15 ஆம் ஆண்டில் ஐந்து முறை கூடியது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 168 வது மேலாண்மைக் குழுக் கூட்டம், 30.05.2014 அன்றும் 169 வது மேலாண்மைக் குழுக் கூட்டம் 26.07.2014 அன்றும், 170 வது மேலாண்மைக் குழுக் கூட்டம் 26.08.2014 அன்றும், 171 வது மேலாண்மைக் குழுக் கூட்டம் 18.12.2014 அன்றும் மற்றும் 172 வது மேலாண்மைக் குழுக் கூட்டம் 24.01.2015 அன்றும், கோயம்புத்தூரில் நடைபெற்றன.

மேலாண்மைக்குழுவின் 168வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் (30.05.2014)

- தஞ்சாவூர் மாவட்டத்தில் உசிலம்பட்டி என்ற ஊரில் ஆர்விஎஸ் வேளாண்மைக் கல்லூரி என்ற பெயரில் புதியதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி 2014-15இல் துவங்க சென்னையில் உள்ள பக்தவச்சலம் மெமோரியல் டிரஸ்ட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் மதுரையில் உள்ள மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதுதில்லியில் உள்ள மனித வள மேம்பாட்டு துறையின் நிதிப்பங்களிப்புடன் பல்கலைக் கழக மானியக்குழு பரிந்துரையின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்குக்கான படிப்புக்கான புதிய துறை உருவாக்க அனுமதி கு-6-4,2013 (SCT) நாள் 29.08.2013 இல் வழங்கப்பட்டது.
- முதுநிலை மாணவர்களுக்கு முப்பருவ காலமுறை படிப்பு திட்டம் 2014-15 முதல் அனுமதி வழங்கப்பட்டது.
- 2014-15 கல்வியாண்டு முதல் இளநிலை பட்டு வளர்ப்பியல் பட்டப்படிப்பை வேளாண்மைக் கல்லூரி, கோயம்புத்தூரில் இருந்து வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மேட்டுப்பாளையத்திற்கு மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.
- வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கோயம்புத்தூரில் இருந்து பண்ணை இயந்திரவியல் மற்றும் மண் மற்றும் நீர் பேணுகைத்துறையை

வேளாண் பொறியியல் கல்லூரி குமுளூருக்கு மாற்ற அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டம் மட்டும் கோயம்புத்தூரிலேயே தொடர அனுமதி வழங்கப்பட்டது.

- அனைத்து உதவிப்பேராசிரியர்களும், அலுவலக பணியாளரும் சார்பு நிலை அலுவலர்கள் கணக்கியர் பகுதி – I, பகுதி - II ஆகிய தேர்வுகளை இரண்டு வருடங்களுக்குள் தேர்ச்சி பெற வேண்டும் என்ற உத்தரவை அனுமதித்தது.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வரைவு அலுவலர் கிரேடு I / II & III ஆகிய பதவிகளுக்கான பெயர் மற்ற அரசு துறைகளில் மாற்றம் செய்தவாறு கீழ்கண்டவாறு பதவி பெயர் மாற்றம் செய்யபட்டுள்ளது.

வ. எண்	அரசு துறையில் உள்ளபடி பதவியின் பெயர்	அதற்கு இணையான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பதவியின் பெயர்	முன்மொழியப்பட்ட பதவியின் பெயர்
1.	முதுநிலை வரைவு அலுவலர் (பிபீ-2 ரூபாய் 9300 – 34800 + (5100 கிரேடு சம்பளம்)	வரைவு அலுவலர் கிரேடு –I (சிவில் -இயந்திரவியல்) (பிபீ-2 ரூபாய் 9300 – 34800 + (5100 கிரேடு சம்பளம்)	முதுநிலை வரைவு அலுவலர்
2.	வரைவு அலுவலர் (பிபீ-2 ரூபாய் 9300 – 34800 + (4400 கிரேடு சம்பளம்) (பிபீ-2 ரூபாய் 9300 – 34800 + (4400 கிரேடு சம்பளம்)	வரைவு அலுவலர் கிரேடு –II (சிவில் -இயந்திரவியல்)	வரைவு அலுவலர்
3.	இளநிலை வரைவு அலுவலர் (பிபீ-2 ரூபாய் 9300 – 34800 + (4200 கிரேடு சம்பளம்)	இளநிலை வரைவு அலுவலர் கிரேடு – III (பிபீ-2 ரூபாய் 9300 – 34800 + (4200 கிரேடு சம்பளம்)	இளநிலை வரைவு அலுவலர்

- 2011 ஆம் ஆண்டு பதவி அமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர், தட்டச்சர் அரசாணை எம்.எஸ். 241 தேதி 22.07.2013 நிதித்துறையில் குறிப்பிட்டப்படி தகுதியுள்ளவர்களுக்கு உயர் சம்பள நிர்ணயம் செய்ய ஒரு முறை சம்பவமாக அனுமதி வழங்கப்பட்டது.

மேலாண்மைக்குழுவின் 169 வதுகூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் (26.07.2014)

- கிராமப்புற மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழக அரசு அனுமதித்த 150 கோடி ரூபாய் மதிப்பில் மூன்று புதிய வேளாண்மைக் கல்லூரிகள் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 2014-15ஆம் கல்வி ஆண்டு முதல் துவங்க அனுமதி வழங்கப்பட்டது.

- முப்பதைந்தாவது பட்டமளிப்பு விழாவிற்கு முனைவர் பி. பலராமன், பெங்களூருவில் உள்ள இந்திய வேளாண்மை இயக்குநர் அவர்களை சிறப்பு விருந்தினராகவும், பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் முனைவர் ராபர்ட் எஸ். ஜிக்லர் அவர்கள் மற்றும் முனைவர் சி.ஏ. ரெட்டி, மிச்சிகன் மாகாண பல்கலைக் கழகம் ஆகியோருக்கு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டது.

- திண்டுக்கல் மாவட்டம், பட்டிவீரன்பட்டியைச் சேர்ந்த மேலாண்மைக்குழுவின் உறுப்பினர் திரு. அருண் நாகராஜன் அவர்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிதிக்குழு உறுப்பினராக 29.04.2017 வரை இருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

மேலாண்மைக்குழுவின் 170 வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் (26.08.2014)

- முப்பத்தைந்தாவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறத் தகுதியுடையவர் என 1521 மாணவர்களுக்கு பட்டம் வழங்க அனுமதி வழங்கப்பட்டது. இதில் 1234 பட்டதாரிகளுக்கு நேரடியாகவும், 287 பட்டதாரிகளுக்கு நேரில் இல்லாத போதும் பல்வேறு பாடப்பிரிவுகளில் பட்டப்பதிவேட்டின் படி பட்டம் வழங்க அனுமதிக்கப்பட்டது.

மேலாண்மைக்குழுவின் 171 வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் (18.12.2014)

- மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பொன்விழா ஆண்டில் புதிதாக பல்துறை சார்ந்த உயிரித் தொழில் நுட்பத் துறையைத் துவங்க அனுமதி வழங்கப்பட்டது.

- குமுளூரில் உள்ள வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்பட்டு வந்த வேளாண்மை அறிவியல் துறையை பன்புல ஆராய்ச்சியாளர்களை கொண்ட செயல்முறை அறிவியல் மற்றும் பொறியியல் துறையாக பெயர் மாற்றம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

- சட்டமன்றப்பேரவையில் மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் தாலுக்காவில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் விதிமுறைகள் இணைப்பு ஓஐஏ இன் படி துணைவேந்தருக்கு கூடுதல் நிதி அதிகாரத்திற்கான அனுமதி வழங்கப்பட்டது. அவை பின் வருமாறு

வ. எண்	நிதி அதிகாரம்	ஏற்கனவே உள்ளது	முன் மொழியப்பட்டது
1.	5 (a) அப்பாரடஸ், ஆய்வக உபகரணங்கள், மின் மற்றும் மின் அணு உபகரணங்கள், பண்ணை இயந்திரங்கள் மற்றும் அங்காடி பொருட்கள், அப்பாரட்டஸ், ஆய்வக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் பழுது பார்த்தல் (கணினி, மடிக் கணினி மற்றும் ஐ பேட், கணினி நோட்டுப் புத்தகங்கள் மற்றும் உதிரிபாகங்கள் தவிர) வாங்குவதற்கு	ஒரு தடவைக்கு ரூபாய் 30 இலட்சம்	ஒரு தடவைக்கு ரூபாய் 60 இலட்சம் வரை

கல்விக் குழு உறுப்பினர்கள்

வ. எண்	பெயர் மற்றும் பதவி		காலம்	
			முதல்	முடிய
தலைவர்				
1	துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் கு. இராமசாமி	01.04.2014	31.03.2015
செயலர்				
2	பதிவாளர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் இரா. இரபீந்திரன்	01.04.2014	22.03.2015
		முனைவர் சி.ஆர். ஆனந்தகுமார்	23.03.2015	31.03.2015
உறுப்பினர்கள்				
3.	வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர், வேளாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.	முனைவர் சந்தீப் சக்சேனா, இ. ஆ.ப.	01.04.2014	28.10.2014
		திரு. ராஜேஷ் லக்கோனி, இ. ஆ.ப.	29.10.2014	31.03.2015

4.	முதன்மையர், மூதறிவியல் கல்வி, ஆந்திரபிரதேச என்.ஜி. ரங்கா வேளாண்மைப் பல்கலைக் கழகம், ஆந்திரபிரதேசம்.	முனைவர் எம்.எல்.என். ரெட்டி	01.04.2014	31.03.2015
5.	இயக்குநர், மத்திய கிழங்குப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், திருவனந்தபுரம், கேரளா	முனைவர் எஸ்.கே. சக்ரபர்த்தி,	01.04.2014	31.03.2015
6.	பேராசிரியர் மற்றும் தலைவர், மனித வள மேம்பாட்டுத் துறை, மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை - 625 104.	முனைவர் சு. அமுதா	01.04.2014	31.03.2015
7.	பேராசிரியர் மற்றும் தலைவர், மரம் பெருக்கத் துறை, வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம் - 641 301.	முனைவர் கா. த. பார்த்திபன்	01.04.2014	31.03.2015
8.	பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறிப்பயிர்கள் துறை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம் - 625 604.	முனைவர் டி. சரளா தேவி	01.04.2014	31.03.2015
9.	பேராசிரியர் மற்றும் தலைவர், உயிர் ஆற்றல் துறை, வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் செள. காமராஜ்	01.04.2014	28.02.2015
10.	பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மைப் பொருளியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் ஆர். பாலசுப்பிரமணியன்	01.04.2014	31.03.2015

11.	பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் வினையியல் நெல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003	முனைவர் சி.என். சந்திரசேகர்	01.04.2014	02.12.2015
		முனைவர் எஸ். ராபின்	09.12.2014	31.03.2015
12.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் எஸ். மகிமைராஜா	01.04.2014	31.03.2015
13.	முதன்மையர் (பொறுப்பு), மூதறிவியல் கல்வி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் எஸ். மோகன்	01.04.2014	31.03.2015
14.	முதன்மையர் (பொறுப்பு), தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003,	முனைவர் எஸ். மாரியப்பன்	01.04.2014	31.03.2015
15.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் சி. திவாகர் துரைராஜ்	01.04.2014	31.03.2015
16.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை - 625 104.	முனைவர் சி. சின்னுசாமி	01.04.2014	22.03.2015
		முனைவர் கே. வேலாயுதம்	23.03.2015	31.03.2015
17.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம், தூத்துக்குடி - 628 252	முனைவர் வி. சுப்பிரமணியன்	01.04.2014	31.03.2015

18.	முதன்மையர் (பொறுப்பு), அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாவலூர் குட்டப்பட்டு, திருச்சிராப்பள்ளி - 620 009.	முனைவர் பி. பாண்டியராஜன்	01.04.2014	31.03.2015
19.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர், திருவண்ணாமலை – 606 753	முனைவர் ஜி. பிரசாத்	08.08.2014	31.03.2015
20.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈச்சாங்கோட்டை, தஞ்சாவூர் - 614 902	முனைவர் கே. சாமிஐயன்	08.08.2014	31.03.2015
21.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குடுமியான் மலை, புதுக்கோட்டை - 622 104	முனைவர் ஜி. கஜேந்திரன்	08.08.2014	31.03.2015
22.	முதன்மையர் (பொறுப்பு), தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம் - 625 604.	முனைவர் ஆர். சங்கர நாராயணன்	01.04.2014	24.07.2014
		முனைவர் டி.என். பாலமோகன்	25.07.2014	31.03.2015
23.	முதன்மையர் (பொறுப்பு) வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர், திருச்சிராப்பள்ளி - 621 712..	முனைவர் கே. இராமசாமி	01.04.2014	31.03.2015
24.	முதன்மையர், வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் - 641 301.	முனைவர் பெ. துரைராசு. இ.வ.ப.,	01.04.2014	01.10.2014
		முனைவர் எம். பரமாத்மா	02.10.2014	22.03.2015
		முனைவர் கே.கே. சுரேஷ்	23.03.2015	31.03.2015

25.	முதன்மையர் (பொறுப்பு), மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகம், மதுரை – 625 104.	முனைவர் ஜி. புஷ்பா	01.04.2014	31.03.2015
27.	ஆராய்ச்சி இயக்குநர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003.	முனைவர் மா. மகேஸ்வரன்	01.04.2014	31.03.2015
28.	இயக்குநர் (பொறுப்பு), பயிர் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில் நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் ஆர். சந்திரபாபு	01.04.2014	31.03.2015
29.	இயக்குநர் (பொறுப்பு), வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் எம். சின்னதுரை	01.04.2014	31.03.2015
30.	விரிவாக்கக் கல்வி இயக்குநர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003.	முனைவர் கா. அ. பொன்னுசாமி,	01.04.2014	23.03.2015
		முனைவர் எச். பிலிப்	23.03.2015	31.03.2015
31.	இயக்குநர் (பொறுப்பு), பயிர்ப்பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் கே. இராமராஜு	01.04.2014	31.03.2015

32.	இயக்குநர் (பொறுப்பு), நீர் நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் பி.ஜெ. பாண்டியன்	01.04.2014	31.03.2015
33.	இயக்குநர் (பொறுப்பு), பயிர் மேலாண்மை இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் கு. வேலாயுதம்	01.04.2014	22.03.2015
		முனைவர் சி. ஜெயந்தி	23.03.2015	31.03.2015
34.	இயக்குநர் (பொறுப்பு), பயிர்ப் பெருக்கம் மற்றும் மரபியல் மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் கு.ரா. ஆனந்தகுமார்	01.04.2014	22.03.2015
		முனைவர் கே. கணேசமூர்த்தி	23.03.2015	31.03.2015
35.	இயக்குநர் (பொறுப்பு), திறந்த வெளி மற்றும் தொலைதூரக் கல்வி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் பொ. சாந்தி	01.04.2014	22.03.2015
		முனைவர் பி. சாந்தி	23.03.2015	31.03.2015
36.	இயக்குநர் (பொறுப்பு) மாணவர் நலம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் என். ரகுபதி	01.04.2014	31.03.2015
37.	இயக்குநர் (பொறுப்பு), திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் மு. சந்திரசேகரன்	01.04.2014	31.03.2015

38.	இயக்குநர் (பொறுப்பு), வேளாண் வணிக மேம்பாடு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் ஆர். முருகேசன்	01.04.2014	31.03.2015
39.	இயக்குநர் (பொறுப்பு), தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை , தஞ்சாவூர் - 612 101.	முனைவர் ஆர். ராஜேந்திரன்	01.04.2014	22.03.2015
		முனைவர் வி. ரவி	23.03.2015	31.03.2015
40.	தேர்வு கட்டுப்பாட்டாளர் (பொறுப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.	முனைவர் எம். இளமுருகு	01.04.2014	31.03.2015
41..	முதன்மையர், வானவராயர் வேளாண்மை நிறுவனம், மனக்கடவு, பொள்ளாச்சி – 642 103.	முனைவர் வி. இராஜேந்திரன்,	01.04.2014	01.01.2015
		முனைவர்.வி. ரவிசந்திரன்	02.01.2015	31.03.2015
42.	முதன்மையர் (பொறுப்பு), வேளாண்மைத் தொழில்நுட்பக் கல்லூரி, குள்ளப்புரம், வைகைடேம், தேனி – 625 562	முனைவர் கே. சிவசுப்ரமணியன்	01.04.2014	31.03.2015
43.	முதன்மையர் (பொறுப்பு), தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாடு நிறுவனம், பெரம்பலூர் - 621 212.	முனைவர் அஸ்லாம் பாஷா	01.04.2014	31.03.2015
44.	முதன்மையர் (பொறுப்பு), ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி, ஜி.பி. நகர், கலவை. வேலூர் – 632 506.	முனைவர் சு. நந்தகுமார்	01.04.2014	01.01.2015
		முனைவர் பி. கலைச்செல்வன்	02.01.2015	31.01.2015
		முனைவர் சு. நந்தகுமார்	01.02.2014	31.03.2015
45.	முதன்மையர் (பொறுப்பு), இமயம் வேளாண்மை மற்றும் தொழில் நுட்ப நிறுவனம், துறையூர், திருச்சி - 621 206.	முனைவர் டி. ஆறுமுகம்	01.04.2014	31.03.2015

46.	முதன்மையர், பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி, நாமக்கல் - 637 405.	முனைவர் கே. பிராபாகர்	01.04.2014	31.03.2015
47.	முதன்மையர் (பொறுப்பு), ஆர். வி.எஸ். வேளாண்மைக் கல்லூரி, தஞ்சாவூர் - 613 402.	முனைவர் பி. பாலசுப்பிரமணியன்	01.04.2014	31.03.2015
48.	முனைவர் (பொறுப்பு) குமரகுரு வேளாண்மை நிறுவனம், ஈரோடு - 638 315.	முனைவர் பி. வெங்கடாசலம்,	01.04.2014	12.11.2014
		முனைவர் டி.ஆர். சண்முகம்	13.11.2014	31.03.2015
49.	முதன்மையர் (பொறுப்பு), முனைவர் ஜெ.கே.கே. முனிராஜா வேளாண்மை அறிவியல் கல்லூரி, ஈரோடு – 638 315.	முனைவர் பி.எல். விஸ்வநாதன்	09.09.2014	31.03.2015
50.	முதன்மையர் (பொறுப்பு), ஆர்விஎஸ். தோட்டக்கலைக் கல்லூரி, செம்பட்டி, திண்டுக்கல் – 624 701.	முனைவர் எஸ். குமார்	08.09.2015	31.03.2015
51.	முதன்மையர் (பொறுப்பு), தொன் போஸ்கோ வேளாண்மைக் கல்லூரி, வேலூர் – 631 151.	முனைவர் ஏ. கிரிஸ்டோஃபெர் லூர்துராஜ்,	08.09.2015	31.03.2015
52.	முதன்மையர் (பொறுப்பு), அரவிந்தர் வேளாண்மை தொழில்நுட்ப நிறுவனம், திருவண்ணாமலை மாவட்டம்	முனைவர் எம். சிவக்குமார்	08.09.2015	22.03.2015
		முனைவர் ஆர். இரபீந்திரன்	23.03.2015	31.03.2015

கல்விக்குழுக் கூட்டங்கள் 2014-15

2014-15 ஆம் கல்வி ஆண்டில் கல்விக்குழு நான்கு முறை கூடி கீழ்க்கண்ட முக்கிய முடிவுகளை எடுத்தது.

124 வது கல்விக்குழுக் கூட்டம் (26.07.2014)

- கல்விக்குழு புதிதாக மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் தலா 60 அனுமதிக்கப்பட்ட இடங்களுடன் துவங்க அனுமதி வழங்கியது.

125 வது கல்விக்குழுக் கூட்டம் (25,08,2014)

- முப்பத்தைந்தாவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறத் தகுதியுடையவர் என 1521 மாணவர்களுக்கு பட்டம் வழங்க அனுமதி வழங்கப்பட்டது. இதில் 1234 பட்டதாரிகளுக்கு நேரடியாகவும் 287 பட்டதாரிகளுக்கு நேரில் இல்லாத போதும் பல்வேறு பாடப்பிரிவுகளில் பட்டப்பதிவேட்டின் படி பட்டம் வழங்க அனுமதிக்கப்பட்டது.
மென்திறன் மேம்பாட்டுத் பணிப்பட்டறை

வேலைவாய்ப்பிற்கான ஆளுமை மேம்பாடு என்ற தலைப்பில் பயிலரங்கமானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் இளநிலை வேளாண்மை மற்றும் இளந்தொழில்நுட்பம், மாணவர்களுக்கு 24.02.2015 – 25.02.2015 ஆகிய நாட்களில் மாணவர் நல இயக்ககத்தின் மூலம் நடத்தப்பட்டது. அதில் 405 மாணவ, மாணவியாகள் பங்கேற்றனர்.

பல்வேறு போட்டித்தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பல்கலைக்கழக மாணவர்கள் எண்ணிக்கை விபரம்

போட்டித்தேர்வின் பெயர்	மாணவர்களின் எண்ணிக்கை
யூஜிசி – சிஎஸ்ஐஆர் - நெட்	33
இந்திய குடிமைத்தேர்வு	4
டோபெல்	1
கேட்	2
இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழக - இளநிலை ஆராய்ச்சியாளர்	16

வேலைவாய்ப்பு திட்ட பாடங்கள்

வ. எண்	வேலை வாய்ப்பு திட்ட பாடங்கள்	பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை
1.	வங்கி அலுவலர் பணி	52

அண்ணா மேலாண்மை கல்லூரி சென்னையில் நடைபெற்ற குடிமைத் தேர்வுக்கான பயிற்சி

அண்ணா மேலாண்மை கல்லூரி சென்னை மற்றும் மாணவர் நல இயக்ககம் இணைந்து நடத்திய 2 நாள் பயிற்சியில் (27.7.2015 முதல் 28.7.2015வரை) வேளாண் கல்லூரி கோவை, மதுரை, கிள்ளிகுளம், தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிலையம் பெரியகுளம் ஆகிய கல்லூரிகளிலிருந்து 19 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் இ.ஆ.ப., இ.கா.ப. வகுப்புகள் நடத்தப்பட்டன. இந்த வகுப்புகள் கலந்து கொண்ட மாணவர்களுக்கு மிகவும் பயனள்ளதாக இருந்தது.

ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்ற பயிற்சி

வ. எண்	பயிற்சி மற்றும் இடம்	நாள்	பங்கேற்ற அலுவலர்
1	விரிவாக்கத்துறை அலுவலர்களுக்கான பயிற்சித்திறன் மேம்பாடு	23.02.2015 - 26.02.2015	டாக்டர். சிபி செபஸ்டியன். துணை பேராசிரியர் (விரிவாக்கத்துறை)

முக்கியப் பார்வையாளர்கள்

வ. எண்	தேதி	பார்வையாளர் பெயர் மற்றும் பதவி	முக்கியத்துவம்
1	20.02.2015	முனைவர் நான்சி பிட்ஸ், துணை முதல்வர், டல்ஹௌசி பல்கலைக்கழகம்	இரட்டைப் பாடத்திட்டம்

3.4. புத்தகப் பதிப்புகள் மற்றும் மக்கள் தொடர்பு இயக்ககம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நூலகம்

பல்கலைக்கழக நூலகம், பதிப்புகள் மற்றும் மக்கள் தொடர்பு இயக்ககத்தின் கீழ் கோயம்புத்தூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வளாகத்தில் இயங்கி வருகிறது. அதனோடு சேர்ந்து 9 கல்லூரி நூலகங்களும் இயங்கி வருகின்றன. அவை

1. நூலகம், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை.
2. நூலகம், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், கிள்ளிகுளம்.
3. நூலகம், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், திருச்சிராப்பள்ளி.
4. நூலகம், தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், பெரியகுளம்.
5. நூலகம், வேளாண்மை தொழில் நுட்ப கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், குமுளூர்.
6. நூலகம், வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், மேட்டுப்பாளையம்.
7. நூலகம், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், திருவண்ணாமலை.
8. நூலகம், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், தஞ்சாவூர்.
9. நூலகம், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், குடுமியான்மலை.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழக நூலகம், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கான தகவல் தேவையினை பூர்த்தி செய்து வருகிறது. இந்நூலகம் வெறும் நூல்கள் அடங்கிய இடமாக மட்டும் இல்லாமல் பயனுள்ள ஆராய்ச்சிகள் செய்வதற்க்கு உறுதுணையாகவும் போட்டி தேர்வுகளை எதிர்கொள்ளும் முறையிலும் தேவையான வசதிகளை கொண்டுள்ளது. மேலும் கல்வியியல் நெறிமுறைகளின்படி, நூலகர்கள் "நூலகத் தகவல் மற்றும் சேவைகள்" என்னும் கட்டாய பாடத்திட்டத்தினை மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு போதித்து வருகின்றனர். இந்த ஆண்டு (2014-15) இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் மூலம் மாணவர் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறும் வண்ணம் புத்தகங்கள் வாங்க ரூபாய் 29 லட்சம் வழங்கப்பட்டது. நூலகத்தினை பயன்படுத்துவோரின் தேவைகளுக்காக மின்னனு இதழ்கள் மற்றும் பல்வேறு வேளாண் பல்கலைக்கழகங்களில் சமர்பிக்கப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளை இணைய தளத்தின் மூலம் பெறும் வசதியினை ஏற்படுத்தியுள்ளது. இந்நூலகத்தில் உள்ள மொத்த நூல்களின் எண்ணிக்கை 1,81,000 ஆகும்.

நூலகத்தில் சேர்க்கப்பட்ட நூல்கள் (2014-15)

வ. எண்	விபரங்கள்	எண்ணிக்கை
1.	புத்தகங்கள்	2424
2.	ஆய்வு இதழ்கள்	1202
3.	செய்தி இதழ்கள்	261
4.	அறிக்கைகள்	104
5.	சஞ்சிகைகள்	977
	மொத்தம்	4968

மின்னனு இதழ்கள்

வ. எண்	விபரம்	இதழ்கள்
1.	வேளாண்மை மின்னனு இதழ்கள் கூட்டமைப்பின் (CeRA) மூலம் பெறப்பட்ட இதழ்கள்	3578
2.	இலவசமாக இணைய தளத்தின் மூலம் பெறப்படும் மின்னணு இதழ்கள்	9741
	மொத்தம்	13319

இணையதள தகவல் மின்னனு புத்தகங்கள்

வ. எண்	விபரம்	மின்னணு புத்தகங்கள்
1.	Wiley மின்னணு புத்தகங்கள்	251
2.	Elsevier மின்னணு புத்தகங்கள்	759
3.	CABI மின்னணு புத்தகங்கள்	365
4.	Springer மின்னணு புத்தகங்கள்	1215
	மொத்தம்	2590

இணையதள தகவல் தொகுப்புகள்

வ. எண்	தகவல் தொகுப்பு
1	www.commodityindia.com
2	www.delnet.nic.in
3	www.krishiprabha.equest

நூலக உறுப்பினர்கள்

இளம் அறிவியல் மாணவர்கள், முதறிவியல் மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள், நூலக உறுப்பினர்களாக உள்ளனர்.

வ, எண்	விபரம்	எண்ணிக்கை
1.	இளம் அறிவியல் மாணவர்கள்	422
2.	முதுநிலை அறிவியல் மாணவர்கள்	288
3.	ஆராய்ச்சி மாணவர்கள்	107
4.	ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள்	32
	மொத்தம்	849

நூலக வளங்கள் உபயோகித்தவர்கள் (பல தடவைகளில்)

வ. எண்	விபரம்	எண்ணிக்கை
1.	இளமறிவியல் மாணவர்கள்	12026
2.	முதுநிலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள்	16390
3.	ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள்	3684
4.	பிற கல்வி நிலையங்களிலிருந்து வருகை புரிந்த மாணவர்கள்	1115
5.	மின்னணு இதழ்ளை பயன்படுத்தியவர்கள்	17497
6.	மின்னணு நூலகத்தை பயன்படுத்தியவர்கள்	2470
	மொத்தம்	53182

நூலக புத்தக சுழற்சி

வ. எண்	விபரம்	எண்ணிக்கை
1.	வழங்கப்பட்ட புத்தகங்கள்	19175
2.	திருப்பி பெறப்பட்டவை	19245
3.	உபயோகித்த புத்தகங்கள்	332150
4.	புத்தகங்கள் தாமதமாக பெறப்பட்டதற்கான கட்டணம் (ரூபாய்)	1,06,732
5.	பிற கல்வி நிலைய மாணவர்கள் நூலகத்தை பயன்படுத்துவதற்காக பெறப்பட்ட கட்டணம் (ரூபாய்)	6,100

பல்கலைக்கழக நூலகத்தின் மொத்த நூல்கள்

வ. எண்	விபரம்	எண்ணிக்கை
1.	புத்தகங்கள்	1,23,201
2.	ஆய்வு இதழ்களின் தொகுப்பு	52,100
3.	ஆய்வு முடிவுகள்	6465

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக (ICAR) நிதி உதவி

வருடந்தோறும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் புத்தகங்கள் வாங்குவதற்காக இவ்வராய்ச்சிக் கழகம் நிதி ஒதுக்கீடு செய்கிறது. 2014-15 ம் வருடத்திற்கு 29 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மூன்று நாட்களுக்கு புத்தக கண்காட்சியை ஏற்பாடு செய்து அதில் 60,000 புத்தகங்கள் தேர்வு செய்யப்பட்டன. சுமார் 206 பேராசிரியர்களும், 1530 மாணவர்களும் இப்புத்தகத் தேர்வினை செய்து உதவினர். நூலகத்தில் ஏற்கனவே இருக்கின்ற புத்தகங்களைத் தவிர முக்கியமானதாகக் கருதப்பட்ட புதிய பதிப்புகளாக மாணவர்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சி தேவைக்கான 5790 புத்தகங்கள் ரூ. 50,22,953,- க்கு பல்கலைக்கழக நூலகம் மற்றும் இணைப்புக் கல்லூரிகளுக்காக வாங்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் அச்சகத்துறை

வெளியீடுகள் மற்றும் மக்கள் தொடர்பு இயக்கத்தின் கீழ் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் அச்சகத்துறை பல்கலைக்கழங்களின் அனைத்து பதிப்புகளையும் வெளியிடுகிறது. இந்த அச்சகத்துறை நவீன தொழில்நுட்ப அச்சடிக்கும் கருவிகளை கொண்டுள்ளது. 2014-15 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள வெளியீடுகள்.

வ. எண்	விபரங்கள்	பக்கங்கள் எண்ணிக்கை
1.	புத்தகங்கள் மற்றும் சிறுபுத்தகங்கள்	36502
2.	சிறு வெளியீடு, துண்டு வெளியீடு மற்றும் இதழ்கள்	30750
3.	சான்றிதழ்கள்	15665
4.	சஞ்சிகைகள்	3000
5.	உறைகள்	13650
6.	தரமான மேலுரை மற்றும் அழைப்பிதழ்கள்	6574
7.	குறிப்பு அட்டைகள்	1505
8.	கடிதவரைவுத்தாள்	5550
9.	வாழ்த்து அட்டைகள்	1500
10.	மற்றவை	481595
	மொத்தம்	**596291**

3.5. திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம்

தொலைதூரக் கல்வித் திட்டம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம் ஏப்ரல் 2005 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. தொலைதூரக் கல்வித் திட்டம் வாயிலாக சான்றிதழ் பாடங்கள், இளநிலைப் பண்ணைத் தொழில்நுட்ப பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, முதுநிலை பட்டயம் மற்றும் முதுநிலைப பட்டப் படிப்புகள் பல்வேறு பிரிவைச் சார்ந்த உழவர்கள், தொழில் முனைவோர், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் இதர கல்வி கற்போர் பயன்பெறும் வண்ணம் நடத்தப்படுகின்றன. கிராமப் பகுதிகளில் வேளாண்மைச் சார்ந்த தொழிற்சாலைகள் துவங்குவதற்கு ஏதுவாகவும், தொலைதூரக் கல்வியில் ஆர்வமுள்ளவர்களுக்கு பயனளிக்கும் வண்ணம் இப்பாடங்கள் நடத்தப்படுகின்றன. திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக 2014 – 2015 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பாடங்கள் நடத்தப்பட்டன.

சான்றிதழ் பாடங்கள்

- நவீன கரும்பு சாகுபடித் தொழில் நுட்பங்கள்
- காய்கறி விதை உற்பத்தி
- தோட்டக்கலைப் பயிர்களுக்கான நாற்றாங்கால் தொழில் நுட்பங்களும் மற்றும் பயிர்ப் பெருக்க முறைகளும்
- காளான் வளர்ப்பு
- பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதப்படுத்துதல்
- தரிசு நில மேம்பாடு
- திடக்கழிவு மேலாண்மை மற்றும் மண்புழு உரம் தயாரித்தல்
- பண்ணைக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பழுது பார்த்தலும், பராமரித்தலும்
- தேனீ வளர்ப்பு
- பருத்தி சாகுபடித் தொழில் நுட்பங்கள்
- தென்னை சாகுபடித் தொழில் நுட்பங்கள்
- அலங்காரத் தோட்டம் அமைத்தல்
- மூலிகைப் பயிர்கள்
- ரொட்டி மற்றும் சாக்லேட் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள்
- மலர்கள் சாகுபடி
- நீர் மேலாண்மை

இளநிலை பண்ணைத் தொழில்நுட்பம் (3 ஆண்டுகள் – 6 பருவங்கள்)

இளநிலை பண்ணைத் தொழில்நுட்பம் பட்டப் படிப்பு உலக அளவிலேயே முதன்முறையாக விவசாயிகளுக்கென்றே வழங்கப்படும் ஒரு முன்னோடித் திட்டமாகும். தாம் ஈடுபடும் விவசாய தொழிலில், தான் ஒரு பட்டதாரியாக விளங்கிடவும், அனைத்து வேளாண் தொழில்நுட்பங்களையும் தெரிந்து கொண்டு சிறந்த தன்னம்பிக்கையை பெறும் வண்ணமும், தாமும் ஒரு பட்டதாரி என்ற சமூக அங்கீகாரத்தை விவசாயிகள் பெற்றிடும் வண்ணமும் இத்தொழில்நுட்ப பட்டப்படிப்பு உள்ளது. 10ம் வகுப்பு வரை படித்த 27 வயது நிரம்பிய கிராமப்புற மற்றும் விவசாய பெருமக்களுக்கு இப்பட்டப் படிப்பு வழங்கப்படுகிறது.

முதுநிலை பட்டயப் படிப்புகள்
(1 ஆண்டு – 2 பருவங்கள்)

- மூலிகைப் பயிர் உற்பத்தி மற்றும் தரக்கட்டுப்பாடு
- உணவு அறிவியல் மற்றும் பதப்படுத்துதல்
- உணவு நுட்பவியல்
- உயிர் தகவலியல்
- ஆற்றல் மேலாண்மை

முதுநிலை பட்டப் படிப்புகள்
(2 ஆண்டு – 4 பருவங்கள்)

- முதுநிலை வணிக மேலாண்மை
- முதுநிலை சுற்றுச்சூழல் மேலாண்மை
- முதுநிலை கரும்பு உற்பத்திக்கான தொழில்நுட்பங்கள்

2014-2015 - க்கான மாணவர் சேர்க்கை பட்டியல்

வ. எண்	பாடங்கள்	சேர்ந்துள்ள மாணவர்கள்
I	**முதுநிலை பட்டப் படிப்பு**	
1.	முதுநிலை வணிக மேலாண்மை	28
2.	முதுநிலை சுற்றுச்சுழல் மேலாண்மை	15
3.	முதுநிலை கரும்பு உற்பத்திக்கான தொழில்நுட்பங்கள்	25
II	**இளநிலை பண்ணைத் தொழில்நுட்பம்**	105
III	**சான்றிதழ் பாடங்கள்**	316

சான்றிதழ் பாடங்கள்	சேர்க்கப்பட்ட மாணவர்கள்
நவீன கரும்பு சாகுபடி தொழில் நுட்பங்கள்	-
தோட்டக்கலைப் பயிர்களுக்கான நாற்றங்கால் தொழில்நுட்பங்களும், பயிர்ப்பெருக்க முறைகளும்	19
காளான் வளர்ப்பு	72
பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதப்படுத்துதல்	11
பண்ணைக் கருவிகள் மற்றும் இயந்திரங்களைப் பழுது பார்த்தலும், பராமரித்தலும்	-
திடக்கழிவுகளும், மண்புழு உரம் தயாரித்தல் தொழில்நுட்பங்களும்	-
தேனீ வளர்ப்பு	-
தென்னை சாகுபடித் தொழில் நுட்பங்கள்	-
பருத்தி சாகுபடித் தொழில் நுட்பங்கள்	-
அடுமனைப் பொருட்கள், மிட்டாய் மற்றும் சாக்லேட் தயாரிக்கும் தொழில் நுட்பங்கள்	17
அங்கக வேளாண்மை	110
பட்டுப்புழு வளர்ப்பு தொழில் நுட்பங்கள்	27

நவீன பாசன முறை மேலாண்மை	-
அலங்காரத் தோட்டம் அமைத்தல்	60
மூலிகைப்பயிர்கள்	-
மலர் சாகுபடி தொழில் நுட்பங்கள்	-
மொத்தம்	**316**

இவ்வியக்ககத்தின் வழியாக நடத்தப்பட்ட விழிப்புணர்வுக் கருந்தரங்குகள் / கூட்டங்கள்

நாள்	இடம்	நிகழ்ச்சி
14.06.2014	பூளுவப்பட்டி கிராமம், பேரூர்	முதன்மையர் (விவசாயம்), அவர்களால், இளங்கலைபாடத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட தேசிய சமுதாய பணி மூலம், பூளுவப்பட்டி கிராமத்தில், "உழவர்களுக்கான தொலைதூரக்கல்வி பாடத்திட்டங்கள், பயிற்சிகள் மற்றும் வாய்ப்புகள்" பற்றி கிராம மக்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.
19.07.2014 21.07.2014	கொடிசியா வளாகம்	கொடிசியா வளாகத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற அக்ரி இன்டெக்ஸ் -2014 விழாவில், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தில் நடத்தப்படும் பாடத்திட்டங்கள் பற்றி விழாவிற்கு வந்த அனைவருக்கும் எடுத்துரைக்கப்பட்டது.
24.07.2014	திறந்த வெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்	புதிய தலைமுறை தொலைக்காட்சி நேர்காணல் நிகழ்ச்சியில், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தில் நடத்தப்படும் பாடத்திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.
22.07.2014	திறந்த வெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககம் தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம்	எஸ். என். எஸ். பொறியியல் கல்லூரி, குரும்பபாளையம், கோயம்புத்தூர் - 7 இளநிலை பொறியியல் மாணவர்களுக்கு திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தில் நடத்தப்படும் பாடத்திட்டங்கள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.
08.08.2014	அண்ணா கலையரங்கம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்	தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் சமுதாயகல்லூரி ஒருங்கிணைப்பாளர்களுக்கு சான்றிதழ் பாடத் திட்டம் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது.

28.08.2014	ஜி. வி. ஜி விசாலாட்சி பெண்கள் கல்லூரி உடுமலைப்பேட்டை.	ஜி. வி. ஜி விசாலாட்சி பெண்கள் கல்லூரியில், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தில் நடத்தப்படும் சான்றிதழ் பாடத்திட்டங்கள் பற்றி ஒருநாள் கருத்தரங்கு நடைப்பெற்றது.
30.12.2014	தென்னை ஆராய்ச்சி நிலையம் வேப்பங்குளம்	தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளத்தில் நடைபெற்ற, தென்னை சாகுபடி தொழில் நுட்பங்கள் சான்றிதழ் பாடத்திட்டத்தின் நிறைவு விழாவில், பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கி திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தில் நடத்தப்படும் பாடத்திட்டங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் - 2014-15

வ. எண்	பொருள்	நிறுவனம்
1.	தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழம் கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாடு திறந்த வெளி பல்கலைக்கழகம் சென்னை, இரண்டுக்கும் இடையேயான புரிந்துணர்பு ஒப்பந்தம் ஜீலை 4, 2014-ல் கையெழுத்திடப்பட்டது. இதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தில் நடைபெறும் 16 சான்றிதழ் பாடத்திட்டங்களை தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் சமுதாய கல்லூரி மூலமாக நடத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.	தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், மற்றும் தமிழ்நாடு திறந்த வெளி பல்கலைக்கழகம், சென்னை.

3.6. தேர்வுக் கட்டுபாட்டகம்

தேர்வுக்கட்டுப்பாட்டகம், 32 கல்லூரிகளில் பதிமூன்று இளநிலை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பட்டப்படிப்புகள், 30 முதுநிலை பட்டப்படிப்புகள், 25 முனைவர் பட்டப்படிப்புகள், இரண்டு பட்டயப்படிப்புகள் மற்றும் ஐந்து தொலை தூர மற்றும் திறந்தவெளி பட்டப்படிப்புகளுக்கு தேர்வு தொடர்பான செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது. முக்கிய செயல்பாடுகளான் வினாத்தாள் தயாரித்தல், தேர்வுகளை நடத்துதல், விடைத்தாள் திருத்துதல், மதிப்பெண் பட்டியல் வழங்குதல் மற்றும் தேர்வு முடிவுகளை அறிவித்தல் போன்ற செயல்கள் இத் தேர்வுக்கட்டுப்பாட்டகத்தால் அனைத்து பட்ட மற்றும் பட்டயப் படிப்புகளுக்கும் தொடர்ந்து சீர்பட நடத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட பலவிதமான பணிகளை நடத்த தேர்வுக்கட்டுபாட்டகம் ஐந்து பிரிவுகளாக இயங்குகிறது. அவை இளநிலை பிரிவு, முதுநிலை பிரிவு, முனைவர் பிரிவு, பட்டயப் படிப்பு பிரிவு மற்றும் தெலைதூர மற்றும் திறந்தவெளி பிரிவுகள் ஆகும். இப்பிரிவுகளின் 2014 -15 ம் வருட செயல்பாடுகள் இங்கு தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட வரைமுறைகள்

- வினாத்தாள்களின் தரத்தை மேம்படுத்த நிபுணர்களைக் கொண்ட குழுவைக் கொண்டு வினா வங்கி முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- சுற்றுச் சூழலுக்கு உகந்த கிழிக்க இயலாத பாலிபுரொப்பிலின் தாள்களைக் கொண்டு ஒருங்கிணைந்த தேர்ச்சி அட்டை உருவாக்கப்பட்டுள்ளது.
- புதிய தேர்ச்சி அட்டை, மதிப்பெண் பட்டியல் ஆகியவற்றில் மாணவர்களின் புகைப்படத்துடன் கூடிய தனித்துவம் வாய்ந்த பாதுகாப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- விடைத் தாள்கள் அமெரிக்க ஏ4 அளவீட்டில் அச்சடிக்கப்பட்டு விடைத் தாள்களின் பின்னணியில் பல்கலைக் கழக முத்திரையும் வரிக்குறிகளும் அச்சிடப்பட்டு தேர்வுகளில் வழங்கப்படுகின்றன.
- காகிதமில்லாத நவீனத் தேர்வு முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இத்தேர்வு முறையில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மாணவர்களின் விடைத்தாள்களை இணையதளத்தில், கடவுச் சொல் மூலம் பதிவிறக்கம் செய்து ஆய்வு செய்ய இயலும். முதுகலைப் பட்டப் படிப்புகளில், முப்பருவமுறை செயல்முறைப் படுத்தப்பட்டுள்ளது.

காகிதமில்லாத நவீனத் தேர்வு முறை (Paperless exam system-Exam Pad) அறிமுகம்

உலகில் முதல் முறையாக, காகிதமில்லாத நவீன, சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த தேர்வு முறை 2013-2014 ஆம் ஆண்டு தேர்வுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தேர்வு முறை, TRIARD பெரம்பலூர், APAC கலவை, IIAT துறையூர், CAT தேனி ஆகிய நான்கு கல்லூரிகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் முக்கிய அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- காகிதமில்லாத நவீனத் தேர்வு முறையில், வினாத்தாள் உருவாக்கம் முதல் திருத்துதல், முடிவுகளை அறிவித்தல் போன்றன தாள்களின் உபயோகமின்றி செய்யப்பட்டு வந்துள்ளது.
- இந்த முறையினால் எழுத்து முறைத் தேர்வுகளைப் போன்றே எங்கு வேண்டுமாயினும் தேர்வுகளை நடத்த இயலும்.
- இடைப் பருவத் தேர்வுகள், பருவத் தேர்வுகளை மின்னணு மூலமாகவே நடத்தலாம்
- உயிரிக் குறியீடான (biometric) விரல் ரேகை அச்சுப்பதிவின் மூலமாக மட்டுமே தேர்வு அட்டையின் உள் நுழைய இயலும். இதன் மூலம் அம்மாணவர் மட்டுமே தேர்வு எழுத இயலும்.
- தேர்வு அட்டையில் உள்ள புகைப்படக் கருவி மூலம் தேர்வு எழுதும் மாணவரின் நிழற்படம் பதிவாகும். ஆதலால் தேர்வு எழுதிய பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் அம் மாணவரின் உறுதித் தன்மையை பரிசோதனை செய்து கொள்ள முடியும்.

இளநிலை பட்டப்படிப்பு

2014-15 கல்வியாண்டில், 9742 மாணவர்கள் பதிமூன்று வேறுபட்ட பாடத் திட்டங்களில் 21 கல்லூரிகளில் பதிவு செய்தனர். அனைத்து பாடப்பிரிவுகளிலும் பதிவு அட்டைகள் அங்கீகாரம் செய்யப்பட்டன. இறுதி தேர்வு நடத்துவதற்கு தேவையான, தேர்வு அட்டவணை, விடைத்தாள்கள் மற்றும் முகப்பு தாள்கள் தயார் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. 3193 வினாத்தாள்கள் வெவ்வேறு பாடங்களுக்கு தொகுக்கப்பட்டு வழக்கமான அரைவருட (பருவத்) தேர்வுகள், மறுதேர்வுகள் மற்றும் சிறப்பு அரைவருடத் தேர்வுகள் மே - ஜூலை 2014, ஆகஸ்ட் 2014, அக்டோபர் - நவம்பர் 2014 மற்றும் டிசம்பர் 2014 - ஜனவரி 2015 மாதங்களில் 1999, 2003, 2007 மற்றும் 2011 பாடத்திட்டங்களில் நடத்தப்பட்டன. மொத்தம் 93,648 விடைத்தாள்கள் திருத்தப்பட்டு மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியல்கள் வழங்கப்பட்டன. இறுதியாண்டு எட்டாம் பருவத்தேர்வை முடித்த மாணவர்களில் 1123 பேர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டு ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

காகிதமில்லாத நவீனத்தேர்வு முறை (Paperless exam system- Exam Pad), 4 கல்லூரிகளில், இளநிலை பட்டப்படிப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, 15 பாடங்களில் தேர்வுநடத்தப்பட்டது. 2484 மாணவர்கள் இதில் பங்கேற்று அவர்களின் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியல்கள் வழங்கப்பட்டது.

பல்வேறு கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்புகளில் 2014-15 ஆம் கல்வியாண்டில், படிப்பை முடித்து வெளியே சென்ற மாணவர்களின் விவரங்கள் அட்டவணை (1) ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1. இளநிலை பட்டப்படிப்புகளில் மாணவர்களின் தேர்ச்சி விவரம் (2014 – 2015)

வ. எண்	பட்டம்	கல்லூரி வளாகம்	தேர்ச்சி பெற்றவர்கள்
1	இளநிலை (வேளாண் அறிவியல்)	கோவை	102
		மதுரை	93
		கிள்ளிகுளம்	83
		திருச்சிராப்பள்ளி	87
		காரைக்கால்	66
		கலவை	104
		பொள்ளாச்சி	79
		பெரம்பலூர்	61
		தேனி	42
2	இளநிலை (தோட்டக்கலை)	பெரியகுளம்	74
		கலவை	11
3	இளநிலை (வனவியல்)	மேட்டுப்பாளையம்	28
4	இளநிலை (மனை இயல்)	மதுரை	24
5	இளநிலை (வேளாண் பொறியியல்)	குமுளூர்	48
6	இளநிலை தொழில் நுட்பம் (உணவு பதனிடுதல்)	கோவை	30
7	இளநிலை தொழில்நுட்பம் (ஆற்றல் மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல்)	கோவை	37
8	இளநிலை தொழில்நுட்பம் (தோட்டக்கலை)	கோவை	28
9	இளநிலை தொழில்நுட்பம் (உயிர் தொழில்நுட்பம்)	கோவை	47
10	இளநிலை தொழில்நுட்பம் (உயிர்த்தகவலியல்)	கோவை	28
11	இளநிலை தொழில்நுட்பம் (வேளாண் தகவல் தொழில் நுட்பம்)	கோவை	29
12	இளநிலை (வேளாண் வணிக மேலாண்மை)	கோவை	22
		மொத்தம்	**1123**

முது நிலை பட்டப்படிப்பு

முதுநிலை அறிவியல் பட்டப்படிப்பிற்காக (2014-15) எம்.எஸ்சி. (விவசாயம்), எம்.டெக்., எம்.பி.ஏ. போன்ற பிரிவுகளில், 996 மாணவ, மாணவியர் சேர்ந்துள்ளனர். இவர்களுக்கு தேர்வாளர்களிடமிருந்து 560 பாடங்களுக்குத் தேவையான வினாத்தாள்கள் பெறப்பட்டு தேர்வு நடத்தப்பட்டது. இத்தேர்வில், 30 பாடப்பிரிவுகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் பங்கேற்றனர். மேலும், அரையாண்டு இறுதி தேர்வு நடத்துவதற்கு தேவையான தேர்வு அட்டவணை, விடைத்தாள்கள் மற்றும் முகப்பு தாள்கள் தயார் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. அனைத்து பாடப்பிரிவுகளிலும் பதிவு அட்டைகள் அங்கீகாரம் செய்யப்பட்டன. அனைத்து பாடப்பிரிவுகளுக்கான இடைத்தேர்வு மற்றும் வருகைப் பதிவு விபரங்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டன.

விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, 466 மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியல்கள் வழங்கப்பட்டன. இறுதியாண்டு பருவத்தேர்வை முடித்த மாணவர்களில் 331 பேர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டு 142 ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. முதுநிலை பட்டப்படிப்புகளுக்கு 2014-15 ம் கல்வி ஆண்டில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விவரங்கள் அட்டவனை (2) இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவனை 2. முதுநிலை பட்டப்படிப்புகளில் மாணவர்கள் தேர்ச்சி விவரம் (2013-14)

வ. எண்	துறை	தேர்ச்சி		வ. எண்	துறை	தேர்ச்சி
1	பட்டு புழுவியல்	7		11	வேளாண் வானிலையியல்	3
2	வேளாண் பொருளாதாரம்	10		12	உயிர் தொழில் நுட்பம்	13
3	வேளாண் பூச்சியியல்	36		13	சுற்றுப்புற சூழல் அறிவியல்	2
4	வேளாண் விரிவாக்கம்	13		14	நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்	3
5	வேளாண் நுண்ணுயிரியல்	3		15	வேளாண் பாதுகாப்பு மற்றும் உணவு பொறியியல்	7
6	உழவியல்	38		16	உயிர் ஆற்றல்	1
7	பயிர் வினையியல்	11		17	சுற்றுப்புற சூழல் பொறியியல்	1
8	பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்	29		18	மண் மற்றும் நீர் பாதுகாப்பு பொறியியல்	11
9	நூற் புழுவியல்	4		19	பண்ணை எந்திரவியல்	8
10	பயிர்நோயியல்	21		20	வணிக மேலாண்மை	16

21	விதை தொழில்நுட்பம்	14		26	உயிர் தொழில் நுட்பம் மற்றும் வணிக மேலாண்மை	1
22	மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல்	18		27	வனவியல்	12
23	பழவியல்	7		28	உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து	4
24	காய்கறி அறிவியல்	12		29	உணவு பதனிடுதல்	8
25	மலரியல் மற்றும் இயற்கை நிலக்காட்சியமைப்பு	9		30	வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள்	9
					மொத்தம்	**331**

முனைவர் பட்டப் படிப்பு

முனைவர் பட்டப் படிப்பில், 2014-15 ஆம் ஆண்டில், 195 மாணவ, மாணவிகள் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்பொறியியல், வனவியல் மற்றும் மனையியல் பாட பிரிவிகளில் 25 வகையான முனைவர் படிப்புகளில் 215 பாடங்களைத் தேர்வு செய்து பயின்றனர். மொத்தம் 251 வினாத்தாள்கள் தயார் செய்யப்பட்டு தேர்வுகள் நடத்தப்பட்டன. 2170 விடைத்தாள்கள் திருத்தப்பட்டு பாடவாரியான மதிப்பெண் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. முனைவர் படிப்பில் தேர்ச்சி பெற்ற 280 மாணவர்களுக்கு முடிவுகள் வெளியிடப்பட்டு, 131 ஒருங்கினைந்த மதிப்பெண் பட்டியல் கொடுக்கப்பட்டது. 2014-15 கல்வி ஆண்டில் முனைவர் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விவரங்கள் அட்டவனை (3) ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவனை 3. முனைவர் பட்டப்படிப்புகளில் மாணவர்கள் தேர்ச்சி விவரம் (2014-15)

வ. எண்	துறை	தேர்ச்சி பெற்றவர்கள்
1	பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்	32
2	மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல்	14
3	காய்கறி அறிவியல்	15
4	வேளாண் வணிக மேலாண்மை	12
5	வேளாண் நுண்ணுயிரியல்	11
6	வேளாண் பொருளாதாரம்	11
7	மண் மற்றும் நீர் பாதுகாப்பு பொறியியல்	8
8	பழவியல்	12
9	வாசைன பயிர்கள், மலைத்தோட்டப் பயிர்கள், மூலிகை மற்றும் நறுமண பயிர்கள்	8

10	உழவியல்	23
11	வேளாண் பூச்சியியல்	27
12	பயிர் வினையியல்	4
13	உணவு பதனிடுதல் பொறியியல்	0
14	மலரியல் மற்றும் இயற்கை நிலக்காட்சியமைப்பு	8
15	பட்டு புழுவியல்	2
16	வேளாண் விரிவாக்கம்	10
17	பயிர் நோயியல்	17
18	உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து	10
19	பயிர் நூற்புழுவியல்	4
20	விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்	5
21	வேளாண் வானிலையியல்	3
22	உயிர் ஆற்றல்	5
23	வனவியல்	7
24	பண்ணை எந்திரவியல்	3
25	உயிர் தொழில் நுட்பம்	9
26	சுற்றுப்புற சூழல் அறிவியல்	2
27	வேளாண் பதனிடுதல் மற்றும் உணவு பொறியியல்	18
	மொத்தம்	280

பட்டயப்படிப்பு

பட்டயப்படிப்பு (வேளாண்மை) மொத்தம் 14 மையங்களில் நடைபெற்று வருகிறது. இதில் 8 தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக ஆராய்ச்சி மையங்களும் 6 வேளாண்மைப் பல்கலை கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களும் அடங்கும். 2014-15 கல்வியாண்டில் மொத்தம் 2528 மாணவர்கள் பட்டயப்படிப்பு வேளாண்மையிலும் 422 மாணவர்கள் தோட்டக்கலையிலும் சேர்ந்து படித்து வருகிறார்கள்.

மொத்தம், 86 வினாத்தாள்கள் தயார் செய்யப்பட்டு தேர்வுகள் நடத்தப்பட்டன. 15519 விடைத்தாள்கள் திருத்தப்பட்டு பாடவாரியான மதிப்பெண் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் சேர்ந்த 2950 மாணவர்களில் 656 பேர் தேர்ச்சி பெற்று சான்றிதழ் வழங்கப்பெற்றனர். 2014-15 கல்வி ஆண்டில் பட்டயப்படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விவரங்கள் அட்டவனை (4) ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவனை 4. பட்டயப் படிப்பு மாணவர்கள் தேர்ச்சி விவரம் (2014-15)

வ. எண்	வளாகம்	தேர்ச்சி பெற்றவர்கள்
1	ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் வேளாண்மை மற்றும் கிராமபுற வளர்ச்சி நிறுவனம், கோம்புத்தூர்	52
2	சகாயத்தோட்டம் வேளாண்மை மற்றும் கிராமபுற வளர்ச்சி நிறுவனம், தக்கோலம்	57
3	தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் கிராமபுற வளர்ச்சி நிறுவனம், பெரம்பலூர்- விவசாயம்	39
4	தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் கிராமபுற வளர்ச்சி நிறுவனம், பெரம்பலூர் - தோட்டக்கலை	32
5	சி. சுப்ரமணியம் வேளாண்மை கல்விநிலையம், திண்டிவனம்	49
6	எம். எஸ். சுவாமிநாதன் வேளாண்மை கல்விநிலையம், பவானிசாகர்	56
7	வேளாண்மைக் கல்வி நிலையம், அம்பாசமுத்திரம்	57
8	வேளாண்மைக் கல்வி நிலையம், அருப்புக் கோட்டை	40
9	வானவராயர் வேளாண்மை நிறுவனம், பொள்ளாச்சி - விவசாயம்	45
10	வானவராயர் வேளாண்மை நிறுவனம், பொள்ளாச்சி - தோட்டக்கலை	23
11	வேளாண்மைக் கல்வி நிலையம், கோவில்பட்டி	50
12	ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி, கலவை	57
13	வேளாண்மைக் கல்வி நிலையம், பேச்சிப்பாறை	49
14	வேளாண்மைக் கல்வி நிலையம், தஞ்ஞாவூர்	26
15	வேளாண்மைக் கல்வி நிலையம், குடுமியான்மலை	24
	மொத்தம்	**656**

திறந்தவெளி மற்றும் தொலை தூரக் கல்வித்திட்டப் படிப்பு

திறந்தவெளி மற்றும் தொலை தூரக் கல்வித் திட்டத்தின்மூலம் மூன்று முதுநிலை பட்டப்படிப்புகள் முறையே வணிக மேலாண்மை கரும்பு தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகிய பாடங்களும், இரண்டு முதுநிலை பட்டயப்படிப்புகள் முறையே ஆற்றல் மேலாண்மை மற்றும் உணவு அறிவியல் பதனிடுதல் ஆகிய படிப்புகளும் வழங்கப்பட்டு வருகிறது. 2014-15 கல்வி ஆண்டில் மொத்தம் 206 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். மொத்தம், 27 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர் (அட்டவனை 5). மொத்தம் 97 பாடங்களுக்கு இறுதித் தேர்வுகள் நடத்தப்பட்டு 750 விடைத்தாள்கள் திருத்தப்பட்டன.

அட்டவனை 5. திறந்தவெளி மற்றும் தொலை தூரக் கல்வித்திட்டத்தில் மாணவர்கள் தேர்ச்சி விவரம் (2014-15)

வ. எண்	பாடங்கள்	தேர்ச்சி பெற்றவர்கள்
1	முதுநிலை (சுற்று சூழல் மேலாண்மை)	3
2	முதுநிலை (கரும்பு தொழில்நுட்பம்)	6
3	முதுநிலை வணிக மேலாண்மை	9
4	முதுநிலை பட்டயம் (உணவு அறிவியல் மற்றும் பதனிடுதல்)	3
5	முதுநிலை பட்டயம் (ஆற்றல் மேலாண்மை)	4
6	முதுநிலை பட்டயம் (மருத்துவப் பயிர்கள் உற்பத்தி மற்றும் தரக்கட்டுப்பாடு	2
	மொத்தம்	**27**

தேர்வுக்கட்டுப்பாட்டகத்தில், 2014 -15ம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் அட்டவனை 6 ல் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது. 2014 -15 கல்வியாண்டில், 14262 மாணவர்கள் பலதரப்பட்ட இளநிலை அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், முதுநிலை, முனைவர் பட்டப்படிப்புகள், பட்டயப்படிப்புகள் மற்றும் தொலைதூர மற்றும் திறந்தவெளி பட்டப்படிப்புகளில் சேர்ந்துள்ளனர். தேர்ச்சி பெற்ற 13746 மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. படிப்பில் தேர்ச்சி பெற்ற 1709 மாணவர்களுக்கு முடிவுகள் வெளியிடப்பட்டு 972 ஒருங்கினைந்த மதிப்பெண் பட்டியல் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவனை 6. மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் 2014 - 15

வ. எண்	செயல்பாடுகள்	இளநிலை	முதுநிலை	முனைவர்	பட்டயப் படிப்பு பிரிவு	தொலைதூர மற்றும் திறந்த வெளி பிரிவு	மொத்தம்
1	மாணவர்கள் சேர்க்கை	9742	996	195	2950	379	14262
2	நடத்தப்பட்ட தேர்வுகள்	18837	560	261	86	97	19841
3	தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள்	3193	-	251	52	0	3496
4	திருத்தப்பட்ட விடைத்தாள்கள்	93648	6476	2170	15519	750	118563
5	தேர்வு முடிவுகள்	1123	311	280	656	36	2406
6	மதிப்பெண் பட்டியல்	12114	466	147	888	131	13746
7	ஒருங்கினைந்த மதிப்பெண் பட்டியல்	699	142	131	0	0	972
8	பட்டம் / பட்டயம் வழங்கப்பட்டது	725	311	142	495	36	1709

ஆராய்ச்சி நிகழ்வுகள்

80வது அறிவியலார் மாநாடு
29 – 30, மே 2014

16.06.2014 அன்று மதுரையில் உணவு தொழில் நுட்ப ஆய்வகம் நிறுவப்பட்டது.

21.07.2014 அன்று ஆடுதுறையில் நடைபெற்ற மண்டல ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க குழுக் கூட்டம்

சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பார்வையாளர்கள்

09.07.2014 அன்று முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன், அவர்கள் வணிக வள மேம்பாட்டு மையத்திற்கு வருகை தந்தார்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் தலைமை இயக்குனர் முனைவர் ஐயப்பன் அவர்கள் கன்னியாகுமரி வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு வருகை தந்தார்

NETAFIRM நிறுவனத்தின் தலைவர் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை க்கு வருகை தந்தார்

இ- கிராந்த் திட்டத்தின் தலைவர் முனைவர் அருண் குமார் ஜெயின் 21.03.2014 அன்று நூலகத்தைப் பார்வையிட்டார்

18.04.2014 அன்று உயிரி தொழில் நுட்ப துறையின் ஆலோசகர் முனைவர் எஸ்.ஆர். ராவ் அவர்கள் வருகை புரிந்தார்

மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் பணிப்பட்டறைகள்

பயிர் இரகங்கள் உழவர்கள் உரிமைகள்
பாதுகாப்புச் சட்டம் 2001
குறித்த பணிப்பட்டறை - 22.01.2015

பண்ணைக் கருவிகள் மற்றும்
இயந்திரங்கள் குறித்த பணிப்பட்டறை - 04.02.2015

மல்லிகை மலர் தர நிர்ணய மாநாடு – 05.02.2015



வேளாண்மை மரபியல் கருத்தரங்கு - 16.02.2015

விதை உற்பத்தியில் அறுவடைக்கு முன்னும் பின்னும்
கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள்
குறித்த குளிர் கால பள்ளி

பயிர் சாகுபடியில் புதுமை மற்றும்
சவால்கள் குறித்த கருத்தரங்கு
16-17, டிசம்பர் 2014

மாநாடுகள், கருத்தரங்குகள்

பாசிகள் குறித்த கருத்தரங்கு - 29.09.2014

31வது ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தின் மாநாடு 22- 24, டிசம்பர் 2014

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மற்றும் டியூபான்ட் நிறுவனம் வீரிய ஒட்டு நெல் தொழில் நுட்பம் குறித்த வட்ட மேசை மாநாடு 23.07.2014

நறுமணப் பயிர்களில் தேசிய மாநாடு - 05.03.2015

55வது நுண்ணுயிர் அறிவியலார் மாநாடு 12-14, நவம்பர் 2014

இந்திய நச்சுயிரி சங்கத்தின் தேசிய மாநாடு 18-20, டிசம்பர் 2014

4. ஆராய்ச்சி

4.1. வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள் மற்றும் புதிய பண்ணைக்கருவிகள்

வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள்

நெல் டிகேஎம் 13

நெல் டிகேஎம் 13 என்ற இரகமானது 130 நாட்களில் சராசரி விளைச்சலாக எக்டருக்கு 5938 கிலோ தரவல்லது. இது காவிரி டெல்டா பகுதியில் தாளடிப் பட்டத்திற்கும் (செப்டம்பர் விதைப்பு), இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் சம்பா பட்டத்திலும் (ஆகஸ்ட் - செப்டம்பர் விதைப்பு) பயிரிட ஏற்றது. நடுத்தர உயரத்துடன், அதிகத் தூர்கள் மற்றும் சாயாத தன்மையுடைய இந்த இரகம் கோ(ஆர்) 49 மற்றும் பிபீடி 5204 இரகங்களைக் காட்டிலும் அதிக மகசூல் தரவல்லது. அதிகபட்ச மகசூலாக 9050 கிலோ , எக்டர் வரை தந்துள்ள இந்த இரகம் இலைச்சுருட்டுப் புழு, குருத்துப் பூச்சி மற்றும் பச்சை தத்துப்பூச்சி, குலைநோய், துங்ரோ நோய், செம்புள்ளி மற்றும் இலை உறை அழுகல் நோய் ஆகியவற்றுக்கு மிதமான தாங்கும் திறன் கொண்டது. புழுக்கத்தில் உள்ள கோ(ஆர்) 49 மற்றும் பிபீடி 5204 நெல் இரகங்களை விட பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல்களைத் தாங்கி வளரக்கூடியது. நல்ல அரவைத்திறன் மற்றும் முழு அரிசி காணும் திறனுடைய (முறையே 75.5 சதவீதம் மற்றும் 71.7 சதவீதம்) இந்த இரகம் மத்திம சன்ன வெள்ளை அரிசியுடன் குறைவான ஆயிரம் மணிகளின் எடை கொண்டது. இந்த இரகம் சமைத்தவுடன் பிபீடி 5204 இரகத்தை போல் உள்ளது.

நெல் சிஆர் 1009 சப் 1

பயிர் இனப்பெருக்க வழிமுறைகளில் ஒன்றான அறிமுகம் என்ற வழிமுறையின் மூலம் இந்த வளர்ப்பானது தெரிவு செய்யப்பட்டு உழவர்களின் நலனுக்காக வெளியிடப்படுள்ளது. காவிரியின் தண்ணீர் தேங்கும் பகுதிகளில் நெல் பயிரிடும் உழவர்களின் துயரினைப் போக்க வந்த ஒரு வரப்பிரசாதமாகும் இந்த இரகம். பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள பன்னாட்டு நெல் ஆராய்ச்சி நிறுவனத்தால் பயிர் மூலக்கூறு ஆராய்ச்சியின் பயனால் உருவானதாகும். இந்த சப் 1 இரகம் நட்டவுடன் 15 நாட்கள் வரை நீரில் முழ்கினாலும் தாங்கி வளரக்கூடிய திறன் கொண்டது. அதிக மகசூல் தரவல்ல நீண்ட கால இரகம் (155 நாட்கள்) சராசரி மகசூலாக எக்டருக்கு 5759 கிலோ தந்துள்ளது. அணுசரணை ஆராய்ச்சித் திடல் பரிசோதனை 54 இடங்களில் செய்ததில் 15 இடங்களில் எக்டருக்கு 6000 கிலோவுக்கும் அதிகமான மகசூல் தந்துள்ளது. இலைப்புள்ளி நோய், குலை நோய், புகையான் மற்றும் வெண்முதுகு தத்துப்பூச்சி, ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத் திறனுடன் குட்டை பருமன் அரிசியுடன் அதிக அரவைத்திறனும் முழு அரிசி காணும் திறனும் கொண்டது. அதிக மாவுசத்து இருப்பதால் இட்லி தயாரிப்பதற்கு மிகச் சிறந்தது. தமிழ் நாட்டில் சம்பா பருவத்திற்கும் ஏனைய நீண்ட கால இரகங்கள் சாகுபடி செய்யும் பகுதிகளுக்கும் ஏற்றது. இந்த இரகம் சிஆர் 1009 நெல் இரகத்திற்கு மாற்று இரகமாக பரிந்துரை செய்யப்படுகிறது.

நெல் எம்டியு 6

இந்த இரகம் குறுகிய காலத்தில் (110-115 நாட்கள்) சராசரியாக இறவையில் எக்டருக்கு 6118 கிலோ (ஏடிடீ 43-ஐ விட 9.8 சதம் மற்றும் ஏடிடீ (ஆர்) 45-ஐ விட 10.2 சதம் அதிக மகசூல்) மகசூல் தரவல்லது. அதிக பட்சமாக எக்டருக்கு 9338 கிலோ வரை ஈரோடு மாவட்டம் அய்யம் பாளையத்தில், தந்துள்ளது. நீண்ட சன்ன அரிசியை உடைய இந்த இரகம், சிறந்த சமையல் பண்புகளை உடையது. இதன் பச்சரிசி பொங்கல், அவல் மற்றும் பொரி தயாரிப்பதற்கு மிகவும் ஏற்றது. இந்த இரகம் இலை சுருட்டுப்புழு, தண்டு துளைப்பான், பச்சைத்தத்துப்பூச்சி மற்றும் வெண்முதுகுப்பூச்சி ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத் திறன் உடையது. இந்த இரகத்தை தமிழ் நாட்டில் சொர்ணவாரி, கார், குறுவை, நவரை ஆகிய பருவங்களிலும் ஏனைய குறுகிய கால இரகங்கள் சாகுபடி செய்யும் பகுதிகளிலும் பயிரிடலாம்.

சோளம் கே 12

மானாவாரி சாகுபடி செய்யும் பகுதிகளுக்கு ஏற்ற வெள்ளை நிற தானியம் கொண்ட இந்த இரகம், 95 நாட்களில் மானாவாரியில் எக்டேருக்கு 3123 கிலோ மகசூல் தரவல்லது. இது நடப்பு சாகுபடியில் உள்ள கே.8 சோள இரகத்தின் மகசூலை விட 22.4 சதம் கூடுதல் மகசூலாகும். அதிக பட்சமாக எக்டருக்கு 5300 கிலோ மகசூல் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டையில் கொடுத்து உள்ளது. மானாவாரியில் அதிக தானிய மகசூல் மட்டுமல்லாது அதிக அளவு தீவன மகசூலும் தந்துள்ளது (எக்டேருக்கு 11.9 டன்). நன்கு வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை கொண்ட இந்த இரகம் குருத்து ஈ மற்றும் தண்டு துளைப்பானுக்கு மிதமான எதிர்ப்புத் தன்மையும், அடிச் சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத் தன்மையும் கொண்டது. தென்மாவட்டங்களில் மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற இந்த இரகம் கால்நடைகளில் நன்கு செரிமானமாகிறது.

கோதுமை கோ டபிள்யு 3

வெலிங்டனில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மண்டல நிலையத்தால் உருவாக்கப்பட்ட எச்டபிள்யு 5207 ரொட்டி கோதுமை வளர்ப்பானது, தெற்கு மலை மற்றும் மலைசார்ந்த தமிழக மாவட்டங்களில் நல்ல மகசூல் கொடுக்கக்கூடியது. தமிழகத்தில் நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, சேலம், கரூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் இந்த கோதுமையைப் பயிரிடலாம். குறுகியகால வயதுடைய இந்த வளர்ப்பு 95-100 நாட்களில் அறுவடைக்கு வரக்கூடியது. குளிர்காலத்தில், பருவமழை அதிக அளவு இல்லாத போது உழவர்களுக்கு இந்த இரகம் ஒரு மாற்றுப் பயிராக அமையும். கடந்த பத்தாண்டுகளில் நடத்தப்பட்ட 131 பரிசோதனைகளிலிருந்து இதன் சராசரி தானிய மகசூல் எக்டருக்கு 4076 கிலோவாகும். இந்த இரகமானது நேரான பயிர்த்தோற்றம், நிலையான உயரம் மற்றும் சாயாத செடிகள் முதலிய பண்புகளை பெற்றுள்ளது. தானியங்களின் தரத்தைப் பொறுத்தமட்டில் நிறைந்த புரதம் (11%) மற்றும் அதிக அடர்வு அளவு எண் (45.5) கொண்டுள்ளன. பல்வேறு துரு நோய்களுக்கான எதிர்ப்புத் திறனையும் மற்றும் தரமான தானிய குணாதிசயங்களையும் சீர்தூக்கி பார்த்து இந்த ரொட்டி கோடபிள்யூ 3 இரகம் தமிழ்நாட்டு வேளாண் பெருமக்களின் நன்மை கருதி வெளியிடப்பட்டுள்ளது.

கொத்தவரை எம்டியு 1

இந்த வளர்ப்பானது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இராஜஸ்தான் மாநிலம், ஜோத்பூரில் இயங்கி வரும் மத்திய மானாவாரி பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்திலுள்ள கொத்தவரை வளர்ப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒன்றினை தமிழ்நாடு உழவர்கள் பயனுறும் வண்ணம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். ஒவ்வொரு கனுவிலும் கொத்து கொத்தாக காய்க்கும் தன்மையுடைய இந்த இரகம் அதிக நீளமான பச்சை வண்ண காய்களைக் கொண்டது. இதன் காய்கள் நீளமானவை (14 செ.மீ), செடிக்கு 150-175 காய்கள் வரை காய்க்கக்கூடியது. ஒரு செடியில் 300-350 கிராம் வரை மகசூல் பெறலாம். பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் மிகவும் குறைவு. குறை பாசனத்திலும் மானாவாரியிலும் நல்ல மகசூல் தரவல்லது.

தென்னை வீரிய ஒட்டு இரகம் வி.பி.எம். 5

இருபது வருடங்களுக்கு முன்பாக தென்னையில் வறட்சி தாங்கி வளரும் தன்மை, கொப்பரை அளவு ஆகியவற்றை மேம்படுத்த இந்தியாவிலேயே முதன் முறையாக வேப்பங் குளத்தில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் லட்சத்தீவு சாதாரண நெட்டை x கொச்சின் சைனா நெட்டை என்ற இரு நெட்டை இரகங்களை ஒட்டு செய்து நெட்டை x நெட்டை வீரிய ஒட்டுகள் உருவாக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவ்வாறு செய்யப் பட்ட பரிசோதனை-களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த வீரிய ஒட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வி.பி.எம். 5 நெட்டை x நெட்டை வீரிய ஒட்டு இரகமானது, சராசரியாக ஆண்டிற்கு மரம் ஒன்றுக்கு 161 காய்கள் தரவல்லது. மேலும், இந்த இரகமானது 48-50 மாதங்களிலேயே பூக்கும் திறன் கொண்டது. காய் ஒன்றுக்கு அதிக கொப்பரை (150 கிராம்) எடையும் அதிக எண்ணெய் சத்தும் (70 சதம்) கொண்டது. ஒரு எக்டரில் சுமார் 28175 காய்கள் மூலம் 4.22 டன் கொப்பரையை மகசூலாகப் பெறலாம். இதன் இளம் காய்கள் இளநீருக்கு மிகவும் உகந்தது. ஒரு இளம் காயிலிருந்து சுமார் 285 மிலி சுவையான இளநீர் (4.8 பிரிக்ஸ்) பெறலாம். வி.பி.எம்.5 மானாவரிக்கு ஏற்ற சிறந்த வீரிய ஒட்டு இரகமாகும்.

வெளியிடப்பட்ட புதிய பண்ணைக் கருவிகள்

டிராக்டரால் இயங்கும் மஞ்சள் கரணை விதைக்கும் கருவி

மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகளின் பயனுக்காக டிராக்டரால் இயங்கும் மஞ்சள் கரணை விதைக்கும் கருவி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப் பட்டுள்ளது. இந்த கருவியை 35-45 எச்.பி டிராக்டரை கொண்டு இயக்க முடியும். ஒரே நேரத்தில் மூன்று சால்களில் சீரான இடை வெளியில் மஞ்சள் கரணைகளை விதைக்க முடியும். சால்களுக்கு இடையேயான தூரத்தை தேவைக்கேற்றவாறு மாற்றி அமைக்க முடியும். இக்கருவியைக் கொண்டு நாளொன்றுக்கு ஒரு எக்டர் நிலத்தில் விதைக்கலாம். இக்கருவியின் விலை ரூ. 50,000/-

டிராக்டரால் இழுக்கப்படும் இரு சக்கர டிரெய்லருக்கு திரவ ஆற்றல் கொண்டு நிறுத்தும் கருவி

வேளாண் பொருட்களை ஏற்றிச் செல்ல டிராக்டரில் இணைக்கப்படும் இருசக்கர டிரெய்லரை நிறுத்த எந்தக் கருவியும் இல்லை. டிராக்டர் நிறுத்தப்படும் பொழுது டிரெய்லரும் தானாக நிற்கும். டிரெய்லரை இவ்வாறு நிறுத்துவதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். ஆகவே திரவ ஆற்றலால் இயங்கும் ஒரு நிறுத்தும் கருவி உருவாக்கப்பட்டு டிராக்டர் நிறுத்த உபயோகிக்கப்படும் மிதி கட்டையுடன் இணைக்கப்பட்டுள்ளது. டிராக்டர் ஓட்டுநர் நிறுத்தும் கருவியின் மிதிக்கட்டையை அழுத்தும் போது டிரெய்லரின் நிறுத்தும் கருவியும் இயங்கி டிரெய்லர் நிறுத்தப்படுகிறது. இந்த நிறுத்தும் கருவியை டிரெய்லரில் பொறுத்த ரூ. 41,000/- செலவாகும்.

4.2. முக்கிய ஆராய்ச்சி முடிவுகள்

I. வேளாண்மை

நெல்

குறுகிய கால நெல் வளர்ப்புகள்

- டிஎம் 07335 என்ற நெல் வளர்ப்பு எக்டருக்கு 6569 கிலோ மகசூல் தரவல்லது. இந்த வளர்ப்பு புகையான், தண்டு துளைப்பான் குலைநோய், நெல் துங்ரோ நோய், பாக்டீரியா இலை கருகல் நோய் ஆகியவற்றிற்கு மத்திம எதிர்ப்புத் திறன் கொண்டது. வளர்ப்பின் அறவைத் திறன் 69.5 விழுக்காடு மற்றும் முழு அரிசி திறன் 61.2 விழுக்காடு ஆகும்.
- ஏஎஸ் 10024 வளர்ப்பு எக்டருக்கு 5991 கிலோ மகசூல் தரவல்லது. இது ஆடுதுறை 43 ஐ விட 19.7 விழுக்காடு அதிக மகசூல் தரவல்லது. இதன் மத்திய சன்ன வெள்ளை நிற அரிசி ஆடுதுறை 43க்கு சமமான தரமான சுவை உடையது. இது குலைநோய், பாக்டீரியா இலை கருகல் நோய் ஆகியவற்றை தாங்கி வளரும் தன்மை உடையது.
- சிபி 08504 என்ற வளர்ப்பு எக்டருக்கு 6419 கிலோ மகசூல் தரவல்லது. இந்த மகசூல் கோ 51 மற்றும் ஏடிடீ 45-ஐ காட்டிலும் 6.5 - 7.0 சதவிகிதம் அதிகமாகும். இதனுடைய சராசரி வயது 113 நாட்கள். இந்த வளர்ப்பு தண்டு துளைப்பான், குலைநோய், இலை உறை அழுகல் நோய்களுக்கு மிதமான எதிர்ப்பு தன்மை கொண்டதாகவும் மற்றும் இலைப்புள்ளி, பச்சைத் தத்துப்பூச்சி ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தன்மையும் கொண்டுள்ளது. மத்திய சன்ன அரிசியுடன் 2.7 நீள/ அகல விகிதம் கொண்டது.

மத்திய கால நெல் வளர்ப்புகள்

- மத்திய கால வயதில் (135 நாட்கள்) சிபி 09123 (பிபிடி 5204/கோ(ஆர்) 50) என்ற சன்ன வளர்ப்பானது சராசரியாக 5982 கிலோ / எக்டர் மகசூல் கொண்டதாகவும் ஏடிடீ 49-ஐ விட 4.67 சதம் மற்றும் பிபிடி 5204-ஐ விட 8.40 சதம் அதிக மகசூலையும் பதிவுசெய்துள்ளது. இது மத்திம சன்ன மணிகளும் மற்றும் மத்திய அளவு அமைலோசும் கொண்டது. இதனுடைய முழு அரிசி திறன் 62.25 சதம் ஆகும். சாதம் நீளும் விகிதம் 1.73. இந்த வளர்ப்பு இலைப்புள்ளி நோய்க்கு எதிர்ப்புத் திறனும், குலைநோய், இலையுறை அழுகல், துங்ரோ வைரஸ், வெள்ளை முதுகு தத்துப்பூச்சி, பச்சை தத்துப்பூச்சி ஆகியவற்றிற்கு மத்திய எதிர்ப்பு திறனும் கொண்டுள்ளது.
- டிஆர் 05031 என்ற வளர்ப்பு உவர் மற்றும் களர் நிலங்களுக்கு ஏற்றது. இது பாக்டீரியா இலை கருகல் நோய்க்கு எதிர்ப்பு திறனும் தண்டு துளைப்பான், இலைசுருட்டு புழு மற்றும் புகையானுக்கு மத்திம எதிர்ப்புத் திறன் கொண்டதாகும். இதன் தானிய மகசூல் எக்டருக்கு 5433 கிலோ ஆகும்.

சோளம்

- சோள தானிய வளர்ப்பு டிஎன்எஸ் 623 இரண்டாம் வருட அனுசரனை ஆராய்ச்சியில் உள்ளது.
- டிஎன்எஸ் 648 மற்றும் டிஎன்எஸ் 660 பல்லிடத்திடல்களில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- தீவனச் சோளம், டிஎன்எப்எஸ் 209 இரண்டாம் வருட மேம்ப்படுத்தப்பட்ட இரக ஆராய்ச்சி செய்யப்பட்டு அனைத்திந்திய ஒருங்கிணைந்த சோளம் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மதிப்பீட்டில் உள்ளது.

கம்பு

கலப்பின கம்பு இரகம், யுசிசி 32 தமிழ்நாட்டில் மானாவாரி மற்றும் நீர்பாசன நிலைகளுக்கு ஏற்றதாக கண்டறியப்பட்டுள்ளது. நடுத்தரமான உயரத்துடன் (160-180 செ.மீ) 85-90 நாட்களில் முதிர்ச்சி அடையும் தன்மை கொண்டதாக உள்ளது. நான்கு முதல் ஆறு உற்பத்தி தூர்கள் உள்ள இந்த இரகத்தில் நீர்பாசன நிலையில் சராசரி விளைச்சல் 3474 கிலோ / எக்டர் ஆக உள்ளது. இது கோ (சியு) 9 மற்றும் ஐசிஎம்வி 221 விட முறையே 17 மற்றும் 23 சதவீதம் அதிகமாகும். மானாவாரியில் யுசிசி 32ன் சராசரி விளைச்சல் எக்டருக்கு 2916 கிலோ ஆகும். இது ஒப்பீடு இரகங்களான கோ (சியு) 9 மற்றும் ஐசிஎம்வி 221 விட 15 மற்றும் 24 சதவீதம் அதிகமாகும்.

மக்காச்சோளம்

- மக்காச்சோள வீரிய ஒட்டு சிஎம்எச் 08-381 (9359 கிலோ / எக்டர்/ 110 நாட்கள்) தேசிய வெளியீட்டு இரகமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இரகமானது, பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா, கிழக்கு உத்திர பிரதேசம், மகாராஷ்ரா, கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஆடிப்பட்டத்தில் நன்றாக வளரக்கூடியது.
- மற்றுமொரு வீரிய ஒட்டு கலப்பினம், சிஎம்எச் 09-464 (8320 கிலோ / எக்டர், 100 நாட்கள்) தேசிய வெளியீட்டு இரகமாக 2014 ஆம் ஆண்டு பீகார், ஜார்க்கண்ட், ஒரிசா மற்றும் கிழக்கு உத்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஆடிப்பட்டத்தில் பயிர் செய்ய வெளியிடப்பட்டுள்ளது.
- சிஎம்எச் 08-287 (8951 கிலோ / எக்டர் / 105 நாட்கள்) மற்றும் சிஎம்எச் 08-287 (9478 கிலோ/ எக்டர் / 115 நாட்கள்) ஆகியவை தேசிய வெளியீட்டு இரகங்களாக 2014 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டன. இந்த இரண்டு வீரிய ஒட்டுகளும் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் தைப்பட்டத்தில் இறவையில் சாகுபடி செய்ய ஏற்றவை.

உளுந்து

வி.பி.ஜி. 09-005 என்ற உளுந்து வளர்ப்பு வம்பன் 3 x வம்பன் 04-008 வம்சாவழியில் வந்ததாகும். இது 65-70 நாட்களில் எக்டருக்கு 958 கிலோ தானிய மகசூல் தரவல்லது. இது பயிரிடப்பட்டு வரும் வம்பன் 6 மற்றும் கோ 6 இரகங்களை விட முறையே 20.2% மற்றும் 24.25% அதிக மகசூல் தரவல்லதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

உளுந்து வளர்ப்பு கோ பிஜி 11-02 ஆனது வம்பன் 4 x விக்னா முங்கோ சில்விஸ்டரிஸ் இன் சேர்க்கையிலிருந்து உருவாக்கப்பட்டதாகும். இது சராசரி மகசூலாக எக்டருக்கு 748 கிலோ தானியம் தரவல்லது. மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்பு சக்தி கொண்டதாகும்.

துவரை

துவரை சிஆர்ஜி 10-01 என்ற வளர்ப்பு 108 நாட்களில் முதிர்வடையும். இது மலட்டுத் தேமல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டது. தானிய மகசூலாக எக்டருக்கு 1156 கிலோ தரவல்லது.

பருத்தி

பருத்தியில் காசிபியம் ஹிர்சூட்டம் வகையைச் சேர்ந்த டிசிஎச் 1716 என்ற வளர்ப்பு 150 நாட்கள் வயதுடையதாகும். விதைப் பருத்தி மகசூலாக எக்டருக்கு 1748 கிலோ தரவல்லது. இது எம்சியு 13 ஐ விட 19.5% அதிக மகசூலாகும். இதன் இழைகள் 35 மி.மீட்டர் நீளம் மற்றும் 23.4 ஜி/ டெக்ஸ் உறுதித்திறன் கொண்டதாகும்.

அகில இந்திய பருத்தி ஒருங்கிணைப்பு திட்டத்தில் டி. சி. எச் 1705 வளர்ப்பு உயர் அடர் நடவிற்கு உகந்ததாக கண்டறியப்பட்டள்ளது. தற்போது இந்த வளர்ப்பு பருத்தி மேலாண்மை ஆய்வுத்திடலில் உள்ளது.

சூரியகாந்தி

அதிக மகசூல் திறனுடைய வீரிய ஒட்டு வளர்ப்பான சிஎஸ்எஃப்எச் 8031 தற்போது அணுசரணை ஆராய்ச்சித் திடலில் பரிசோதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 85-90 நாட்கள் வயதுடைய இந்த வீரிய ஒட்டு வளர்ப்பானது எக்டருக்கு 1731 கிலோ விதை மகசூலுடன் கோ 2 ஐ விட 15.2 சதவீதம் அதிக மகசூல் தரும் திறனுடையது.

அதிக மகசூல் தரும் வளர்ப்புகளான சிஎஸ்எஃப்எச் 12235, சிஎஸ்எஃப்எச் 12244, சிஎஸ்எஃப்எச் 12205, மற்றும் சிஎஸ்எஃப்எச் 12167 தற்போது பல்முனை ஆராய்ச்சித் திடலில் பரிசோதிக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த வளர்ப்புகள் 85-90 நாட்கள் வயதுடையவை. காய் மகசூலாக எக்டருக்கு முறையே, 2315, 2310, 2400 மற்றும் 2630 கிலோ தரும் திறனுடையவை.

நிலக்கடலை

காத்து இரக வளர்ப்புகளான ஐசிஜிவி 07222 (105 நாட்கள்), ஐசிஜிவி 07018 (110 நாட்கள்) மற்றும் ஐசிஜிவி 06146 (110 நாட்கள்) அதிக காய் மகசூலாக எக்டருக்கு முறையே 2907 கிலோ, 2912 கிலோ, மற்றும் 2925 கிலோ மகசூல் தரவல்லது. இவைத் தவிர 125 நாட்கள் வயதுடைய ஐசிஜிவி 03128 என்ற கொடி கொத்து இரக வளர்ப்பு எக்டருக்கு 3490 கிலோ விதை மகசூல் தரும் திறனுடையது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இலையைத் தாக்கும் நோய்களைத் தாங்கி வளரும் தன்மை, அதிக மகசூல் போன்றவை இவற்றின் சிறப்பியல்புகளாகும்.

தீவன தட்டைபயறு

டிஎன்எப்சி 0924 என்ற வளர்ப்பு 55-60 நாட்களில் எக்டருக்கு 25 டன் பசுந்தாள் மகசூல் மற்றும் 22.3 விழுக்காடு புரதச்சத்து தரல்லது. இந்த வளர்ப்பு அகில இந்திய ஒருங்கிணைந்த பயறு ஆராய்ச்சியில் பசுந்தீவன மகசூலில் முதலிடம் வகித்து உள்ளது.

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில் நுட்பவியல் மையம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வளர்ப்புகள் அனைத்தும் பரிசோதனைகளில் உள்ளவையாகும். குறைந்த பருவகாலம் (115 -120 நாட்கள்) கொண்ட நெல் வகையான ஏடி (பயோ) 09518 (எடிடி 43 ஒ ஐஆர்பீபீ 60-5), என்ற வளர்ப்பு மரபணு குறியீடுகளின் உதவியிடன் கலப்பின முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஏடிடி 43 இரகத்தை விட 9.1 சதவீதம் அதிக மகசூல் தரவல்லது. மேலும், இதில் பாக்டீரிய இலைக்கருகல் நோய்க்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட மரபணுக்கள் (எக்ஸ் ஏ 5, எக்ஸ் ஏ 3, எக்ஸ் ஏ 21) இருப்பதால் இலைக்கருகல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டதாகவும் உள்ளது.

மானாவாரி சூழ்நிலைகளில் வறட்சியை, எதிர் கொள்ள ஐஆர் 20 ஐக் கொண்டு மறுகலப்பு முறையில் உருவாக்கப்பட்டது தான் சிடி 9933 என்ற வளர்ப்பு, இது ஆழமான மற்றும் தடிமனான வேர்களுக்கான அளவீடு மரபணு பண்புகளைக் கொண்டுள்ளது. இவற்றில் இருந்து அதிக மகசூல் தரவல்ல வகைகள் தேர்வு செய்யப்பட்டு அவற்றின் வறட்சி தாங்கும் திறன் மானாவாரி நிலங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.



சி.பீ.எம்.ஏஸ். 14065 என்ற மத்திய பருவகால (130-135 நாட்கள்) நெல் வகையானது குறுகிய மற்றும் சன்னமான நெல் மணிகளைக் கொண்டுள்ளதோடு பீபிடி 5204 இரகத்தினைக் காட்டிலும் அதிக மகசூல் (5616 கிகி / எக்டர்) தரவல்லதாகவும் உள்ளது. மேலும், இதில் 'அபோ' இரகத்திலிருந்து பெறப்பட்ட வறட்சிக்கெதிரான இரண்டு அளவீடு மரபணுப் பண்புகளும் உள்ளன.

வெள்ளம் தாங்கி வளரும் தன்மை கொண்ட கோ 43 சப் வளர்ப்பானது மூலக்கூறு குறியீடுகளின் உதவி மூலமாக கலப்பின முறையில் உருவாக்கப்பட்டு பல்வேறு பரிசோதனையில் 2014-15 இல் ஆய்வு செய்யப்பட்டது. ஏழு நாட்கள் நீரில் மூழ்கிய நிலையிலும், 'கோ 43 சப் 1' அதிக மகசூலைக் (எக்டருக்கு 5500 கிலோ) கொடுத்தது.



உவர் தன்மை என்பது நெல் சாகுபடியில் மற்றொரு மகசூலுக் கெதிரான காரணி ஆகும். 'சால்டால்' என்ற மரபணு மூலம் தரம் உயர்த்தப்பட்ட வெள்ளைப் பொன்னி, 2014-15 ஆம் ஆண்டில் பல் கள பரிசோதனை ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. இது உவர் நிலங்களில் 16.6 சதவிதம் அதிக மகசூலைத் தந்தது.

கவுனி என்ற பாரம்பரிய நெல் இரகமானது அதன் ஊட்டச்சத்து மற்றும் மருத்துவப் பண்புகளுக்கு பெயர் பெற்றது. ஆனால், இது குறைந்த மகசூல், சூரிய ஒளி சார்ந்த பூக்கும் திறன் மற்றும் சாய்தல் காரணமாக விவசாயிகளால் அனைத்து பருவங்களிலும் பயிரிடமுடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே, இந்த குறைகள் இல்லாத மேம்பட்ட கவுனி நெல் இரகம் பயிர் மூலக்கூறு ஆய்வு மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.



பயிர் மேலாண்மை

நெல்

புழுதி விதைப்பு நெல்லில் தழைச்சத்து மற்றும் சாம்பல் சத்து பரிந்துரை

அண்ணா 4 நெல் இரகத்திற்கு புழுதி விதைப்பில் எக்டருக்கு 75 : 25 : 37.5 கிலோ என்ற அளவில் தழை மணி சாம்பல் சத்து அளித்த போது அதிக தானிய மகசூல் கிடைத்தது. இதில் முழு மணிச் சத்து, ¼ பங்கு தழை மற்றும் சாம்பல் சத்துக்களை அடியுரமாகவும் மீதமுள்ள ¾ பங்கு தழை மற்றும் சாம்பல் சத்தினை பிரித்து நட்ட 25, 45 மற்றும் 60 வது நாட்களில் அளிக்கும் போது அதிக தானிய மகசூலாக எக்டருக்கு 3290 கிலோ கிடைத்தது.

நெல்லில் களை மேலாண்மை

நெல் விதைக்கும் கருவி கொண்டு நேரடியாக விதைத்த நெல் வயலில் விதைத்த 3 நாட்களில் களைகள் முளைக்கும் முன் தெளிக்கக் கூடிய களைக்கொல்லியான பைரசோ சல்ப்யூரான் ஈதைல் என்ற மருந்தினை எக்டருக்கு 20 கிராம் மூலப்பொருள் கலந்து தெளித்து பின் நட்ட 25 வது நாளில் கோனோ களைக்கருவி கொண்டு களை எடுப்பதன் மூலம் 94 விழுக்காடு களை கட்டுப்படுத்தமுடியும். இதனால் தானிய மகசூல் எக்டருக்கு 6450 கிலோவும் வரவுசெலவு விகிதம் 2.45 எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

சிறுதானியங்கள் மற்றும் தீவனப் பயிர்கள்

மானாவாரி மக்காச்சோளத்தில் மண்ணின் ஈரப்பதத்திறன் மேம்பாட்டிற்கான உழவியல் அணுகு முறைகள்

மக்காச்சோளப் பயிரில் எஞ்சிய கம்புப் பயிர்த் தாள்கள் மற்றும் தென்னை நார்க் கழிவு எக்டருக்கு 5 டன் என்ற அளவில் பரப்பி நிலப் போர்வை அமைத்து விதைத்த 20, 45 மற்றும் 70 ஆம் நாட்களில் மும்முறை பாசனம் செய்வதால் தானிய மகசூலாக எக்டருக்கு 6305 கிலோவும் நிகர இலாபகரமாக எக்டருக்கு ரூபாய் 48060 கிடைப்பது கண்டறியப்பட்டுள்ளது.

வீரிய ஒட்டு கம்பு நேப்பியர் கோ (சி.என்) 4 தீவணப்புல்லிற்கு நுண்ணூட்டச்சத்து உரமிடுதல்

வீரிய ஒட்டு கம்பு நேப்பியர் கோ (சி என்) 4 தீவனப் புல்லிற்கு எக்டருக்கு 150 - 50 - 40 கிலோ தழை மணி சாம்பல் சத்துடன் எக்டருக்கு 50 கிலோ இரும்பு சல்பேட் மற்றும் 25 கிலோ துத்தநாக சல்பேட் (மயில் துத்தம்) உரங்களை 7 சம பாகங்களில் மேலுரமாக அளித்த போது பசுந்தீவனத் தட்டை மகசூல் 394 டன்னும், 364446 ரூபாயும் நிகர இலாபமாகக் கிடைக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.



பயிர் வினையியல், உயிரி வேதியல் மற்றும் மூலக்கூறு அடிப்படையில் உயிரியல் கட்டுப்பாட்டு முறையிலும் திரவ உயிர் உரங்களைக் கொண்டு விதை உயிர் நேர்த்தி செய்தல்

மக்காச்சோளம் கோ.எச் (ம) 5 விதைகளை 20 சத அசோஸ்பைரில்லத்தில் 12 மணி நேரம், 20 சத பாஸ்போ பேக்டீரியா 12 மணி நேரம், 80 சத டிரைக்கோ டெர்மா விரிடியில் 6 மணி நேரத்திற்கும் விதை உயிர் நேர்த்தி செய்வதால் விதை முளைப்புத்திறன், நாற்றுக்களின் வீரியம் ஆகிய அதிகரிப்பது கண்டறியப்பட்டது. விதைகளை சூடோமோனாஸ் ப்ளுரெசன்ஸ் 8 சத கரைசலில் 12 மணி நேரம் ஊர வைப்பதால் அதிக உப்பு மற்றும் குறைந்த ஈரப்பதத்திலும் நன்கு தாங்கி வளர்வது கண்டறியப்பட்டுள்ளது.



பயறு வகைப்பயிர்கள்

குறைந்த நிலத் தயாரிப்பில் மானாவாரி உளுந்து

சாகுபடி செய்யப்படும் மானாவாரி உளுந்து பயிரில் குறைந்த நிலத் தயாரிப்பில் பயிர்களின் சருகுகளை எக்டருக்கு 5 டன் என்ற அளவில் இட்டு பயிர் வளர்ச்சிப் பருவம் மற்றும் பூக்கும் பருவம் ஆகியவற்றில் இருமுறை மழைத் துப்பாக்கி கொண்டு பாசனம் செய்வதால் நீர் உபயோகத்திறன் எக்டருக்கு 2.5 கிலோ / மி.மீட்டர் தண்ணீருக்கு எனவும் தானிய மகசூல் 930 கிலோ/ எக்டர் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

கோடையில் தெளிப்பு நீர் பாசனத்தில் சாகுபடி செய்யப்படும் உளுந்து

உளுந்து ஆடுதுறை 5 இரகத்திற்கு 100 விழுக்காடு பயிர் நீராவி வெளியீட்டிற்கு சமமாக தெளிப்பு நீர் பாசனம் செய்த போது அதிக தானிய மகசூலாக எக்டருக்கு 1227 கிலோ கிடைத்துள்ளது. நீர் உபயோகம் 308.7 மி.மீட்டர் ஆகும். பாசன நீர் சேமிப்பு 25.4 விழுக்காடாகும்.

விதைக்கும் கருவி கொண்டு விதைக்கப்பட்ட புன்செய் நில துவரையில் களை மேலாண்மை

புன்செய் நிலத்தில் விதைக்கப்பட்ட துவரையில் களையெடுக்கும் இயந்திரம் கொண்டு விதைத்த 20 மற்றும் 40 ஆம் நாட்களில் வரிசைகளுக்கு இடையே களையெடுத்தது நிலப்போர்வை இடுவதால் 79.5 விழுக்காடு களைக் கட்டுப்பாட்டுத்திறன் கொண்டதாகவும் விதை மகசூல் எக்டருக்கு 922 கிலோவாகவும் கண்டறியப்பட்டுள்ளது. எக்டருக்கு 5.0 டன் என்ற அளவில் நிலப்போர்வை அமைப்பதன் மூலம் அகண்ட இலைத் தாவரக் களைகள் மற்றும் புல் வகைத் தாவரக் களைகள் கட்டுப்படுத்தலாம் எனக் கண்டறியப்பட்டது.

எண்ணெய் வித்துப் பயிர்கள்

இறவையில் பயிரிடப்படும் நிலக்கடலை - உளுந்து பயிர்த்திட்டத்திற்கான ஊட்டச்சத்து மேலாண்மை

நிலக்கடலைக்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவில் 100 விழுக்காடு தழைச்சத்து (எக்டருக்கு 25 கிலோ) + 150 விழுக்காடு மணி மற்றும் சாம்பல் சத்து (எக்டருக்கு முறையே 75 : 112.5 கிலோ) மற்றும் உளுந்து பயிருக்கு 100 விழுக்காடு பரிந்துரைக்கப்பட்ட உரங்களை (எக்டருக்கு 25 : 50 : 25 கிலோ தழை : மணி : சாம்பல் சத்து) இடுவதால் அதிக மகசூலாக நிலக்கடலையில் எக்டருக்கு 2503 கிலோ காய்களும் உளுந்தில் எக்டருக்கு 820 கிலோ தானிய மகசூலும் மொத்தமாக எக்டருக்கு ரூ. 81,160 நிகர வருமானமும் கிடைக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இப்பயிர்த்திட்டத்தின் வரவு செலவு விகிதாச்சாரம் 2.02 ஆகும்.

உளுந்து - சூரியகாந்தி பயிர்த்திட்டத்திற்கு உகந்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை

உளுந்து – சூரியாகாந்தி பயிர்த்திட்டத்தில் எக்டருக்கு 5 டன் தொழு உரம் + மண் பரிசோதனையின் அடிப்படையில் தழை : மணி : சாம்பல் சத்து + ஜிப்சம் எக்டருக்கு 500 கிலோ + போராக்ஸ் எக்டருக்கு 10 கிலோ மற்றும் எஞ்சிய பயிர்த்தாள்கள் எக்டருக்கு 4.5 டன் இடுவதால் சூரியாகாந்தியின் விதை மகசூல் 2 எக்டருக்கு 2586 கிலோவும் நிகர இலாபமாக எக்டருக்கு ரூ. 63,440 ஈட்ட முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

எள் பயிரில் மகசூல் மற்றும் தரத்தினை மேம்படுத்த விதை அடர் முலாம் பூசுதல்.

டி.எம்.வி. 7 எள் விதை ஒரு லிட்டருக்கு 760 கிராம் வேப்ப இலைப்பொடி + 360 மிலி. கரிய மீதைல் செல்லுலோஸ் (2%) + அசோஸ்பைரில்லம் 120 கிராம் + பாஸ்போ பாக்டீரியா 120 கிராம் என்ற அளவில் அடர் முலாம் பூசுவதால் அதிக முளைப்புத் திறன் (86%) நாற்றின் வீரிய குறியீடு (1350) மற்றும் விதை மகசூல் (எக்டருக்கு 955 கிலோ) கிடைப்பது கண்டறியப்பட்டுள்ளது.



பருத்தி

மானாவாரி பருத்தியில் எஞ்சிய பயிர்த்தாள்கள் இடுவதால் நிலத்திலேயே நீரை அறுவடை செய்தல்.

ஆழ்சால் அகலப் பாத்தி முறையில் தென்னை நார்க் கழிவு எக்டருக்கு 5 டன் நிலப்போர்வையாக இடுவதால் அதிக நீர் சேமிக்கப்பட்டு பருத்தி பயிரின் பூக்கும் கிளைகள், காய்கள், காய்களின் எடை அதிகரிக்கின்றன. விதைப் பருத்தியின் எடை எக்டருக்கு 2918 கிலோவும் எக்டருக்கு ரூபாய் 58,764 நிகர இலாபமும் வரவு செலவு விகிதாச்சாரம் 2.10 எனவும் கண்டறியப்பட்டது.

கரும்பு

சொட்டு நீர்ப்பாசன முறையில் திருந்திய கரும்பு சாகுபடிக்கான பயிர் இடைவெளி

திருந்திய கரும்பு சாகுபடி முறையில் இரட்டை வரிசைக் கரும்பு நடவு (150 செ.மீ x 30 செ.மீ. இடைவெளி) நடவு செய்வதால் அதிக அளவில் எக்டருக்கு 2,25,600 தூர்களும், அரவைக்குகந்த கரும்பு எடை எக்டருக்கு 2,03,300 ஆகவும் கரும்பு மகசூல் எக்டருக்கு 178.9 டன் மற்றும் வரவு - செலவு விகிதாச் சாரம் 3.20 எனவும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், சர்க்கரை மகசூல் எக்டருக்கு 21.6 டன்னாகவும், மற்றும் வணிகக் கரும்பு சர்க்கரை 12.1 விழுக்காடு எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

நிலத்தடி சொட்டு நீர்ப்பாசன முறையில் கரும்பிற்கு நீர்வழி உரமிடுதல்

கரும்பு இரகம் கோ 86032ல் பரிந்துரைக்கப்பட்ட 100 சத உர அளவாக எக்டருக்கு 300 : 100 : 200 கிலோ தழை : மணி : சாம்பல் சத்தினை நீரில் கரையும் உரங்களில் மூலம் நிலத்தடி சொட்டு நீர்ப்பாசன முறையில் அளிப்பதால் அதிக கரும்பு மகசூலாக எக்டருக்கு 177.4 டன், நீர் உபயோகத்திறன் 161.2 கிலோ / எக்டர் மி.மீ எனவும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், நிகர இலாபம் எக்டருக்கு ரூபாய் 2, 15, 799 மற்றும் வரவு செலவு விகிதாச்சாரம் 2.55 எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

வேளாண்மை வானிலை ஆராய்ச்சி மையம்

பருவ மழைக்கு முன்பு விதைக்கும் வாரத்தினை வானிலை மாற்றத்திற்கு ஏற்ப மாற்றியமைத்ததை உறுதி செய்தல்

தமிழகத்தில் 1950 முதல் 2010 ஆம் ஆண்டு வரை பருவ மழை துவங்கிய தேதிகளையும் மாநில நிலத்தடி நீர் மற்றும் தரை வழிப் பாசனத் தகவல்களையும் இந்திய வானியல் துறையின் தகவல்களையும் ஒருங்கிணைந்து ஆய்வு செய்ததில் தென் தமிழக மாவட்டவங்களில் இரண்டு வாரம் முன் கூட்டியே பருவமழை துவங்குவதும், வட மேற்கு மற்றும் மேற்குத் தமிழக பகுதிகளில் ஒரு வாரம் முன்பும், கடலோரப் பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் வட கிழக்கு தமிழகத்தில் வழக்கத்தை விட ஒரு வாரம் பின் தள்ளியும் பருவ மழை துவங்குவதும் கண்டறியப்பட்டுள்ளது.



காவிரி பாசனப் பகுதிகளுக்கு ஏற்ற ஒருங்கிணைந்த பண்ணைய முறை

காவிரி பாசனப் பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் தோட்டக்கலைப் பயிர்கள், கறவை மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு ஆகியவற்றின் மூலம் மொத்தம் உற்பத்தி செய்யப்பட்ட 29,777 கிலோ விளைபொருட்கள் பண்ணையில் மறுசுழற்சி செய்யபட்டுள்ளது. இடுபொருட்களின் மதிப்பு ரூபாய் 20,471 ஆகும். இம்முறையில் உற்பத்திச் செலவு 16.3 விழுக்காடு குறைவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.



புன்செய் கரிசல் நிலங்களுக்கு ஏற்ற ஒருங்கினைந்த பண்ணைய முறைகள்

புன்செய் கரிசல் நிலங்களில் பயிர் திட்டம், கறவை மாடுகள் மற்றும் ஆடு வளர்ப்பு மூலமாக அதிக உற்பத்தித் திறனாக எக்டருக்கு 16,978 கிலோவும், எக்டருக்கு ரூபாய் 1,16,098 (நிகர இலாபமாக) கிடைப்பதோடு 410 வேலை நாட்களும் கண்டறியப்பட்டது. இம்முறையை வறட்சிக் காலங்களிலும் சாத்தியம் என பின்பற்றலாம் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

நீர் தொழில்நுட்ப மையம்

பரம்பிக்குளம் – ஆழியார் பாலார் வடி நிலத்தில் சேர்க்கை முறையில் நீர் ஊட்ட கட்டமைப்புகள்

மூலம் நிலத்தடி நீர் செரிவுற செய்தல்

வடிமுகங்களில் நீர் சேமிப்பு கட்டுமானங்கள் மூலமாக மட்டுமே ஓராண்டில் கிடைக்கும் மழையில் 11.5 விழுக்காடு நிலத்தடி நீர் செரிவுற செய்யும் என்று கண்டறியப்பட்டுள்ளது. மழைநீர் சேமிப்பு கட்டுமானம் நிலபரப்பில் ஊடுருவி செல்லும் நீரின் அளவு, அதன் வடிவம் மற்றும் கொள்ளளவு மழையின் அளவினைக் காட்டிலும் முக்கியமான காரணிகளாக கண்டறியப்பட்டுள்ளது. மழை பெய்த நாளிலிருந்து ஒரு மாத காலத்தில் வடிமுகத்தின் அனைத்து கண்காணிப்பு கிணறுகளிலும் நீர் அதிகரிப்பது கண்டறியப்பட்டது. ஆனால், கிணறுகளில் நீர்ஊற்று உச்ச செரிவுறும் திறனில் குறைவாகவே காணப்பட்டது. இதை மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்களில் இருந்து கிணறுகளுக்கு செல்லக்கூடிய ஊற்றுக்கால்கள் குறைவாக இருக்கக் கூடும் அல்லது நிலத்தில் பக்கவாட்டு நீரோட்டம் அதிகமாக இருக்கக் கூடும்.

இயற்கை வள மேலாண்மை

வீரிய ஒட்டு மக்காச்சோளம் – தக்காளி பயிர் தொடர்ச்சியில் தேவைக்கேற்ப உரமிடல்

மண் வளத்தை பாதுகாக்கவும் மற்றும் மண்ணில் உள்ள பயிர்சதுகுகள் விரயமாவதை தடுக்கவும் மண் வளத்திற்கும் மகசூல் இலக்கிற்கேற்ப ஒருங்கிணைந்த உர மேலாண்மை தொழில் நுட்பத்தை மேற்கொள்வது அவசியம். இத்தொழில் நுட்பமானது இயற்கை உரங்கள், இரசாயன உரங்கள் மூலம் கிடைக்கக்கூடிய பேரூட்டங்களின் அளவை கணக்கில் கொண்டு அதற்கேற்ப பயிர்களில் திட்டமிட்ட மகசூலுக்கு தேவைப்படும் பயிரூட்டங்களின் அளவை வழங்குகின்றது. இவ்வகையானது சமச்சீர் உரமிடுதலுக்கும், பயிர்களின் உற்பத்தித் திறன் மற்றும் உர உபயோகத்திறன் அதிகரிப்பதற்கும் வழிவகுக்கின்றது. இங்ஙனம் திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகமாக காணப்படும் பாலவிடுதி மண் வரிசைக்கேற்ற வீரிய ஒட்டு மக்காச்சோளம்-தக்காளி பயிர் தொடர்ச்சிக்கான உரச்சமன்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளது.

வீரிய ஒட்டு மக்காச்சோளம்

இர.உ.த.ச. = 3.96 ம.இ. – 0.62 ம.த.ச. – 0.69 இய.த.ச.

இர.உ.ம.ச. = 1.56 ம.இ. – 1.93 ம.ம.ச. – 0.60 இய.ம.ச.

இர.உ.சா.ச. = 1.66 ம.இ. – 0.27 ம.சா.ச. – 0.49 இய.சா.ச.

தக்காளி

இர.உ.த.ச. = 0.45 ம.இ. – 0.63 ம.த.ச. – 0.72 இய.த.ச.

இர.உ.ம.ச. = 0.42 ம.இ. – 4.18 ம.ம.ச. – 0.73 இய.ம.ச.

இர.உ.சா.ச. = 0.40 ம.இ. – 0.48 ம.சா.ச. – 0.66 இய.சா.ச.

சுருக்கங்களுக்கான விளக்கங்கள்

ம.இ.	= மகசூல் இலக்கு	ம.ம.ச.	= மண்ணில் உள்ள மணிச்சத்து
இர.உ.த.ச.	= இரசாயன உர தழைச்சத்து	ம.சா.ச.	= மண்ணில் உள்ள சாம்பல்சத்து
இர.உ.ம.ச.	= இரசாயன உர மணிச்சத்து	இய.த.ச.	= இயற்கை உர தழைச்சத்து
இர.உ.சா.ச.	= இரசாயன உர சாம்பல்சத்து	இய.ம.ச.	= இயற்கை உர மணிச்சத்து
ம.த.ச.	= மண்ணில் உள்ள தழைச்சத்து	இய.சா.ச.	= இயற்கை உர மணிச்சத்து

இடம் - குப்பனூர், கோயம்புத்தூர் மாவட்டம்

இடம் - கென்டையகவுன்டனூர், திண்டுக்கல் மாவட்டம்

மேற்கண்ட சமன்பாடுகள் 2012-15ம் ஆண்டுகளில் கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் விவசாயிகளின் நிலங்களில் அமைந்த நிரூபணத்திடல்கள் மூலம் சரிபார்க்கப் பட்டது. இத்திட்டத்தை மேற்கொள்வதன் மூலம் மண் வளத்தைப் பாதுகாத்து மக்காச்சோளம் மற்றும் தக்காளியில் பொதுப் பரிந்துரையை விட 31.2 மற்றும் 18.3 சதம் மகசூல் அதிகமாவது தெரிய வந்துள்ளது. எனவே பாலவிடுதி மற்றும் அதன் சார்பு மண் வரிசைகளுக்கு மக்காச்சோளம் - தக்காளி பயிர்த்தொடருக்கு மேற்கண்ட சமன்பாடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் மண் வளத்தைப் பாதுகாப்பதோடு கூடுதல் மகசூல் பெற இயலும்.

தமிழக மண்ணில் கந்தகம் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் நிலை

தமிழகத்தில் 19 மாவட்டங்களில் 1980-2000 ஆண்டு வரை நடத்தப்பட்ட ஆய்வுக்கும், தற்போது 2006-2014 ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட மறு ஆய்வுக்கும் ஒப்பீடு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிவுகளின் படி 19 மாவட்டங்களிலும் நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறை கணிசமான அளவில் மாறுபட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. பொதுவாக துத்தநாகச் சத்து பற்றாக்குறை 56.5 சதத்திலிருந்து 63.1 சதமாக அதிகரித்துள்ளது. அதேபோல் தாமிரச் சத்து பற்றாக்குறையானது 5.4 சதத்திலிருந்து 30.1 சதம் வரை வெகுவாக அதிகரித்துள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.



19 மாவட்டங்களில் மறு ஆய்வு முடிவுகளின்படி இரும்பு மற்றும் மாங்கனீசு சத்துக்களின் கிடக்கை (அ) குணத்தில் (co-efficient) வியத்தகு மாற்றம் காணப்படவில்லை. மண்ணில் போரான் மற்றும் கந்தகத்தின் ஆய்வு மறு ஆய்வு முடிவுகளின்படி சராசரியாக முறையே 18.8 மற்றும் 9.9 சதம் குறைபாடுடன் இருப்பது தெரியவந்துள்ளது. சாகுபடி செய்யப்படும் பயிரைப் பொறுத்து, நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாட்டினை, குறிப்பிட்ட நுண்ணூட்டச்சத்து அடங்கிய உரங்களை மண்ணில் இடுவதன் மூலமாகவும் (அ) இலை வழி அளிப்பதன் மூலமாகவும் நிவர்த்தி செய்யலாம்.

தமிழகத்தில் நெல் சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் துத்தநாகச் சத்து கிடக்கை குறியீடு

தமிழகத்தில் 18 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், கடலூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருநெல்வேலி, விழுப்புரம், விருதுநகர், சேலம், வேலூர் மற்றும் ஈரோடு) மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளைக் கொண்டு சாகுபடி செய்யும் பகுதிகளில் நெல் மண்ணில் துத்தநாகச்சத்தின் அளவு குறைவு (1.20 பி.பி.எம்), மத்திமம் (1.20 – 1.80 பி.பி.எம்) மற்றும் அதிகம் (1.80 பி.பி.எம்) என்று வகைப் படுத்தப்பட்டுள்ளது.



பதினெட்டு மாவட்டங்களில் சேகரிக்கப்பட்ட மொத்த மண் மாதிரிகளில் (36899), 35.4 சதம் (10953) நெல் சாகுபடிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது இதிலிருந்து, துத்தநாக அளவு 60.5, 17.4 மற்றும் 22.4 சதம் முறையே குறைந்த, மத்திமம் மற்றும் அதிக அளவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. நெல் சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் துத்தநாகசத்து குறைபாடு குறித்த வட்டார அளவிலான வரை படம் தயாரிக்கபட்டுள்ளது. இதன் மூலம் வட்டார அளவில் துத்தநாக சத்து குறைபாடு நிவர்த்தி மேலாண்மையை குறிப்பாக நெற்பயிருக்கு பயன்படுத்தலாம்.

எளிதான பயிர் சாகுபடிக்கு விதை உர கட்டு தொழில் நுட்பம்

விதை உரக்கட்டு மூன்று பாகங்களை உள்ளடக்கியது. மேல்நோக்கி இருப்பது நேர்த்தி செய்யப்பட்ட விதை, மத்தியில் இருப்பது ஊட்டமேற்றிய எரு வில்லை, அடிப்பகுதியில் இருப்பது சமச்சீர் உர வில்லை. சமச்சீர் உர வில்லை எளிதில் மக்கக்கூடிய பேப்பர் கொண்டு சுற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் விதைகளை மண்ணில் ஊன்றும் போது சத்துக்கள் கொஞ்சம் கொஞ்சமாக வேர்ப்பகுதியில் வெளிப்படுவதால் பயிரின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகின்றது. சத்து இழப்புகளும் குறைகின்றது. மண்ணின் மேற்பரப்பில் உரமிடுவதை தவிர்த்து விதை உர கட்டு தொழில் நுட்பத்தை பயன்படுத்தியதால் விளைச்சல் 10 முதல் 30 சதம் வரை அதிகரித்துள்ளது. மக்காச்சோளம், நெல், பருத்தி, கார்னேசன், செண்டுமல்லி, காலிஃப்ளவர், தக்காளி போன்ற பயிர்களைப் பயிரிட இந்த விதை உர கட்டு தொழில் நுட்ப முறை உகந்தாக கண்டறியப்பட்டுள்ளது. விதை உர கட்டு தொழில் நுட்பத்தை எளிதில் கடைப்பிடிக்க தொழில் கூடங்களில் விதை உர கட்டுகளைத் தயாரித்து, பின் பயிர் விளைவிக்கும் பருவம் தொடங்கும் போதுஉழவர்களுக்கு அளிக்க வேண்டும். கிராமங்களில் சிறு தொழிற்கூடங்களில் பல்வேறுபட்ட இயந்திரங்களைக் கொண்டு விதை கட்டுகளைத் தயாரித்து போதுமான அளவில் உழவர்களுக்கு அளிக்க முடியும். இயந்திரங்கள் மூலம் விதை உர கட்டு தயாரிப்பதால் ஆண்டு முழுவதும் நல்ல வருமானம் பெறுவதோடு வேலை வாய்ப்புகளையும் தர முடியும்.



தொலையுணர்வு தகவல் மூலம் நெல் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியைக் கண்டறிதல்

செயற்கைக் கோள் பதிவுகளைக் கொண்டு காவிரி டெல்டா பகுதிகள், கடலூர், சிவகங்கை பகுதிகளில் நெல் சாகுபடி பரப்பளவு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. நெல் சாகுபடி பரப்பளவு மட்டுமல்லாமல் சாகுபடிப்பருவம் 92 சதவீதம் துல்லியமாக கண்டறியப்பட்டுள்ளது. ஓரைசா மாதிரி மென்பொருள் உதவியுடன், இலைப்பரப்பளவு, பயிர் வளர்ச்சிவிகிதம் ஆகியவற்றைக் கொண்டு நெல்லின் உற்பத்தி அளவு மற்றும் சாகுபடிபரப்பு ஆகியவை கண்டறியப் பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் 82 சதவீதம் துல்லிய அளவில் நெல் உற்பத்தி அளவு கணிக்கப்பட்டுள்ளது.

நுண்ணுயிரி மூலம் உற்பத்தி செய்யப்படும் லேகேஸ் வினையூக்கியும் அதன் பயன்களும்

பூஞ்சாணம் உற்பத்தி செய்யக்கூடிய லேகேஸ் (Laccase) எனும் வினையூக்கி எளிதில் சிதைக்க இயலாத கடினமான பொருட்களையும் கழிவு நீரிலுள்ள பீனால் போன்ற வேதி பொருட்களையும் அவற்றின் நச்சுத் தன்மையையும் நீக்க வல்லது. மேலும் இந்த வினையூக்கியை கொண்டு மக்காச்சோள கழிவு மற்றும் மரத்துகள்களில் உள்ள லிக்னினை நீக்கி எத்தனால் போன்ற எரிபொருள்கள் தயாரிக்கலாம்.

கொக்கோ பயிரை தென்னையில் ஊடுபயிராக சாகுபடி செய்தபின் மண்ணின் வளம்

கொக்கோ ஊடுபயிர் செய்த தென்னை மற்றும் ஊடுபயிர் செய்யாத தென்னையில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. இதில் ஊடுபயிர் செய்த தென்னையில் கொக்கோ மூலம் வருடத்திற்கு எக்டருக்கு 3 முதல் 7.5 டன்கள் அளவு இலைகள் உதிர்ந்து மண்ணில் மக்கி, எக்டருக்கு 80 முதல் 160.3 கிலோ, தழைச்சத்தையும், 4.7 முதல் 9.4 கிலோ மணிச் சத்தையும் மற்றும் 42.1 முதல் 84.4 கிலோ சாம்பல் சத்தையும் மண்ணில் அதிகரிப்பதாக கண்டறியப் பட்டுள்ளது. இது முறையே 10.45 முதல் 22.12 சதம் தழைச்சத்தும், 10.76 முதல் 21.92 சதம் மணிச்சத்தும், 4.21 முதல் 7.55 சதம் சாம்பல்சத்தும் ஊடுபயிர் இல்லாத பகுதியைவிட ஊடுபயிர் செய்த மண்ணில் அதிகரித்துள்ளதாக கண்டறியப் பட்டுள்ளது. கொக்கோ பயிரின் மூலம் வருடத்திற்கு எக்டருக்கு 4.39 டன் அளவு பையோமாஸ் கரிமமாக சேர்த்து 16.1 டன் அளவுள்ள கரியமில வாயுவை கிரகித்து நிலை நிறுத்தியுள்ளது. ஊடுபயிர் செய்த தென்னையில் மண்ணில் கரிமச்சத்தளவு 22.24 முதல் 24.72 சதவிகிதம் வரை உயர்ந்துள்ளது.

பயிர் பாதுகாப்பு

நெல்

நெல் குருத்துப்பூச்சி மற்றும் தட்பவெப்ப நிலை

பருவம் மற்றும் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப குருத்துப் பூச்சிகளின் எண்ணிக்கை மாற்றம் பற்றிய ஆய்வில் ஒரு அளவு குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் அதிகரிக்கும் போது குருத்துப்பூச்சியின் எண்ணிக்கை முறையே 5.12 மற்றும் 0.11 சதம் குறைவதாகவும், ஒரு அளவு அதிகபட்ச வெப்பநிலை உயரும் போது குருத்துபூச்சிகளின் எண்ணிக்கையும் 4.15 சதம் அதிகரிப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

நெல்லில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை

ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாடு முறையில் பின்வரும் முறைகளை கடைபிடித்து பூச்சி நோய் தாக்குதலை குறைக்கலாம். சூடோமோனாஸ் TNAU Pf1 உடன் விதை நேர்த்தி 10 கிராம் / 1 கிலோ விதை, TNAU இன கவர்ச்சி பொறி 5 / ஏக்கர், முட்டை ஒட்டுண்ணியான டிரைக்கோகிரம்மா கிலோனிஸ் 2சிசி / ஏக்கர் வெளியிடுதல், சூடோமோனாஸ் கரைசலை 5 கிராம் / 1 லிட்டர் நீர் என்ற அளவில் 45 நாள் பயிரில் இரண்டு முறை தெளித்தல், தேவைக்கேற்ப

பூச்சிக் கொல்லிகளான கார்டாப் ஹைட்ரோ குளோரைட் 250 கிராம் / ஏக்கர் போன்றவற்றை சரியான நேரத்தில் பயன்படுத்த வேண்டும். ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுபாடு முறைகளை பின்பற்றிய போது ஒரு எக்டருக்கு 5227 கிலோ நெல் மகசூலும் சராசரி வருமானம் ரூ. 33,203 கிடைத்தது. இதனை பின்பற்றாத மற்ற வயலில் மகசூல் 4408 கிலோவும் வருமானம் சுமார் ரூ.18,418 கிடைத்தது.

சோளம்

மானாவாரி சோளத்தில் தண்டு துளைப்பான் மேலாண்மை

கார்போபியூரண் குருணை மருந்தினை எக்டருக்கு 1 கிலோ எ.ஐ என்ற அளவில் விதைத்த 15 நாளில் குருத்தில் இடுதல் அல்லது அசிட்டாமிப்ரிட் 20 எஸ்.பி 40 கிராம் எ.ஐ /எக்டர் அல்லது ஸ்பைனோசாட் 75 கிராம் எ.ஐ / எக்டர் அல்லது நோவலூரான் 10 இ.சி 62.5 எ.ஐ / எக்டர் என்ற அளவில் விதைத்த 30 மற்றும் 45 நாட்களில் தெளிப்பதின் மூலம் தண்டு துளைப்பானின் சேதம் குறைவதாக அறியப்பட்டது.

துவரை

துவரையில் காய்த்துளைப்பான்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை

துவரையில் டிரைகோகிராம விரிடி 4கி , கிலோ விதைநேர்த்தி, ஊடுபயிராக பச்சைபயிறு (4-2), ஹெலிக்கோவெர்பா இனக்கவர்ச்சிப்பொறி எக்டருக்கு 12, பறவை தாங்கிகள் ஒரு எக்டருக்கு 50, ஒரு சத வேம்பு சோப்பு பயிர் வளர்ச்சி பருவத்தில் இரண்டு முறை, குளோர்அன்ட்ரானிலிப்ரோல் 18.5 எஸ்.சி 30 கி / எக்டருக்கு என்ற அளவில் பூ எடுக்கும் போது ஒரு முறை, காய்பிடிக்கும் போது மற்றொரு முறை தெளிப்பதன் மூலம் காய்த்துளைப்பான்களின் சேதம் குறைவாகவும் (5%) இவைகள் பின்பற்றப்படாத திடலில் அதிகமாகவும் (45%) காணப்பட்டது. ஒருங்கிணைந்த பூச்சிக்கட்டுப்பாடு திடலில் அதிகபட்ச மகசூலும் (1032 கிலோ/ எக்டர்) மற்றும் ஊடுபயிரில் இருந்து 320 கிலோ/ எக்டர் மகசூலும் கிடைத்ததிலிருந்து செலவு வரவின் விகிதமானது ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டில் அதிகமாகவும் (1:3.34), இம்முறை பின்பற்றப்படாத திடலில் குறைவாகவும் (1:2.75) காணப்பட்டது.

சேமிப்பில் பூச்சிக்கட்டுப்பாடு

ஒரு கிலோ விதையுடன் 0.5 மிலி ஸ்பினோசாட் 45 எஸ்.சி விதைநேர்த்தி செய்வதனால் சிவப்பு வண்டுகளின் இறப்பு, விதை நேர்த்தி செய்த 24 மணி நேரத்திற்குள் 75.25 சதவீதமாகவும் 5வது நாள் இறப்பு 100 சதவீதமாகவும் காணப்பட்டது. உளுந்து, மஞ்சள் மற்றும் வசம்பு பவுடர் விதை நேர்த்தி செய்ததில் பயிறுவண்டுகள் குறைவாக முட்டை இடுவது கண்டறியப்பட்டுள்ளது. வசம்பு 6 இ.சி 1 சதம் விதை நேர்த்தி செய்த உளுந்தில் 100 சதம் பயிறு வண்டுகளின் இறப்பு காணப்பட்டது.

நிலக்கடலை

நிலக்கடலையில் அங்கக முறையில் நோய் மேலாண்மை

நிலக்கடலையில் டைகோடெர்மா விரிடி மற்றும் சூடோமேனாஸ் புளோரோசன்ஸ் 1 கிலோ விதைக்கு 10 கிராம் + டைகோடெர்மா விரிடி மற்றும் சூடோமேனாஸ் புளோரோசன்ஸ் தலா 2 கிலோ எக்டருக்கு 300 கிலோ தொழு உரத்துடன் கலந்து பாரில் இட வேண்டும் + இலைவழியாக 5 சதம் வேப்பங்கொட்டை கரைசல் 30 மற்றும் 45வது நாட்களில் தெளிப்பதால் செடிகளின் தோள் அழுகல் (5.2 விழுக்காடு), தண்டு அழுகல் (10.7 விழுக்காடு), இலைப்புள்ளி நோய் (46.72 விழுக்காடு நோய் குறியீடு) இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இது ஏதுமிடாத வயல்களில் (முறையே 8.7 விழுக்காடு, 24.0 விழுக்காடு, 16.7 விழுக்காடு மற்றும் 75.48 விழுக்காடு நோய் குறியீடு) அதிக நோயின் தன்மை காணப்பட்டது. அங்கக முறையில் எக்டருக்கு 2013 கிலோ காய் மகசூல் மற்றும் வரவு செலவு விகிதாச்சாரம் 4.36 ஆக இருந்தது. ஏதுமிடாத வயல்களில் மகசூல் எக்டருக்கு 1346 கிலோ மட்டுமே கிடைத்தது.

பருத்தி

பருத்தியில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை

பருத்தியில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உத்திகளாவன

- இமிடாகுளோப்ரிட் 10 கிராம் ஒரு கிலோ விதைக்கு என்ற அளவில் விதை நேர்த்தி செய்தல்
- குளோர்பைரிபாஸ் 20 இ.சி 1.25 விட்டர் ஒரு எக்டருக்கு என்ற அளவில் விதைத்த 25 நாளில் மண்ணில் ஊற்றுதல்
- பேசில்லஸ் சப்டிலிஸ்-ஐ 10 கிராம் ஒரு லிட்டருக்கு என்ற அளவில் விதைத்த 60 நாட்களில் தெளித்தல்
- மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறியை எக்டருக்கு 1:2 என்ற அளவில் வைத்து வெள்ளை ஈக்களை கண்காணித்தல்
- இனக்கவர்ச்சிப் பொறிகளை எக்டருக்கு 12 என்ற அளவில் வைத்து புரோடினியா மற்றும் பச்சைக் காய்ப்புழுக்களைக் கண்காணித்தல்
- தேவைக்கேற்ப பூச்சிக் கொல்லியான இமிடாகுளோப்ரிட்டை எக்டருக்கு 25கிராம் ஏ.ஐ என்ற அளவில் தெளித்தல்
- தேவைக்கேற்ப பூஞ்சைக் கொல்லிகளான ட்ரைபிஸாக்ஸ்டிராபின் 25 சதம் + டெபுகோனஸோல் 50 சதம் தெளித்தல்
- ஆமணக்கு மற்றும் மக்காச்சோளத்தை கவர்ச்சிப் பயிராக வரப்புகளில் பயிரிட்டல்

ஆகியவற்றை கடைபிடிப்பதன் மூலம் பருத்தியைத் தாக்கும் நோய்களான நாற்று அழுகல், வேரழுகல், புகையிலை ஸ்டிரீக் வைரஸ் மற்றும் பூச்சிகளான வெள்ளை ஈ, தத்துப்பூச்சி மற்றும் இலைப்பேனின் தாக்குதல் குறைந்து விவசாயிகள் பின்பற்றும் முறையை விட அதிக மகசூல் மற்றும் லாபம், எஸ்.வி.பி.ஆர் 4 என்ற பருத்தி இரகத்தில் கிடைத்தது.

கரும்பு

கரும்பில் கம்பளி அசுவினி மேலாண்மை

சொட்டு நீர் பாசனம், 25 சதம், அங்கக தழைச்சத்து, ஊடு பயிர் வளர்ப்பு, தாக்கப்பட்ட இலைகளை அகற்றுதல் ஆகியவற்றைக் கடைபிடிப்பதன் மூலம் கம்பளி அசுவினியை கட்டுக்குள் வைக்கலாம். மேலும், கம்பளி அசுவினியின் இரைவிழுங்கிகளான டைபா கூட்டுப்புழு (ஒரு எக்டருக்கு 500) மற்றும் மைக்ரோமஸ் (ஒரு எக்டருக்கு 500) என்ற அளவில் விடுவதின் மூலம் இதன் தாக்குதல் குறைந்து 78.24 சதம் அதிக மகசூலும் (ஒரு எக்டருக்கு 118.59 டன்) அதிக சர்க்கரையும் (30.19 சதம்) கிடைத்துள்ளது.

காய்கறிப் பயிர்கள்

காய்கறிப்பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் மேலாண்மை

பிவேரியா பேசியானா (பிபி 112) என்ற பூஞ்சாணக் கொல்லியை ஒரு மில்லிக்கு 108 வித்துக்கள் என்ற அளவில் தெளிப்பதன் மூலம் மிளகாய், வெங்காயம் மற்றும் தக்காளிப் பயிர்களில் இலைப்பேனின் தாக்கம் குறைவதாக அறியப்பட்டுள்ளது.

இலைப்பேன்



பிவேரியா பேசியானா (பிபி 112) தாக்கியது

தேனீக்களில் வரோவா சிலந்தி மேலாண்மை

இந்தியத் தேனீயைத் (ஏபிஸ் செரானா இண்டிகா) தாக்கும் வரோவா நுண் சிலந்தியைக் கட்டுப்படுத்த ஒரு தேனிச் சட்டத்திற்கு சர்க்கரைத் தூள் 5 கிராம் அல்லது கந்தகத் தூள் 2 கிராம் என்ற அளவில் பயன்படுத்தலாம்

காளான்

சிப்பி காளான்களில் மீண்டும் பயன்படுத்தக்கூடிய பாலிப்ரொப்பலின் புட்டிகள் (1800 மில்லி லிட்டர்) மற்றும் அட்டைப் பெட்டிகள் (36 X 18 X 12 செ.மீ) தரப்படுத்தப்பட்டன.

II. தோட்டக்கலை

இறுதி நிலை பரிசோதனையில் உள்ள தெரிவுகள்

வீரிய ஒட்டு வெண்டை சிபிஎச் எச் 3

இந்த வீரிய ஒட்டு இரகத்தின் பெற்றோர் AE 64 x AE 66. செடிகளின் உயரம் 135-150 செ.மீ நீளமான அடர்ந்த பச்சை நிற காய்கள், செடி ஒன்றுக்கு 25-29 காய்கள், ஒரு பருவத்தில் 22 அறுவடை, மஞ்சள் நரம்பு தேமல் நோய்க்கு எதிர்ப்புத்தன்மை கொண்டது. இந்த வீரிய ஒட்டு ரகத்தின் விளைச்சல் சுமார் ஒரு எக்டருக்கு 25.7 டன்கள். இது கோ பிஎச் எச் 1 மற்றும் சக்தி இரகங்களைக் காட்டிலும் முறையே 19.6 மற்றும் 23.1 சதவீதம் அதிகமாகும்.

வீரிய ஒட்டு புடலை சிஎஸ்ஜிஎச் 1

இந்த வீரிய ஒட்டு இரகத்தின் பெற்றோர் கேத்தனூர் குட்டை x கோ 2. இதன் விளைச்சல் ஒரு எக்டருக்கு 60.42 டன்கள் ஆகும். இது பிஎஸ்எஸ் 694 இரகத்தைக் காட்டிலும் 33.3 சதவீதம் அதிக விலைச்சல் தரும். ஒரு செடிக்கு 53 காய்கள் உற்பத்தியாகும். ஒரு காயின் எடை 378 கிராம், உயரம் 33.5 செ.மீ, சுற்றளவு 27.6 செ.மீ. காய்கள் திரட்சியாக வெளிர் பச்சை நிறத்தில் வெள்ளைக் கோடுகளுடன் காணப்படும்.

சின்ன வெங்காயம் ஏசிஏ - 15

அதிக மகசூல் மற்றும் குறைந்த பயிர்காலம் உள்ள வெங்காய வகைகளை கண்டறிவதற்கான ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. 66 சிறியவெங்காய வகைகளை பயிரிட்டு ஆய்வு செய்ததில் ஏசிஏ-15 எனும் வகை, கோ-5 (15.0 டன்/எக்டர்) என்ற ஒப்பீட்டு இரகத்தை விட அதிக அளவு மகசூல் (19.12 டன்/ எக்டர்) கொடுத்துள்ளது.

உண்காய் சுரைக்காய் எல் எஸ் 6 - 1

அதிக மகசூல் தரக்கூடிய (ஒரு எக்டேருக்கு 30 டன்கள்) உண்காய் சுரைக்காய் எல். எஸ். 6 – 1 என்ற வளர்ப்பு கண்டறியப்பட்டது. இதன் சராசரியான காய் நீளம் மற்றும் சுற்றளவு 39.5 செ. மீ. மற்றும் 13.5 செ. மீ. ஆகும். ஒரு காயின் எடை 550 கி. ஆகும். பல இட சோதனையில் இவ் வளர்ப்பு உள்ளது.

சிறுகீரை ஏ பி 12

இதை இளங்கீரையாக வேருடன் பறிக்கலாம் அல்லது தண்டுகளையும், இலைகளையும் அறுத்தோ, கிள்ளியோ பயன்படுத்தலாம். ஒரு எக்டேருக்கு 10 டன்கள் மகசூல் தரவல்லது. பாலூர் 1 என்ற சரிபார் இரகத்தை விட 26% அதிக மகசூல் தரவல்லது. இது பல இட பரிசோதனையில் உள்ளது.

பூண்டு ஏ எஸ் 72

இந்த ஏ. எஸ். 72 வளர்ப்பானது, ஒரு எக்டேருக்கு 19.5 டன்கள் மகசூல் தரவல்லது. இது அதிக பட்ச உயரம், பொய்த்தண்டு நீளம், சராசரி குமிழ் எடை மற்றும் துருவ மற்றம் நடுப்பக்க விட்டத்தை கொண்டிருக்கும். இதில் 47° பிரிக்ஸ் மொத்த கரையும் திண்மங்கள், பாலிஃபீனால் (ஒரு கிராமிற்கு 3.514 மி. கி.) மற்றும் அல்லிசின் (3.08%) அடங்கியுள்ளது.

பிரெஞ்சு அவரை எஃப் பி பி 5

இது தூதூர்மட்டம் என்ற கிராமத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டது. ஒரு செடிக்கு 1.65 கி. கி. காய் மகசூல் தரவல்லது. காயின் நீளம் 19.08 செ. மீ., எடை 20.4 கி. மகசூல் ஒரு எக்டேருக்கு 39.80 டன்கள், புரதச்சத்து 1.51% மற்றும் கரோட்டின் அளவு ஒரு மி. கி. க்கு 1.92 மைக்ரோ கிராம் ஆகும்.

கொத்தமல்லி சி எஸ் 38

கொத்தமல்லி சி எஸ் 38 வளர்ப்பு எக்டருக்கு 5.88 டன் தழை மகசூல் தரவல்லது. இது கோ 4 (எக்டருக்கு 4.57 டன்) இரகத்தை விட 22.27 விழுக்காடு அதிகமாகும்.

மல்லிகை வளர்ப்பு ஏசிசி. ஜெ என் 1

ஜாஸ்மினம் நிட்டிடம் என்னும் இனத்தைச் சார்ந்த மல்லிகை வளர்ப்பு - 1 ஆண்டுதோறும் பூக்கவல்லதாகவும், அடர் இளஞ்சிவப்பு நிற தடித்த மொட்டுக்களைக் கொண்டு கண்கவரக் கூடியதாகவும் ஜாதிமல்லியைக் காட்டிலும் தூய வெண்மை கொண்ட சிறந்த பூக்களைக் கொண்டதாகவும், அதிக சேமிப்புக் காலம் கொண்டதாகவும் (அறை வெப்பநிலையில் 12 மணி நேரமும் 7-80 செ குளிர் சேமிப்பில் 60 மணி நேரமும் பூ மொட்டுகள் மலராமல் இருக்கும்), மிதமான மணம் கொண்டதாகவும் ஜாதிமல்லியைக் காட்டிலும் சந்தையில் அதிகம் விரும்பக் கூடியதாகவும் உள்ளதென கண்டரியப்பட்டு பல் இட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மணத்தக்காளி - டிஎன்எஸ்என் 19

களியப்பாளையம் லோக்கலில் இருந்து அதிக மகசூல் தரவல்ல டிஎன்எஸ்என் 19 மணத்தக்காளி சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இது செடிக்கு 454 கிராம் பசுங்கீரை மகசூலும் செடிக்கு 90 கிராம் காய்ந்த கீரை மகசூலும் தரவல்லது.

பூண்டில் அதிக மகசூல் மற்றும் தரத்திற்கான ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையில்

பரிந்துரைக்கப்பட்ட தழை, மணி, சாம்பல் மற்றும் கந்தக சத்துகளுடன் (75:40:40:40 கிலோ), ஒரு எக்டருக்கு தொழு உரம் 5 டன், மண்புழு உரம் 2.5 டன் மற்றும் கோழி உரம் 2.5 டன் இவற்றுடன் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பேக்டீரியா 5 கிலோ வீதம் இடுவதன் மூலம் அதிக பூண்டு மகசூல் கிடைக்கப்பட்டது. இவற்றை இடுவதன் மூலம் மண்ணிலுள்ள நுண்ணயிர்களின் எண்ணிக்கையும் அதிகமாக பெருகி காணப்பட்டது. இதனால் எக்டருக்கு 10.61 டன் பூண்டு மகசூல், வரவு செலவு விகிதாச்சாரம் 3.95 எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

மரவள்ளிக் கிழங்கு சாம்பல் சத்து மேலாண்மை

மரவள்ளிக் கிழங்கிற்கு பரிந்துரைக்கப்பட்ட உரத்தில் 125 விழுக்காடு சாம்பல் சத்து இருமுறை சமபாகங்களாக இடுவதால் கிழங்கு மகசூல் எக்டருக்கு 42.6 டன் கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும், மாவுச்சத்து 25.3 விழுக்காடு எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

மஞ்சள் ஒரு பரு நடவு முறை

ஒரு பரு நடவு முறை மூலம் மஞ்சளில் அதிக மகசூலாக எக்டருக்கு 46.2 டன் கிடைக்கப்பெற்றுள்ளது. இது வழக்கமான முறையை விட 25.23 விழுக்காடு அதிகமாகும். வரவு செலவு விகிதாச்சாரம் 2.47 எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இ-நோஸ் கருவி கொண்டு மல்லிகை தரம் நிர்ணயித்தல்

இ-நோஸ் கருவி கொண்டு மல்லிகையின் தரத்தை நிர்ணயிக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. கைக்கு அடக்கமான இக்கருவி பேட்டரி மற்றும் மின்சாரத்தில் இயங்க வல்லது. மல்லிகை மலர்களில் இருந்து கிடைக்கக்கூடிய அடர் திரவத்தின் வாசனைத் திறன் தகவல்களை சேமித்து வைத்துக்கொள்ளவும், கணினியில் காணவும், அறிக்கைகள் பெறவும் இயலும்.

III. வேளாண்மைப் பொறியியல்

தானியங்கி நிலக்கடலை அறுவடை இயந்திரம்

தானியங்கி நிலக்கடலை அறுவடை இயந்திரமானது 30 எச்பி திறன் கொண்ட டீசல் மோட்டார் மூலம் இயங்குகிறது. இதன் அறுவடைதிறன் 98 விழுக்காடாகும். இவ்வியந்திரம் செயல்பட 70 செ.மீ இடைவெளி போதுமானதாகும். இது ஒரு மணி நேரத்தில் 1.5 கிலோ மீட்டர் அறுவடை செய்து கடலைகாய்களைப் பிரித்து கொடுக்கவல்லது.

சிறுதானியங்களில் உமி நீக்கும் கருவி

சிறுதானியங்களில் உள்ள உமிகளை நீக்குவதற்கு 3 எச்பி மோட்டார் பொருத்தப்பட்ட உமிநீக்கும் கருவி 93 – 95 விழுக்காடு உமிகளை நீக்கவல்லது. இக்கருவியின் விலை ரூ. 85000 ஆகும். இதில் குறைந்த அளவான 5-7 விழுக்காடு மட்டுமே உடைந்த குறுனை காணப்படும். ஒரு கிலோ சிறுதானியங்களின் உமியை நீக்க ரூபாய் 3 மட்டுமே செலவாகும்.

பழங்களை பழுக்கவைக்க உயிரி அறை

வாழை, மாம்பழம் மற்றும் பப்பாளி ஆகிய பழங்களை பழுக்கவைக்க 7' x 7' x 7' அளவுடைய மடித்து வைக்க வல்ல பாலிப்ரோபலின் பிளாஸ்டிக் அறையை உபயோகிப்பதன் மூலம் 500 - 700 கிலோ வரை பழங்களை பழுக்க வைக்க இயலும். வாழைக்கு ஒரு லிட்டர் நீரில் 2 மிலி, மா மற்றும் பப்பாளிக்கு 6 மிலி என்ற அளவில் எத்திலின் கலந்து 25 மணி நேரம் பழுக்கும் அறையில் வைப்பதால் 3 - 4 நாட்களில் பழுத்து விடும்.



உவர் மற்றும் களர் நிலங்களுக்கு ஏற்ற வடிகால் வசதி

களர் மற்றும் உவர் நிலங்களில் 75 மிமீ விட்டம் கொண்ட துளைகள் இட்ட பிவிசி குழாய்களை 25 மீ இடைவெளியில் நிலத்திற்கு அடியில் பதிப்பதால் உபரி நீரை அகற்ற ஏதுவாகும். இத்துடன் எக்டருக்கு 2 டன் பசுந்தாள் உரம் இடுவதால் மண்ணின் கார அமிலத்தன்மை 9.2 லிருந்து 8.02 ஆக குறைந்து உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. அதன் பின் பயிரிடப்பட்ட நெல் எக்டருக்கு 4.96 டன் தானிய மகசூல் தந்துள்ளது.

உயிரியல் முறையில் மக்கவைத்த கோழி எரு

கோழி எருவினை உயிரியல் முறையில் மக்க வைத்து எக்டருக்கு 12.5 டன் என்ற அளவில் கரும்பிற்கு இடுவதால் கரும்பு மகசூல் எக்டருக்கு 131 டன், சர்க்கரை மகசூல் எக்டருக்கு 15.98 டன் கிடைக்கப்பெற்றது. இவ் எருவினை இடுவதால், வெண்டை, மஞ்சள் மற்றும் வாழை பயிர்களிலும் அதிக மகசூல் தருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

IV வனவியல்

செந்தூரம் (Annatto / Bixa)

டிஎன்பிஐ 4 என்ற சிறந்த தேர்வானது 3.03 சதவிகிதம் பிக்ஸினை தரவல்லது. இந்த பயிரின் சுழற்சி காலமானது 40 வருடங்களாகும். ஒரு எக்டருக்கு 1.3 லிருந்து 1.5 டன் விதை மகசூல் தரவல்லது. இந்த பயிரை வளர்ப்பதற்கு 3 x 3 மீட்டர் இடைவெளி பரிந்துரை செய்யப்படுகிறது. சொட்டுநீர் பாசனத்தின் மூலம் ஒரு செடிக்கு தேவைப்படும் நீரின் அளவானது ஒரு வாரத்திற்கு 12 லிட்டர் ஆகும்.

சிசு

ஒற்றின சிசு மரமானது பல்நோக்கு தொழிற்சாலை சார்ந்த மரமாக கண்டறியப்பட்டு உயிர் எரிசக்தி தொழிற்சாலை மற்றும் காகிதத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உயர் தரமான மரங்கள் நான்காம் ஆண்டில் அறுவடை செய்யப்பட்டு பல்வேறு மரம் சார்ந்த தொழிற்சாலைகளில் பயன்படுகிறது. சிசுவின் தடிமர மகசூல் 0.125 க.மீ / மரம் (150 டன் / எக்டர்), கப்பா எண் - 18.60/ மரக்கூழ் 51.95 சதவீதம் (4ம் ஆண்டில்).

மலைவேம்பு

மலைவேம்பு மேட்டுப்பாளையம் 1 - உடன் (45-50 டன்) ஒப்பிடுகையில் FCRI MD 15 அதிக அளவு (60 டன்) மகசூலைத் தருவதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த இரகம் மரக் கூழ் தரத்திலும் மரக் கூழ் மகசூலிலும் உயர்ந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது (52.1 சதவீதம்). அமிலத்தில் கரையா லிக்னின் (21.8 சதவீதம்), ஹோலோ செல்லுலோஸ் (74.5 சதவீதம்), கப்பா எண் (19.6), கிழியும் தன்மை (10.2 mNm2g-1), இழுதிறன் (87 Nmg-1) மற்றும் வெடிக்கும் தன்மை (5.9 K Pa m2 g-1). இந்த இரகமானது உகந்த மரக்கூழ் தன்மையை கொண்டுள்ளதால் 18 ஆம் மாதத்திலிருந்து அறுவடை செய்யலாம்.

சவுக்கு

சவுக்கு சிஜே 27 வளர்ப்பு குறுகிய கால மற்றும் அதிக மகசூல் தரும் வளர்ப்பாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் மகசூல் 36 மாதங்களில் 160 - 240 டன் தடிமரம் / எக்டர்.

சவுண்டல்

சவுண்டல் வளர்ப்பு சி 15 குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரவல்லது. இதன் மகசூலானது 30 மாதங்களில் 125 டன் / எக்டர். இது காகித தொழிற்சாலையிலும் (காகித கூழ் 44-46 சதவீதம், கப்பா எண் 22-24) மற்றும் உயிரி எரிசக்தி (எரியும் தன்மை 3800 - 4200 கிலோ கலோரிஸ்) தயாரிப்பிலும் உகந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.

4.3. பயிர் மேலாண்மை இயக்குனரகம்

முக்கிய நோக்கம்

உழவியல், வேளாண் வானிலையியல், பயிர் வினையியல், பண்ணை மேலாண்மை, நிலையான அங்கக வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் துறைகளில் பயிர் மேலாண்மையில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் அறிவு பரிமாற்றங்களை ஒருங்கிணைத்தல். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான வேளாண் கால நிலை மண்டலங்களில், பயிர் மேலாண்மையில் ஏற்படும் பிரச்சனைகளைக் கண்டறிந்து அதற்கு தகுந்த தீர்வுகளை ஆய்வின் மூலம் பரிந்துரைத்தல் ஆகியன இவ்வியக்குனரகத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

நோக்கங்கள்

- வேளாண்மையை மேலும் மேம்படுத்துவதற்காக துறைகளிலுள்ள அனைத்து பிரிவுகளிலும் ஆராய்ச்சியை ஒருங்கிணைத்தல்
- வேளாண்மை உற்பத்தி மற்றும் வருமானத்தை பெருக்குவதற்காக ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை உத்திகளை உருவாக்குதல்
- வேளாண் வளங்கள் மேலாண்மை மற்றும் வேளாண் ஆலோசனை சேவை மூலம் உயிரற்ற அழுத்தம் மற்றும் வானிலை சார்ந்த பயிர் உற்பத்தி பிரச்சனைகளைக் குறைத்தல்
- பல்வேறு பயிர்கள் மற்றும் பயிரிடும் முறைகளில் இயற்கை விவசாயத்தை மேம்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

உழவியல் துறை

குறிக்கோள்கள்

- வேளாண்மையில் இளம்நிலை மற்றும் முதுநிலை கல்வி பயிற்றுவித்தல் மற்றும் மனிதவள மேம்பாடு திறனை மேம்படுத்துதல்
- உழவியல் துறையில் அனுபவம் சார்ந்த கல்வி முறையை கொடுப்பது
- நீடித்த நிலையான மகசூல் மற்றும் வருமானத்தை தரக்கூடிய வேளாண் தொழில்நுட்பங்களை உருவாக்குதல்
- தண்ணீர் பற்றாக்குறை காலங்களில மாற்றுப் பயிர் திட்டத்தை பரிந்துரைப்பது
- பகுதிக்கு ஏற்றவாறு வேளாண் பிரச்சனையை கண்டறிந்து தகுந்த ஆலோசனைகள் வழங்குவது
- பல்வேறு வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை சார்ந்த விஞ்ஞானிகளுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல்

4.3. பயிர் மேலாண்மை இயக்குனரகம்

முக்கிய நோக்கம்

உழவியல், வேளாண் வானிலையியல், பயிர் வினையியல், பண்ணை மேலாண்மை, நிலையான அங்கக வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் துறைகளில் பயிர் மேலாண்மையில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் அறிவு பரிமாற்றங்களை ஒருங்கிணைத்தல். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான வேளாண் கால நிலை மண்டலங்களில், பயிர் மேலாண்மையில் ஏற்படும் பிரச்சனைகளைக் கண்டறிந்து அதற்கு தகுந்த தீர்வுகளை ஆய்வின் மூலம் பரிந்துரைத்தல் ஆகியன இவ்வியக்குனரகத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

நோக்கங்கள்

- வேளாண்மையை மேலும் மேம்படுத்துவதற்காக துறைகளிலுள்ள அனைத்து பிரிவுகளிலும் ஆராய்ச்சியை ஒருங்கிணைத்தல்
- வேளாண்மை உற்பத்தி மற்றும் வருமானத்தை பெருக்குவதற்காக ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை உத்திகளை உருவாக்குதல்
- வேளாண் வளங்கள் மேலாண்மை மற்றும் வேளாண் ஆலோசனை சேவை மூலம் உயிரற்ற அழுத்தம் மற்றும் வானிலை சார்ந்த பயிர் உற்பத்தி பிரச்சனைகளைக் குறைத்தல்
- பல்வேறு பயிர்கள் மற்றும் பயிரிடும் முறைகளில் இயற்கை விவசாயத்தை மேம்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

உழவியல் துறை

குறிக்கோள்கள்

- வேளாண்மையில் இளம்நிலை மற்றும் முதுநிலை கல்வி பயிற்றுவித்தல் மற்றும் மனிதவள மேம்பாடு திறனை மேம்படுத்துதல்
- உழவியல் துறையில் அனுபவம் சார்ந்த கல்வி முறையை கொடுப்பது
- நீடித்த நிலையான மகசூல் மற்றும் வருமானத்தை தரக்கூடிய வேளாண் தொழில்நுட்பங்களை உருவாக்குதல்
- தண்ணீர் பற்றாக்குறை காலங்களில மாற்றுப் பயிர் திட்டத்தை பரிந்துரைப்பது
- பகுதிக்கு ஏற்றவாறு வேளாண் பிரச்சனையை கண்டறிந்து தகுந்த ஆலோசனைகள் வழங்குவது
- பல்வேறு வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை சார்ந்த விஞ்ஞானிகளுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல்

2014-15 இல் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

வ. எண்	திட்டத்தின் பெயர்	நிதி அளிப்பு நிறுவனங்கள்	நிதி (ரூ. இலட்சதில்)
1.	நெல் நடவு மற்றும் நேரடி விதைப்பில் பெனோக்ஸசுலம் என்ற களைக் கொல்லி பயன்பாட்டின் ஆராய்ச்சி	கிரிஸ்டல் பயிர் பாதுகாப்பு பிரைவேட் லிமிடெட்., புது டெல்லி	2.12
2.	சோயாபீன்ஸில் போமிசபான் என்ற களைக் கொல்லி பயன்பாட்டின் ஆராய்ச்சி	கிரிஸ்டல் பயிர் பாதுகாப்பு பிரைவெட் லிமிடெட்., புது டெல்லி	5.85
3.	இனிப்பு சோளத்தில் சொட்டுநீர் பாசன ஆராய்ச்சி	கே. எஸ். என். எம். மார்க்கட்டிங், கோயமுத்தூர்	2.40
4.	மக்காச்சோளம் மற்றும் உளுந்தில் லிப்போ சிட்டோ ஆலிகோ சர்க்ரைட்ஸ் பயன்பாட்டின் ஆராய்ச்சி	நோவோசைம் பிரைவேட் லிமிடெட், பெங்களூர்	4.88
5.	வாழையில் பிஸெஒ 6 திரவ உரத்தின் செயல்பாடு ஆராய்ச்சி	சுபாஷினி பையோ எனர்ஜி பிரைவேட் லிமிடெட்., திருசெங்கோடு	4.32
6.	நெல் நடவுப் பயிரில் களைக்கொல்லி பெனோக்ஸசுலம் பயன்பாட்டின் ஆராய்ச்சி	கிரிஷ்டல் பயிர் பாதுகாப்பு பிரெவேட் லிமிடெட்., புது டெல்லி	4.55
7.	கரும்பில் குளோமோஸோன் என்ற களைக்கொல்லி பயன்பாடடின் ஆராய்ச்சி	எப்எம்சி இந்தியா பிரைவேட் லிமிடெட், பெங்களூர்	4.44
8.	சோயா பீன்ஸில் எப்7121 மற்றும் எப்8032 என்ற களைக் கொல்லிகளின் பயன்பாட்டின் ஆராய்ச்சி	எப்எம்சி இந்தியா பிரைவேட் லிமிடெட், பெங்களூர்	1.90
9.	சோயாபீன்ஸில் புளுமியாக்சின் என்ற களைக் கொல்லி பயன்பாட்டின் ஆராய்ச்சி	சுமிட்டோமா கெமிகல்ஸ் லிமிடெட்., மும்பாய்	3.22
10.	கரும்பில் ஹலோசல்யூரான் மிதைல் மற்றும் குளோரிமியூரான் இதைல் மற்றம் மெட்ரிபியுசின் களைக்கொல்லிகளின் பயன்பாட்டின் ஆராய்ச்சி	கிரிஸ்டல் பயிர்பாதுகாப்பு பிரைவேட் லிமிடெட்., புது டெல்லி	3.38

11.	திசு வாழையில் சொட்டுநீர் உர பாசனத்தில் கரையும் உரங்களின் செயல்பாட்டின் ஆராய்ச்சி	நாகர்ஜுனா உர நிறுவனம், ஐதராபாத்	8.41
12.	கரும்பில் சொட்டுநீர் உரபாசனத்தில் கரையும் உரங்களின் செயல்பாட்டின் ஆராய்ச்சி	நாகர்ஜுனா உர நிறுவனம், ஐதராபாத்	9.91
13.	தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் பயறு வகைகளில் இயந்திர மூலம் அறுவடை செயல் விளக்கம்	தமிழ்நாடு அரசு, சென்னை	4.13

நடைபெற்ற பயிற்சிகள்

வ. எண்	தேதி	பயிற்சியின் தலைப்பு	நிதி (ரூபாய்)	பயிற்சி பெற்றவர்கள்	எண்ணிக்கை
1.	28.01.2015 - 17.02.2015	இயற்கை வள பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் - இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்	838815	இந்திய வேளாண் ஆராய்ச்சி மற்றும் வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்	19

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர்கள் கலந்துகொண்ட பயிற்சி

வ. எண்	பயிற்சியின் பெயர் மற்றும் கூடம்	தேதி	பெயர் மற்றும் அலுவலகப் பணி
1	களைக் கொல்லியில் எஞ்சிய நஞ்சை அளவிடும் முறை பற்றிய பயிற்சி, களை அறிவியல் இயக்ககம், ஜபல்பூர்	11.11.2014 - 17.11.2014	முனைவர். பி. ஜானகி உதவிப் பேராசிரியர் (மண்ணியல்)

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்
முக்கியநோக்கம்

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் முக்கிய நோக்கமானது தரமான அடிப்படை ஆராய்ச்சி, விரிவாக்க கல்வி மற்றும் காலநிலை சார்ந்த விவசாய தொழில் நுட்பங்களை வழங்குதல். மேலும், காலநிலை மற்றும் வானிலை சார்ந்த பயிர் உற்பத்தியில் ஏற்படும் இடையூறுகளை குறைக்க மற்றும் பண்ணை இலாபத்தை அதிகரிக்க காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தொழில் நுட்பங்களை உருவாக்குதல்.

வேளாண் காலநிலை ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

வ. எண்	நிதி நிறுவனம்	திட்டத்தின் பெயர்	நிதி (ரூ. இலட்சத்தில்)
1.	திட்டம் அல்லாதவை	திட்டம் அல்லாதவை	92.61
2.	அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை	வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்திற்கான உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி	59.00
		வேளாண்மையில் சாம்பல் உபயோகத்தின் நன்மைகளை சரிபார்த்து பல்கலைக்கழக பரிந்துரைக்கு கொண்டு செல்லுதல்	16.76
		தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தி பாதிப்பு மற்றும் வளர்ச்சி உத்திகளை காலநிலை மாற்றத்துடன் மதிப்பிடுதல்	65.87
3.	இந்திய வானிலைத் துறை	கிராம வேளாண் வானிலை சேவை	12.41
		தமிழ்நாட்டில் உள்ள மேற்கு மண்டலத்தில் நெல், மக்காச்சோளம் மற்றும் நிலக்கடலை விளைச்சலை விண்வெளி வேளாண் காலநிலை மற்றும் நில கண்காணிப்பை பயன்படுத்தி முன்னறிவிப்பு செய்தல்	4.76
4.	தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம்	தமிழ்நாட்டில் உள்ள 73 வட்டாரங்களில் தானியங்கி வானிலை நிலைய விரிவாக்கம் மற்றும் பிணைப்பு	576.35
		தமிழ்நாட்டில் உள்ள 88 வட்டாரங்களில் தானியங்கி வானிலை நிலைய விரிவாக்கம் மற்றும் பிணைப்பு	717.60
		தமிழ்நாட்டில் வட்டார அளவில் தானியங்கி வானிலை நிலையத்திலிருந்து கிடைக்கும் தகவல்களை கொண்டு வேளாண் அறிவுரை சேவை மேம்பாடு	350.00
5.	தனியார் நிறுவனம்	இந்திய பெருங்கடல் விளிம்பு நாடுகளில் பருவகால காலநிலை கணிப்புகளை கொண்டு உணவு பாதுகாப்பு மேம்பாடு	30.95
		ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் நீர் மற்றும் வேளாண் துறைகளில் ஒருங்கிணைந்த அறிவியல் பங்குதாரர்களைக் கொண்டு விவசாய தொழில் நுட்பங்கள் தழுவிய கட்டமைப்பை உருவாக்குதல்	273.21

பயிற்சி / கருத்தரங்கு நடத்தப் பெற்றவை

தேதி	பயிற்சி / கருத்தரங்கு தலைப்பு
17.07.2014 - 18.07.2014	கால்நடை வளர்ப்பு பண்ணையில் ஆலோசனை சேவைகள் பற்றிய கருத்தரங்கு, கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நாமக்கல்.
08.08.2014	ஈரோட்டில் உள்ள காளிங்கராயன் பாசன பகுதி விவசாயிகளுக்கு முன் பருவ மழை விழிப்புணர்வு பற்றிய பயிற்சி
12.08.2014	திருச்சியிலுள்ள பொன்னனையாறு பாசன பகுதி விவசாயிகளுக்கு முன் பருவ மழை விழிப்புணர்வு பற்றிய பயிற்சி
15.12.2014 - 19.12.2014	இந்திய பூகோள வேளாண் காலநிலை ஆராய்ச்சி தகவல் மையத்தை கொண்டு புவியியல் தகவல் அமைப்பு, தொலை உணர்வு மற்றும் சார் ஆய்வு பற்றிய கருத்தரங்கு.
22.12.2014	மத்திய கால வானிலை முன்னறிவிப்பு பற்றிய விவசாய விழிப்புணர்வு பயிற்சி
23.03.2015	உலக வளிமண்டலவியல் நாள் - வேளாண் காலநிலை ஆராய்ச்சி நிலையம்

பயிற்சி / கருத்தரங்கு பங்கேற்றவை

வ. எண்	பயிற்சியின் பெயர் மற்றும் இடம்	தேதி		பங்கேற்றவரின் பெயர் மற்றும் பதவி
		நாள் முதல்	வரை	
1	ஒருங்கிணைந்த பருவகால காலநிலை	23.05.2014	26.05.2014	முனைவர் வெ.கீதாலட்சுமி பேராசிரியர்
2	காலநிலை இடர் மேலாண்மை பற்றிய கருத்தரங்கு	02.05.2014		முனைவர் இரா.ஜெகந்நாதன் பேராசிரியர்
3	வேளாண் வானிலை ஆய்வில் நீடித்த விவசாயம் பற்றிய புதிய கருத்தரங்க, பரிமாணம்.	15.10.2014	19.10.2014	முனைவர் ச.பன்னீர்செல்வம் பேராசிரியர் மற்றும் தலைவர்
4	காலநிலை மாற்றம் பற்றிய கருத்தரங்கு, டெல்லி	09.03.2015	12.03.2015	
5	டிசாட் பயிற்சி பயிர் அமைப்பு மாதிரிகள் நிலவள மேலாண்மையில் பயன்பாடு பற்றிய கருத்துகள். இக்ரிசாட், ஹைட்ராபாத்.	21.03.2015	30.03.2015	முனைவர் செ.கோகிலவாணி உதவி பேராசிரியர்
6	விலங்குகள் மற்றும் கோழிகளுக்கான பருவநிலை சார்ந்த அறிவுரைகள், நாமக்கல் பற்றிய கருத்தரங்கு	25.03.2015		முனைவர் ச.பன்னீர்செல்வம் பேராசிரியர் மற்றும் தலைவர்

பயிர் வினையியல் துறை

நோக்கம்

கற்பித்தல்

- இளங்கலை பட்டதாரிகளுக்கு அடிப்படை பயிர் வினையியல் மற்றும் உயிர் தொழிற் நுட்பங்கள் கற்பித்தல்
- தரமான முதுகலை பயிர் வினையியல் பட்டதாரிகளை உயிர் மூலக்கூறு வினையியல் சார்ந்த அறிவியலாளர்களை உருவாக்குதல்
- மாணவர்களை பயிர் வினையியல் அறிவியலின் மூலம் குறைகளை தீர்க்கும் திறனை வளர்த்து கல்வியில் புதிய பரிமாணங்களை புகுத்துவது.

ஆய்வு நடவடிக்கைகள்

- பல்வேறு காலநிலைகளுக்கு ஏற்றவாறு பயிர் வினையியல் அமைப்புள்ள பயிர் வகைகளின் விவரங்களை புரிந்துக் கொள்ளுதல்.
- அதிக ஒளிச்சேர்க்கை திறன் கொண்ட மரபு வகைகளை வேறுபடுத்துதல்.
- வறட்சி மற்றும் வெள்ளத்தை தாங்கி வளரக் கூடிய புறத்தோற்ற மரபுள்ள பயிர்களை வேறுபடுத்துதல்.
- உப்புநிலை மற்றும் அதிக வெப்பநிலையை தாங்கி வளரக்கூடிய பயிர்களை பயிர் வினையியல் கூறுகள் மூலமாக பிரித்தெடுத்தல்.
- ஊட்டச்சத்து மற்றும் பயிர் ஊக்கிகளைக் கொண்டு பயிர் விளைச்சல் மற்றும் தரத்தினை அதிகப்படுத்துதல்.
- புதிய வழிமுறைகளை கொண்டு பயிர் வினையியல் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை களைதல்.
- அறுவடைக்கு பின் தொழில் நுட்பம் சார்ந்த பயிர் உடற்கூறியல் கொண்டு வாழ்நாள் மற்றும் தரத்தினை அதிகரித்தல்.
- பயிர் வினையியல் வழி முறைகளை கொண்டு வறட்சியை தாங்கி வளரக்கூடிய பயிர்களை உருவாக்குதல்.
- முக்கிய பயிர்களை பயிர் உடற் கூறியல் மேலாண்மை கொண்டு உப்பு தன்மையுள்ள நிலத்தில் முக்கிய பயிர்களை பாதுகாத்தல்.

விரிவாக்கம்

- பயிர் வினையியல் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பங்களில் பயிற்சி அளித்தல்
- தொலை தொடர்பு சாதனங்கள் மூலம் சமுதாயத்திற்கு புதிய தொழில் நுட்பங்களை எளிமையாக பிரபலப்படுத்துதல் மற்றும் வணிகமயமாக்குதல் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்

நடைமுறையில் உள்ள ஆராய்ச்சி திட்டங்கள்

வ. எண்	நிதி நிறுவனங்கள்	திட்டத்தின் பெயர்	மொத்த நிதி (ரூ)
1.	மாநில அரசு	திட்டத்தில் சேராதது	143.1
2.	பல்கலைக்கழக மானியக் குழு, புதுடெல்லி	பல்கலைக்கழக மானியக்குழு – சிறப்பு உதவி திட்டம் (SAP) – துறையில் ஆராய்ச்சி ஆதரவு - நிலை I	57.00
3.	டி எஸ்டி, புதுடெல்லி	அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை (DST-FIST) – கல்வி நிலையங்களில் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு நிதி வழங்குதல்	48.50
4.	டிபிடி, புதுடெல்லி	பருவகால மாற்றத்திற்கு ஏற்ப உயிர் தொழில் நுட்பத்தின் மூலம் அதிக வெட்ப நிலையை தாங்கும் நெல் இரகங்களை உருவாக்குதல்	37.09
5.	பல்கலைக்கழக மானியக் குழு, புதுடெல்லி	ஆக்ஸிஜனேற்ற தகைவு பொறுத்தமைவு மூலம் இ.எம்.எஸ் நெல் சடுதிமாறிகளை தெரிவு செய்தல் வழியாக உவர் நிலத்தை தாங்கி வளரக்கூடிய நெல்லினை உருவாக்கல்	10.70
6.		திருப்பூர் மென் பின்னல் துணி தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் நீரில் உள்ள கன உலோகம் மற்றும் மற்ற விஷ மாசுபடுத்தும் காரணிகளை நன்செய் கட்டமைப்பில் புல்வகைகள் மூலம் வேர் மண்டல தொழில் நுட்பம் வழியாக உயிர் நீக்கம் செய்தல்	8.28
7.		வாழை மற்றும் மாம் பழத்தில் 1-எம்.சி.பி தொழில்நுட்பம் மூலம் பழங்கள் கெடாமல் இருக்கும் காலம் மற்றும் தரத்தினை மேம்படுத்துததல்	11.26
8.		உளுந்தில் உயர் மட்ட கரியமிலவாயு மற்றும் வெப்பநிலைகளுடன் கூடிய இடைவினைகளால் ஏற்படும் கால நிலை மாறுபாடுகளுக்கான பயிர் துலங்கள் ஆய்வு	7.70
9.		மணிச்சத்து குறைப்பாட்டு நிலையில் சோயா மொச்சை வரிசைகளை வினையியல் மற்றும் மூலக்கூறியல் மூலம் வகைப்படுத்துதல்	11.06

10.	பாயர் கிராப் சயின்ஸ்	தக்காளி. வாழை மற்றும் பப்பாளியில் ப்ளோரோஃபைரம் மற்றும் டியூகோனசோல் ஆகியவற்றால் அறுவடைக்கு பின் ஏற்படும் வினையியல் மாற்றங்கள்.	8.06
11.	பாயர் கிராப் சயின்ஸ்	வெங்காயம், நிலக்கடலை மற்றும் மிளகாயில் நேடிவோ 75 WG (டிரைப்ளோ ஆக்சிஸ்ரோபின் 25 சதம் + டியூபுகோணசோல் 50 சதம்) ஆல் ஏற்படும் வினையியல் மாற்றங்கள்.	15.08
12.	பாயர் பயோ சயின்ஸ்	ஒட்டு நெல் (Arize) இரகங்களில் வறட்சியில் அதிக மகசூல் பெறுவதற்கான வினையியல் மதிப்பீடு	11.81
13.	ரோம் அண்டு உறாஸ்	1- எம்சிபி- யினால் நெற்பயிரில் ஏற்படும் பயிர் வினையியல் மாற்றங்கள் பற்றிய ஆய்வு	33.49
14.	இ ஐ டி பாரி	பயிர் வினை ஊக்கிகளால் (PGR) நெல், கரும்பு மற்றும் தக்காளி பயிர் ஏற்படும் தாக்கத்தினை மதிப்பிடுதல்	8.06
15.	பாயர் கிராப் சயின்ஸ்	திராட்சையில் எத்திரல் மூலம் பூ பிடித்தல் மற்றும் பழங்கள் பழுத்தல் பற்றிய ஆய்வு	4.54
16.	விசிஎஸ்	பயிர் பூஸ்டர்கள்	83.14

பயிற்சி / கருத்தரங்கு பங்குகொண்டவை

வ. எண்	பயிற்சியின் பெயர்	தேதி	வழங்குபவர் மற்றும் முகவரி	பங்கு பெற்றவரின் பெயர் மற்றும் பதவி
1.	அறுவடைக்கு பின் செய்யப்படும் ஆய்வுகள், கல்வி மற்றும் விரிவாக்கம் 3வது ஆசிய பசுபிக் கருத்தரங்கு.	06.12.2014 - 05.12.2014	பிஐஏ இ பி, ஹோசீ மின், வியட்நாம்.	முனைவர் பி. ஜெயக்குமார், பேராசிரியர் மற்றும் தலைவர்

2.	வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான பயிர் வினை ஊக்கிகள் மற்றும் உரங்களில் (Nutrients) ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றத்திற்கான தேசிய கருத்தரங்கு	16.04.2014	வேளாண்மை கல்லூரி, கலவை	முனைவர் பி. ஜெயக்குமார், பேராசிரியர் மற்றும் தலைவர்
3.	பருவகால மாற்றத்தை தாங்கி வளரும் தன்மை - பினோடைபிங், பினோமிக்ஸ் மற்றும் ஜீன் டிஸ்கவரி	14.07.2014 - 03.07.2014	இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையம், புதுடெல்லி	முனைவர் பி. பூமிநாதன், உதவிப்பேராசிரியர் மற்றும் முனைவர் எ. செந்தில், உதவி பேராசிரியர்
4.	தேசிய பயிர் வினையியல் கருத்தரங்கு	23.11.2014 - 5.11.2014	பயிர் வினையியல் துறை, ஒடிசா வேளாண்மை பல்கலைக்கழகம்	முனைவர் பி. பூமிநாதன், உதவி பேராசிரியர்

உள் கட்டமைப்பு வசதிகள் (உபகரணங்கள்) உருவாக்கியது

வ. எண்	கட்டமைப்பின் பெயர்	நிதி நிறுவனம்	திட்டத்தின் பெயர்	மொத்த நிதி (ரூ. இலட்சத்தில்)
1	போர்டபிள் போட்டோ சின்தசிஸ் சிஸ்டம்	யுஜிசி, டெல்லி	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு – சிறப்பு உதவி திட்டம் (SAP) - துறையில் ஆராய்ச்சி ஆதரவு - நிலை I	22.00
2.	லீப் ஏரியா மீட்டர்			08.00
3.	ஆஸ்மோ மீட்டர்			06.00
4.	குளோரோபில் புளோரோசென்ஸ்			12.00
5.	ஆக்சிஜன், கார்பைன்டை ஆக்ஸைடு அனலிஸர்	யுஜிசி, டெல்லி	வாழை மற்றும் மா பழத்தில் 1-எம்.சி.பி தொழில்நுட்பம் மூலம் பழங்கள் கெடாமல் இருக்கும் காலம் மற்றும் தரத்தினை மேம்படுத்துததல்	2.50

வளங்குன்றா அங்கக வேளாண்மைத் துறை

நோக்கங்கள்

- அங்கக வேளாண்மை சார்ந்த அடிப்படை மற்றும் செயல்முறை ஆய்வுகளை மேற் கொள்வது.
- மண்வளம், பல்லுயிரியம் மற்றும் சுற்றுச் சூழல் சமநிலை பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றி ஆய்வு செய்தல்.
- பயிர்களின் வளங்குன்றா உற்பத்தி திறனுக் கான பயிர் சார்ந்த சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.
- அங்கக வேளாண்மை தொடர்பான கல்விப் பாடத்திட்டங்களைத் தயாரித்து வழங்குதல்.
- வளங்குன்றா அங்கக வேளாண்மை தொடர் பான பகுப்பாய்வு மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- அங்கக வேளாண்மை பற்றிய விழிப் புணர்வை விரிவாக்கப் பணிகளின் மூலம் ஏற்படுத்தி தொழில்நுட்பங்களை பயனுள்ளதாக்குதல்.

ஆராய்ச்சித் திட்டங்கள்

- அங்கக இரசாயன மற்றும் ஒருங்கினைந்த உற்பத்தி முறைகளை மதிப்பீடு செய்தல்
- முக்கிய பயிர்களின் பல்வேறு இரகங் களை அங்கக வேளாண்மை முறையில் பயிரிடும் போது ஏற்படும் மாற்றங்களை மதிப்பீடு செய்தல் – நெல்
- ஒருங்கினைந்த அங்கக வேளாண்மை முறைக்கான மாதிரியை உருவாக்குதல்
- அங்கக உரங்களை இட்டு நீண்டகால சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நெல் அடிப் படையிலான பயிரியல் முறை கண்டறிதல்
- சுற்றுசூழலுக்கு உகந்த பூச்சிக்கொல் லிகளை பயன்படுத்தி அங்கக நெல் உற்பத்தியில் பூச்சிகளை கட்டுப்படுத் துவதை மதிப்பீடு செய்தல்
- திட்டத்தின் கீழ் திறன் மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் நிலங்களில் செயல் முறை விளக்கம் மேற்கொள்ளுதல்

உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்

- உயிர் உரங்கள் மற்றும் அங்கக உரங் களுக்கான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்
- பூச்சி மேலாண்மைப் பூங்கா
- பசுந்தாள் உரப்பயிர்கள் பூங்கா
- ஒருங்கினைந்த அங்ககப் பண்ணைத் திட்டத்திற்கான மாதிரி
- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம் பஞ்சகவ்யா செயல்முறை விளக்க மாதிரி
- மண்புழு உரம் தயாரிப்பதற்கான பல்வேறு முறைகள்

எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள்

- அங்கக வேளாண்மைத் தொடர்பான ஒரு நாள் கட்டணப் பயிற்சி (பிரதி மாதம் 7ம்தேதி) விவசாயிகள், அரசு சாரா நிறுவனங்கள், பங்குதாரர்கள் மற்றும் பொது மக்களிடையே அங்கக வேளாண்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல். கட்டணப் பயிற்சி (கட்டணம்- ரூ .500/- விவசாயி)
- அங்கக இடுப்பொருட்களைத் தயாரித்து பயன்படுத்த பயிற்சி அளித்தல்.

- கம்போஸ்ட் உரம், மண்புழுஉரம் மற்றும் உயிர் உரம் தயாரித்தல் பற்றிய செயல் முறை விளக்கம் அளித்தல்.
- மற்ற பயிற்சி திட்டங்கள் (திட்டத்திற்கன நிதி- ரூ 1.2 லட்சம்) மாநில தோட்டக்கலை திட்ட பணியின் கீழ் கேரளாவைச்சார்ந்த விவசாயிகள் மற்றும் அலுவலர்களுக்கு அங்கக வேளாண்மை தொடாபான பயிற்சி அளித்தல்.
- தமிழ்நாடு சிறையில் உள்ள சிறைவாசிகளை அங்கக வேளாண்மையில் ஈடுபடுத்தி அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல்
- தமிழ்நாட்டில் உள்ள பத்து திறந்த நிலை சிறைச்சாலைகளில் அங்கக வேளாண்மையை விருத்தி செய்தல்.
- சிறைவாசிகளுக்கு அங்கக வேளாண்மை பயிற்சியளித்து புனர்வாழ்வு அளித்தல்.
- அங்கக வேளாண்மை பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.
- பல்துறை அணுகுமுறையின் மூலம் அங்கக வேளாண்மையைப் பற்றி ஆய்வு, கற்பித்தல் மற்றும் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளுதல் மேலும் உயிரி இடுபொருட்கள் மற்றும் அங்கக பொருட்களை உற்பத்தி செய்து தரத்தினை மதிப்பீடு செய்தல்.

செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்டத்திற்கான நிதி (ரூ. இலட்சத்தில்)
1.	இந்திய அரசாங்கம் - தேசிய வளங்குன்றா வேளாண்மை இயக்கம் - உயிர்உரங்கள் மற்றும் அங்கக உரங்களுக்கான புதிய தரக்கட்டுப் பாட்டு ஆய்வகம்அமைத்தல்	85.00
2.	இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் தொடர்பான அங்கக வேளாண்மை இணைப்புதிட்டம் நான்கு கள ஆய்வு சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.	16.00
3.	இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம்-பழங்குடியினர் மேம்பாட்டுக்கான திட்டம் - தமிழ்நாட்டின் பழங்குடி விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்	5.00
4.	பகுதி – II திட்டம் அங்கக வேளாண்மைக்கான ஆய்வு கூடக் கட்டிடம் அமைத்தல்	1200
5.	பகுதி – II திட்டம் - வளங்குன்றா பயிர் உற்பத்தி திறன் மேம்பாட் டிற்கான சிக்கன வேளாண்மை	25.95

பண்ணை மேலாண்மைத் துறை

பண்ணை மேலாண்மைத் துறை 1906 -ஆம் ஆண்டு மத்திய பண்ணை என்ற பெயருடன் துவங்கப்பட்டது. இது வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயமுத்தூரில் அமைக்கப்பட்ட மிகப்பழமையான பண்ணை ஆகும். மத்திய பண்ணையானது உழவியல் துறையின் அங்கமாக இருந்து மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிகளுக்கு வழங்கிய ஆக்கப்பூர்வமான அறிவியல் சார்ந்த பங்களிப்பின் வாயிலாக வேளாண்மை பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் முக்கிய பங்கு வகித்தது. கடந்த 14.02.2003 அன்று உழவியல் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு கால்நடை துறையுடன் இணைந்து மத்திய பண்ணை பிரிவாக உதயமானது. கிழக்குப்பண்ணை, நன்செய் பண்ணை மற்றும் மத்திய பண்ணை என மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. மத்திய பண்ணை துறையானது பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பல்வேறு ஆராய்ச்சிகளை எளிதாக்குகிறது. மத்திய பண்ணை 01.04.2010 அன்று பண்ணை மேலாண்மை துறையாக மாற்றப்பட்டு பயிர் மேலாண்மை இயக்குனரகத்தின் கீழ் இயங்கும் ஒரு துறையாக மேம்படுத்தப்பட்டது.

நோக்கங்கள்

- பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிகளை செயல்படுத்துதல்
- புதிய பயிர் உற்பத்தி தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்குதல்
- தரமான நெல், மக்காச்சோளம் மற்றும் பசுந்தாள் உர விதைகளை உற்பத்தி செய்து வழங்குதல்
- இளங்கலை வேளாண் மாணவர்களுக்கு கற்பித்தல் மூலம் வருமானம் ஈட்டும் திட்டத்தினை செயல்படுத்துதல்
- வேளாண் மேற்பார்வையாளர்களுக்கு முக்கிய பயிற்சிகளை அளித்தல்.

2014-15 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட ஆராய்ச்சி திட்டங்கள்

வ. எண்	தலைப்பு	பங்கெடுத்த ஆராய்ச்சியாளர்கள்	தேதி	செலவு (ரூபாய் இலட்சத்தில்)
1	துணிகர முதலீடு – விதைகள், நாற்றுகள், தீவன பயிர்கள் மற்றும் கால்நடைகள் உற்பத்தி மற்றும் விற்பனை	தலைமை ஆய்வாளர் முனைவர் சி.ஜெயந்தி, இணை-தலைமை ஆய்வாளர்கள் முனைவர் ஏ.பி.சிவமுருகன் முனைவர் எஸ்.டி.சிவகுமார் முனைவர் ஏ.அழகேசன்	01.04.2014 முதல் 31.03.2015 வரை	3.00

2	துணிகர முதலீடு -மக்கும் குப்பைகளிலிருந்து தரமான இயற்கை உரம் தயாரித்தல்	தலைமை ஆய்வாளர் முனைவர் சி.ஜெயந்தி, இணை-தலைமை ஆய்வாளர்கள் முனைவர் ஏ.அழகேசன் முனைவர் ஏ.பி.சிவமுருகன் முனைவர் எஸ்.டி.சிவகுமார்	01.04.2014 முதல் 31.03.2015 வரை	3.00
3	சுழல் நிதி – இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் முழு நிதி உதவி வழங்கிய திட்டம் வேளாண் பயிர்களில் விதை உற்பத்தி	தலைமை ஆய்வாளர் முனைவர் சி.ஜெயந்தி, இணை-தலைமை ஆய்வாளர்கள் முனைவர் எஸ்.டி.சிவகுமார் முனைவர் ஏ.பி.சிவமுருகன் முனைவர் ஏ.அழகேசன்	01.04.2014 முதல் 31.03.2015 வரை	2.50

செயல் விளக்கங்கள்

வ. எண்	நாள்	செயல் விளக்கம்	பயனடைந்தவர்கள்
1.	27.05.2014 06.03.2015	மானாவாரிக்கான ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் (2)	அரியலூர் மாவட்ட விவசாயிகள் மூன்றாம் ஆண்டு வேளாண்மை இளங்கலை மாணவர்கள், கலவை
2.	09.06.2014 24.06.2014	ஆற்றுப் படுகைகளில் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் (2)	வடிகால் பகுதி கூட்டமைப்பு விவசாயிகள்
3.	10.06.2014 20.06.2014	மண்புழு உரஉற்பத்தி (2)	வடிகால் பகுதி விவசாயிகள் கூட்டமைப்பு, ஈரோடு
4.	10.06.2014 17.06.2014 19.06.2014	நன்செய் பண்ணை மற்றும் கிழக்குப் பண்ணையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பண்ணைத்திட்ட மாதிரி திடல் (3)	
5.	20.06.2014	ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டம்	
6.	23.06.2014	ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டத்தில் தீவனப்பயிர்கள்	கால்நடை மருத்துவர், சென்னை
7.	25.06.2014	நன்செய் பண்ணை ஒரு பார்வை	இந்தியன் பப்ளிக் பள்ளி, கோவை

8.	20.08.2014	வடிகால் பகுதி மேலாண்மை	வடிகால் பகுதி கூட்டமைப்பு விவசாயிகள்
9.	31.10.2014	ஒருங்கிணைந்த பண்ணையத்திட்டம் குறித்த விவசாயிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கான கலந்துரையாடல்	ஒருங்கிணைந்த பண்ணையத்திட்ட விவசாயிகள், வேளாண் விரிவாக்க இயக்ககம்
10.	06.11.2014	மானாவாரி மற்றும் இறவைப் பகுதிகளுக்கேற்ற ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டம்	முதலாம் ஆண்டு பட்டுப்பூச்சி வளப்பு இளநிலை மாணவர்கள், மேட்டுப்பாளையம்
11.	20.11.2014	இறவைப் பகுதிகளுக்கேற்ற ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டம்	பெண்கள் சுய உதவிக்குழு, சேடப்பட்டி
12.	03.12.2014 05.12.2014 08.12.2014 06.03.2015	இறவைப் பகுதிகளுக்கேற்ற ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டம் (4)	மூன்றாம் ஆண்டு வேளாண்மை இளங்கலை மாணவர்கள், பெரம்பலூர் நாமகிரிப்பேட்டை வட்ட விவசாயிகள் மோகனூர் வட்ட விவசாயிகள் நாமகிரிப்பேட்டை வட்ட விவசாயிகள் வேலூர் மாவட்ட விவசாயிகள்
13.	30.01.2015	மேம்படுத்தப்பட்ட வள மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த பண்ணையம்	கேஃப்டா பயிற்சியில் பங்கு பெற்ற ஆராய்ச்சியாளர்கள்

பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்கேற்றவை

ஆராய்ச்சியாளர் பெயர்	திட்டம்	நாள்	இடம்	பொறுப்பாளர்
முனைவர் சி.ஜெயந்தி பேராசிரியர் மற்றும் தலைவர்	வேளாண்மை மற்றும் அது சார்ந்த ஆராய்ச்சிகளை ஒருங்கிணைத்தல் எதிர்கால சாத்தியங்களுக்கு முன்னுரிமை அளித்தல் குறித்த சர்வதேச கருத்தரங்கு	06.11.2014 - 09.11.2014	பிசிகேவி, கல்யாணி, மேற்கு வங்காளம்	பயிர் மற்றும் களை அறிவியல் சங்கம்

முனைவர் சி.ஜெயந்தி பேராசிரியர் மற்றும் தலைவர்	நிலைத்த வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான வேளாண் பன்முகத்தன்மை குறித்த தேசிய கருத்தரங்கு	18.11.2014 - 20.11.2014	பஞ்சாப் வேளாண் பல்கலைக்கழகம், லூதியானா	இந்திய உழவியல் சங்கம்

கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் துறை

முக்கிய நோக்கம் மற்றும் பணிகள்

பல்கலைக்கழகத்திலுள்ள பல்வேறு வேளாண்மைக் கல்வி பாடப் பிரிவு பயிலும் மாணவர்களுக்கு கால்நடை மருத்துவ அறிவியல் பயிற்றுவித்தல் மற்றும் மாதிரி கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகளை பராமரித்தல் முக்கிய நோக்கங்களாகும். மேலும், பல்கலைக்கழகம் மற்றும் தனியார் பராமரித்து வரும் கால்நடைகளுக்கு மருத்துவம் மற்றும் செயற்கை முறை கருவூட்டல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

பயிற்சிகள் கலந்துகொண்டவை

வ, எண்	தலைப்பு	தேதி	பங்கு பெற்றவரின் பெயர் மற்றும் பதவி
1	விர்கான் 2014	18.12.2014 - 20.12.2014	உதவிப்பேராசிரியர்கள் முனைவர் எம். சபாபதி முனைவர் எஸ். சித்ராதேவி முனைவர் எம். திருநாவுக்கரசு

4.4. தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில் நுட்பவியல் மையம்

இந்த மையமானது தாவர உயிர் தொழில் நுட்பவியல், தாவர மூலக்கூறுவியல் மற்றும் தாவர உயிர் தகவலியல், உயிர் வேதியியல் ஆகிய துறைகளை கொண்டுள்ளது.

ஆராய்ச்சிகள்

தாவர உயிர் தொழில் நுட்பவியல் துறையில், நெல், மக்காச்சோளம், பருத்தி, பயறு, கத்திரிக்காய் ஆகிய பயிர்களில் பூச்சி நோய் மற்றும் பிற இடர்பாடுகளை தாங்கி வளரக்கூடிய தன்மை, ஊட்டச்சத்து மேம் பாடு ஆகியவற்றை மரபுப் பொறியியல் மற்றும் மூலக்கூறு குறியீட்டு தேர்வு ஆகிய முறைகளின் மூலம் பயிர் மேம்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறைந்த பருவகாலம் (115, 120 நாட்கள்) கொண்ட நெல் வகையான ஏடி (பயோ) 09518 (எடிடீ 43 x ஐஆர்பீபீ 60-5), மரபணு குறியீடுகள் உதவி மூலமான கலப்பின முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஏடிடீ 43 இரகத்தை விட 9.1 சதவீதம் அதிக மகசூல் தரவல்லது. மேலும், இதில் பாக்டீரிய இலைக்கருகல் நோய்க்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட மரபணுக்கள் (எக்ஸ் ஏ5, எக்ஸ் ஏ3, எக்ஸ் ஏ21) இருப்பதால் இலைக்கருகல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டதாகவும் உள்ளது.

மானாவாரி சூழ்நிலைகளில், வறட்சி, மகசூலுக்கு எதிரான முக்கிய காரணியாக உள்ளது. ஐஆர் 20ஐக் கொண்டு மறுகலப்பு முறையில் உருவாக்கப்பட்ட சிடி 9933, ஆழமான மற்றும் தடிமனான வேர்களுக்கான அளவீடு மரபணு பண்புகளைக் கொண்டுள்ளது. இவற்றிலிருந்து அதிக மகசூல் தரவல்ல வகைகள் தேர்வு செய்யப்பட்டு அவற்றில் வறட்சி தாங்கு திறனானது மானாவாரி நிலங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

சி.பீ.எம்.ஏஸ். 14065 என்ற மத்திய பருவகால (130-135 நாட்கள்) நெல் வகையானது குறுகிய மற்றும் மெல்லிய நெல் மணிகளைக் கொண்டுள்ளதோடு பீபிடி 5204 ரகத்தினைக் காட்டிலும் அதிக மகசூல் (5616 கிகி/ எக்டர்) கொண்டதாகவும் உள்ளது. மேலும் இதில் 'அபோ' இரகத்திலிருந்து பெறப்பட்ட வறட்சிக்கெதிரான இரண்டு அளவீடு மரபணு பண்புகளும் உள்ளன.

வெள்ளம் தாங்கி வளரும் தன்மை கொண்ட கோ 43 என்ற ரகமானது மூலக்கூறு குறியீடுகளின் உதவி மூலமான கலப்பின முறையில் உருவாக்கப்பட்டு பல் கள பரிசோதனையில் 2014-15இல் ஆய்வு செய்யப்பட்டது. ஏழு நாட்கள் நீரில் மூழ்கிய நிலையிலும், 'கோ 43 சப் 1' அதிக மகசூலைக் (5500 kg/ha) கொடுத்தது.

உவர்தன்மை என்பது நெல் சாகுபடியில் மற்றொரு மகசூலுக்கெதிரான காரணி ஆகும். 'சால்டால்' என்ற மரபணு மூலம் தரம் உயர்த்தப்பட்ட வெள்ளைப் பொன்னி, 2014-15 ஆம் ஆண்டில் பல் கள பரிசோதனை ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. இது உவர் நிலங்களில் 16.6 சதவிதம் அதிக மகசூலைத் தந்தது.

கவுனி என்ற பாரம்பரிய நெல் ரகமானது அதன் ஊட்டச்சத்து மற்றும் மருத்துவப் பண்புகளுக்கு பெயர் பெற்றது. ஆனால் இது குறைந்த மகசூல், சூரிய ஒளி கால உணர்வு மற்றும் சாய்தல் காரணமாக விவசாயிகள் பயிரிடமுடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே இந்த குறைகள் இல்லாத மேம்பட்ட கவுனி நெல் ரகம் உருவாக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகள் பங்கு பெற்ற பயிற்சிகள் / கருத்தரங்குகள்

வ. எண்	கருத்தரங்கின் தலைப்பு மற்றும் நடைபெற்ற இடம்	தேதி	கலந்து கொண்டோரின் பெயர் மற்றும் பதவி
1.	கோயம்புத்தூரில் நடந்த கதிரியக்க பாதுகாப்பு மற்றும் கதிரியக்க ஐசோடோப்புகளின் பயன்பாடுகள் குறித்த குறுகிய கால பாடத்திட்டம்.	04.08.2014 - 14.06.2014	முனைவர் வி.பி. சந்தான கிருஷ்ணன், உதவிப் பேராசிரியர்
2.	பெங்களூரில் நடைபெற்ற என்ஜீ பீடி கருத்தரங்கம்	17.11.2014 - 19.11.2014	முனைவர் பீ. ராஜகோபால், உதவிப் பேராசிரியர், முனைவர் ஆர். ஞானம், பேராசிரியர்
3.	கோயம்புத்தூர், பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தில் நடைபெற்ற புரத அமைப்பு பற்றிய ஆய்வு என்ற தலைப்பில் கருத்துரை	18.11.2014	முனைவர் என். சரண்யா, உதவிப் பேராசிரியர்
4.	கோயம்புத்தூர், பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபயில் மையத்தில் நடைபெற்ற இலக்குடைய முழு மரபணு மாற்றியமைப்பு என்ற தலைப்பில் கருத்துரை	21.11.2014	முனைவர் டி. சுதாகர், பேராசிரியர் மற்றும் தலைவர், தாவர உயிர் தொழில் நுட்பவியல் துறை
5.	கோயம்புத்தூர், பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தில் நடைபெற்ற அடுத்த தலைமுறை மரபணு வரிசை படுத்தல் என்ற தலைப்பில் கருத்துரை	25.11.2014	முனைவர் எம். ஜெயகாந்தன், உதவிப் பேராசிரியர்
6.	கோயம்புத்தூரில் நடந்த உயிரிய தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் பயிர் மேம்பாடு என்ற தலைப்பில் கருத்துரை.	27.11.2014	முனைவர் என். பாரதி, உதவிப் பேராசிரியர்
